உ

பொல்லா பிள்ளையார் துணை

திருநாரையூர்ப் புராணம்

மிகு ஸ்ரீ சௌந்திரேசுவரர்

ரயூர்.

ு முத்தியடைந்த திருத்தலம்)

Acc. No: 623
Q1:38

2040
கோவிலூர்-630 307
31-1

உ

பொல்லாப் பிள்ளையார் துணை

திருநாரையூர்ப் புராணம்

கோவிலூர் ஆதீனம்
Acc-No: 623
கோவிலூர்-630 307

14–9–1984 ல் நடைபெற்ற
திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு
விழா வெளியீடு

முதற் பதிப்பு : செப்டெம்பர் 1984

இந்நூல் கிடைக்குமிடம் :
திரு. க. சொக்கலிங்கம்
53, கீழ வீதி,
திருநாரையூர்,
வழி லால்பேட்டை - 608 303.

விலை : ரூ. 6/-

பாரதி பிரிண்டர்ஸ், சென்னை-600 001.

கோவி ... 630 307

உ
பொல்லாப் பிள்ளையார் துணை

31-1

பதிப்புரை

திருவளர் சைவம் எனும் பெரும் பயிர் தழைத்து உலகெலாம் புரந்தருளுவான் வேண்டி, திருமுறைகளைத் திருநெறிய பெருநம்பி எனத்தகும் நம்பியாண்டார் நம்பிகளின் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தியருளிய பொல்லாப் பிள்ளையாரையும், திரிபுரசுந்தரி உடனுறை சுந்தரேசப் பெருமானையும் தம்மகத்தே கொண்டு விளங்கும் திருநாரையூர்த் திருத்தலத் திருப்பணியைத் திருவருளால் தொடங்க முற்பட்டபோது, இத்தலத்துக்குரிய தலவரலாறு ஒன்று அச்சிட வேண்டும் என்ற எண்ணம் திருவருளாலெழுந்தது. அந்நிலையில் 1935 ல் திருநாரையூர்த் திருத்தலத் திருக்கோயில் திருப்பணி நடைபெற்ற காலை வெளியிடப்பெற்ற **திருநாரையூர்ப் புராணத்தை** (தமிழ்மொழிபெயர்ப்பு)ச் சற்றுச் சுருக்கி வெளியிடலாம் என நினைத்த காலை, அப்பணியைத் திருமுறைச் செல்வர், பேராசிரியர், வெள்ளை வாரணனுர் அவர்கள் தம் பொறுப்பில் ஏற்று, திரு. சி. செல்வத்தாண்டவன், எம். ஒ. எல். அவர்கள் துணையுடன் எழுதிக் கொடுத்தருளினுர்கள். அவர்கள் இருவர்க்கும் என் நன்றிகலந்த வணக்கங்கள் என்றும் உரியன.

தல வரலாறு கிடைப்பினும் பதிப்புச் செலவுக்கு உரியவரை யான் எண்ணியிருந்த காலையில், பொல்லாப் பிள்ளையார் திருவருளால் காட்டக் காணும்பேறு பெற்றேன். தாயகம் தமிழகமாயினும், ஊழியம் மேலைநாட்டிற் பெற்றும், தம் பெயரை எக்காரணம் கொண்டும் வெளியிடலாகாது என்ற உறுதிமொழியுடன் சற்றேறப்ப ரூ. 6000 க்கும், மேற்பட்ட தொகையை வழங்கியதோடன்றி, திருக்கோயிலில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரக் கற்பதிப்புக்களை அமைப்பதற்காக ரூ. 5000/- ஐயாயிரத்தையும் உடனடியாக வழங்கிய உத்தமர்; தம் வாழ்நாள் முழுவதிலும் தாம் பெற்ற வாழ்வியல் வெற்றிகளை - நற்பேறுகளை இறைவன் நேர்நின்று தந்தருளியதாகவே எண்ணும் தெய்வத்திறம் பேணும் திண்மையாளர். இறைவன் திருத்தாள் மலர்களைச் சிக்கெனப் பிடிப்பதுவே இன்பக் காலத்தும் துன்பக்காலத்தும் ஏற்றம்

தருவது என்பதைக் குறிக்கோளாகக்கொண்ட திருநெறிச் செல்வர் அவர்கள் ஆண்டுதோறும் விநாயகப் பெருமான்மேல் தம் வாக்காகவே பாக்கள் பலபுனைந்து, அச்சிட்டு இலவசமாக வழங்கும் நற்பணியாளர் ஆவார். அன்னவர்தம் திருமுறை தவழும் நெஞ்சத்துக்கும் தொண்டுக்கும் என்றென்றும் என் நன்றிகலந்த நல்வணக்கங்கள்.

திருமுறைகளைக் கல்வெட்டாகப் பதிப்பித்ததற்கும், தல வரலாற்றை அன்பர்கள் திருக்கைகளில் வழங்குவதற்கும் தாமே தனித்து நின்று பொருளுதவி செய்த அப்பேருளர் தம் வாழ்நாள் முழுவதிலும் தனித்து நின்றே வாழ்வியல் வெற்றி பெற்றவராவர். அவர்தம் அகத்துறை விநாயகப் பெருமானை வணங்கி, இந்நாலுக்கு ஆசியுரை அருளிய திருப்பனந்தாள், காசிவாசி ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், திருவடியிணைகளைப் பன்முறையும் வணங்கி, வழிபடுகின்றேன்.

இந்நாலுக்கு அறிமுகவுரை எழுதிய சிவத்திருவாளர், பேராசிரியர் கு. வரதராசனார் அவர்களுக்கும், திருமுறைகளின் அடிப்படையில் திருநாரையூர்த் திருத்தல வரலாறு எழுதிய டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்களுக்கும் என் நன்றி உரியன.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த சென்னை பாரதி அச்சகத்தார்க்கு என் நன்றிகலந்த நல்வணக்கங்கள்.

53, கீழ வீதி,
திருநாரையூர் - 608 303.

இங்ஙனம்,
க. சொக்கலிங்கம்



அருள்மிகு ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார் என்கிற
சுயம்பிரகாச சுவாமி
திருநாரையூர்.

சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்.

திருப்பனந்தாள்—612504
(தஞ்சை மாவட்டம்)

தேதி: 10-5-1984.

வாழ்த்துரை

திருநாரையூர்த் தல புராணம், தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இருந்த வடமொழித் தல புராணத்தைத் தமிழில் மொழி பெயர்த்து அமைக்கப் பெற்றதாகும். இந்த நூலினை வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயர் ஆவர். இம்மொழி பெயர்ப்பினை வடமொழி மூலத்தோடு ஒப்பிட்டுச் செம்மை செய்வித்தவர்கள் சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். இப்புராணம் திருநாரையூர்த் திருப்பணிச் செல்வர் திரு. க. வீ. சொ. அழகப்ப செட்டியாரவர்களின் பொருள் உதவி கொண்டு 1935-ஆம் ஆண்டில் (யுவஷு புரட்டாசித் திங்கள்) முதலாவதாக வெளியிடப்பட்டது. இப்பொழுது இப் புராணம், சிவநெறிச் செல்வர் திரு. குப்புசாமி அவர்கள் பொருள் உதவியுடன் திருநாரையூர்த் திருக்கோயில் குட முழுக்கு நிறைவு விழா வெளியீடாக வெளிவருகின்றது. இதற்கு முன் திரு. செட்டியார் அவர்களால் வெளியிடப்பட்ட திருநாரையூர்த் தல புராணம் வடமொழிப் புராணத்தின் நேர் மொழி பெயர்ப்பாக அந்நூற் சுலோகங்களின் எண்ணிக்கையுடன் வெளியிடப் பெற்றுள்ளது. இப்பொழுது வெளி வரும் இந்நூல் காலத்திற்கேற்ற முறையிலும் எல்லார்க்கும் விளங்கும் முறையிலும் அதன் சுருக்கமாக வெளியிடப் பெற்றுள்ளது. பழைய நூலில் உள்ள விளங்காத வடமொழிச் சொற்களை மாற்றியும் இக்காலத்திற்குப் பொருந்தாத சில வற்றை நீக்கியும் இதனைச் சுருக்கி எழுதி உதவியவர் மேலைச் சிவபுரி, கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் முன்னாள் முதல்வர், திரு. சி. செல்வத்தாண்டவன், எம். ஓ. எல்., ஆவார்.

திருநாரையூர்த் தல புராணமாகிய இந்நூல் பழமைக்குப் பழமையும் புதுமைக்குப் புதுமையுமாகிய சைவ சமயக் கருத்துக்களையும் சைவ சித்தாந்தத் தத்துவ உண்மைகளையும் புலப்படுத்தும் நிலைமையில் சிறப்பாக அமைந்துள்ளது. சைவத் திருமுறைகள் வெளிவருவதற்கு முன்னின்று அருள் புரிந்த திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரது சிறப்பும், செல்வத் திருநாரையூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபாடு செய்து அம்முதல்வனது திருவருளால் இம்மை மறுமை நலங்களையும் செம்மை நலச் சிறப்பாகிய வீடு பேற்றையும் பெற்று உய்ந்த மக்கள், தேவர், பறவை, விலங்கு முதலிய மன்னுயிர்களின் சிறப்பும், 'வாழ்க அந்தணர்' என்னும் திருப்பாசுரத்தில் 'எல்லாம் அரன் நாமமே சூழ்க' என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்தவண்ணம் உயர்திணை அஃறிணையாகிய இருதிணை உயிர்களும் தாம் எடுத்த பிறப்பிலேயே எல்லாம் வல்ல சிவபெருமானை வழிபட்டு வீடுபேறு அடைதற்குத் தகுதி உடையவைகளே என்ற உண்மையும் இத்தல புராணத்தில் புலப்படுத்தப் பெற்றுள்ளமை இந் நூலின் சிறப்பியல்பாகும்.

இந்நூலினைச் சுருக்கி எழுதி உதவிய திரு. சி. செல்வத் தாண்டவன் அவர்கட்கும் இந்நூல் வெளிவருவதற்கேற்ற பொருட் செலவினை உளமுவந்து ஏற்றுக்கொண்ட திரு. குப்புசாமி அவர்கட்கும் திருநாரையூர்த் திருப்பணியில் ஈடுபட்டுள்ள அன்பர்கட்கும் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க என உளமுவந்து வாழ்த்துகின்றோம்.

சுபம்.

உ

பொல்லாப் பிள்ளையார் துணை

அறிமுகம்

வித்துவான், **பெ. கு. வரதராசன்,** எம்.ஏ., பி.ஓ.எல்., பி.டி.,
தமிழ்ப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி, கிருட்டிணகிரி.

புராணம் - பழைய வரலாறு - ஒருவர் சொல்லக் கேட்ட ஒருவர் மற்றவருக்குச் சொல்ல - இவ்வாறாகப் பரவிடும் செய்தியே புராணம் ஆகும். இவ்வரலாறு எழுதப்படாமல் கர்ண பரம்பரையாக வளர்ந்தமையால் கற்பனை நிறைந்த தாகவும், ஒருவர் கூற மற்றவர் கேட்கும்போது நிகழ்ச்சி களில் சேர்க்கை நீக்கல்கள் இடம்பெறவும் வாய்ப்புண்டு. புராணம் பொய்மை நிறைந்தவையன்று. "ஸ்ரீ சிவமூர்த்தி யிடம் இவைகளைக் கேட்ட நந்திமாதேவர் சநற்குமார முனி வருக்கு உபதேசிக்க அவர் வியாசருக்கு உபதேசிக்க, வியாச பகவான் சூதர்களுக்கு உபதேசித்தனர்" என அபிதான சிந்தாமணி கூறும் (பக்கம் 1169). புராணங்கள் பதினெட்டு; உபபுராணம் பதினெட்டு. இப்புராணங்கள் கிருதயுகத்து, பிரம்ம தேவரால் பிரமமென ஒன்றாகி நூறுகோடி கிரந்தங் களாகவும், திரேதாயுகத்து இருடிகளால் கோடி கிரந்தங் களடங்கிய பதினெட்டு வகையினவாகவும், துவாபரயுகத்து வியாச பகவானால் நான்கு லட்சத்து எண்ணாயிரங் கிரந்தங் களடங்கிய பதினெண் புராணங்களாயின. இப்புராணங்கள் வியாசர் வழியாக ரோமகர்ஷணருக்கும் ரோமகர்ஷணர் சுமதி, அக்கினிவர்ச்சஸ் முதலியோருக்கும் கூற வெளிவந்தன.

இப்புராணங்கள் சர்க்கம், பிரதி சர்க்கம், மனுவந்தாரம், வம்சம், வம்சாநுசரிதம், ஸ்திதி, ரக்ஷணம், சமுஸ்தை, ஏது, ஆசிரியம் என்னும் பத்து லக்ஷணங்களையுடையன.

தலபுராணம் மேலே சொல்லப்பட்ட புராணங்களிலும் வேறானது. தலபுராணம் காலத்தால் பிற்பட்டது. இப் புராணம் எத்தலத்தைப் பற்றிப் பாடப்பட்டதோ அத்தலத் தையும் அத்தலத்தோடு தொடர்புடைய செய்திகளையும் விளக்கிக் கூறும். தலபுராணத்தில் அப்புராண ஆசிரியரின்

புலமை, கற்பனைத் திறன்களைக் காணலாம். ஒரு தலத்தைப் பற்றிய செய்திகள் வரலாறுகள் அனைத்தையும் தெரிந்துகொள்ள அத்தலப் புராணம் உதவியாக இருக்கும். திருநாரையூரைப் பற்றிய செய்திகளை முழுமையாக அறிவிக்க வல்லது திருநாரையூர்த் தலபுராணம். இப்புராணத்தை அச்சுவாகனமேற்றி, சைவ மெய்யன்பர்களின் திருக்கரங்களில் உலவவிட ஆசைப்பட்டார் திரு. எம். குப்புசாமி என்பவர். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரிடம் மிக்க ஈடுபாடு கொண்ட அன்பர் மேலைநாடுகளிலெல்லாம் பணியாற்றி ஈட்டிய பொருளில் ஒரு பகுதியைச் சைவத் தொண்டிற்கு அர்ப்பணிக்கும் அருட்செல்வர். அவர்தம் பெருமுயற்சியால் திருநாரையூர்த் தலபுராணம் வெளிவருகிறது. பெருந்தொகையினைப் பயன் கருதாது இப்புராணம் வெளிவர உதவியவர்.

இத்தல புராணத்திற்கு அரியதோர் முகவுரையினை எனதருமை நண்பர் டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதியவர்கள், எம்.ஏ., பி.ஒ.எல்., பிஎச்.டி., எழுதியுள்ளார்கள். திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் இத்தல புராணத்திற்கு ஓர் ஆசியுரையும் அருளியுள்ளார்கள். அனைவருக்கும் எனது அன்புகலந்த வணக்கங்களைக் கூறிப் புராணத்திற்கு உள்ளே செல்ல அழைக்கின்றேன்.

கிருட்டிணகிரி,
23—6—84.

தங்களன்புள்ள,
பெ. கு. வரதராசன்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி, இராஜராஜ அபயகுல சேகர சோழன்
ஸ்ரீ விநாயகர் அருளால் திருநாரையூரில்
திருமுறை கண்ட திருக்கோலங்கள்

திருச்சிற்றம்பலம்

திருமுறைகளின் வாயிலாக அறியப்பெறும் திருநாரையூர்த் திருத்தலப்பெருமை

டாக்டர். வை. இரத்தினசபாபதி
தத்துவத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

முன்னுரை

திருமுறைகள் என்பவை சிவம் என்னும் செம்பொருளை நேர்நின்று துய்த்த அருளாளர்களின் திருவருளனுபவ வெளிப்பாடுகள். திருமுறைகள் காலத்தையுங் கடந்து நின்ற பெருமையுடையவைகள் என்பது திருஞானசம்பந்தப் பெருமானால் மதுரையில் நிகழ்த்திய அனல்வாதம், புனல்வாதம் ஆகியவை மூலம் நிலைநாட்டப்பெற்ற உண்மை. தமிழக மக்களின் நல்லூழின்மை காரணமாகத் திருமுறைகள் ஓரளவே பயிலப்பெற்று, முழுமையும் பெறுதற்கு வாய்ப்பின்றியிருந்த இடைநிலைக் குறைவைத் திருநாரையூர், பொல்லாப் பிள்ளையார் திருவருள் பெற்று, இன்றுள்ள அளவில் முழுமையாகப் பெறவும், பண்ணிசை முறையில் தொகுக்கவும் ஆகிய நன்மைதரு புண்ணியச் செயல்களை நமக்காகப் புரிந்தருள வந்த அருளாளரே நம்பியாண்டார் நம்பிகள். திருநாவலூரர் எனப்பெறும் சுந்தரருக்கும் சேக்கிழாருக்கும் இடை நின்ற அருளாளராய்த் திருமுறைப்பணியை முற்றுகச் செய்தளித்த பெருமையுடையவர் நம்பியாண்டார் நம்பிகள்.

திருநாரையூரில் ஆதிசைவமரபில் பிறந்த நம்பியாண்டார் நம்பிகள் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளினால், தில்லையில் மறைவான ஓரறையில் தொகுத்து வைக்கப் பெற்றிருந்த திருமுறைகளை வெளிப்படுத்திய பெருமையாளராவர். ஓம் என்னும் பிரணவ நாயகனாகிய விநாயகப் பெருமானின்

திருவருள் பெற்று வெளிப்படுதல் என்ற மரபினுக்கிணங்க, மேலே கூறப்பெற்ற மறைவும், வெளிப்பாடும் வரலாற்று முறையில் அமைந்தன போலும்.

மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்ற சைவ சித்தாந்த சாத்திர முதல் நூல் திருவெண்ணெய்நல்லூர் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்று வெளிப்பட்டாற் போல, அருணகிரிநாதர் திருப்புகழ்பாடும் அருள் வல்லமையை அண்ணுமலையில் பெற்றிருந்தாரேனும், இடையில் பாடுதல் தேக்கமுற்றதாக, தேக்கம் நீக்கிப் பாடுதல் முறையை அவருக்கு, வயலூர்ப் பொய்யாக் கணபதியானவர் கைச்சாத் திட்டுக் கொடுத்தாற்போல, திருமுறைகளும் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் என்னும் கைச்சாத்துப் பெற்று, நம்பியாண்டார் நம்பிகள் மூலம் வெளிப்படுத்தப் பெறுவனவாயின எனக் கொள்ளல் வேண்டும். அவ்வகையில், திருமுறைப் பெருமை, திருமுறை தழுவிய அருளியல் வாழ்வு என்ற அனைத்தும் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரை யும், அவரருள் பேணிநின்று, திருமுறைகளுக்குரிய பெருமைக்கு எத்தகைய களங்கமும் வராமற் காத்துப் பேணிய நம்பி யாண்டார் நம்பிகளையும் சாரும் என்பதைத் திருமுறைச் சைவம் என்றென்றும் நன்றியுணர்வுடன் ஏற்கும் தேற்றமிகு உண்மைகளாம்.

பொல்லாப் பிள்ளையாரையும் நம்பியாண்டார் நம்பிகளை யும் தம்மகத்தே தாங்கிநின்று உலகத்துக்குத் தொண்டு செய்யவென்றளித்த திருவுடைத் திருநாரையூர்த் தலத்தைப் பற்றித் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் போற்றிக் கூறியுள்ள பெருமைகளை அறிவதும் துய்ப்பதும் தமிழக மக்களின் கடமையாகும்.

திருஞானசம்பந்தர் திருவாக்கில்...

திருநாரையூர்த் திருத்தலம் பற்றியும் அத்தலத்து இறை வனைப் பற்றியும் மூன்று திருப்பதிகங்களை அருளியுள்ளார் திருஞானசம்பந்தர். சுருங்கக் கூறின், திருநெறியத் தமிழ் நெறி என்றும் திருப்பதிகப் பெருநெறி என்றும் குருநெறி என்றும் குலவு திருமுறைத் தமிழ்நெறி என்றும் அந்நெறியின் தனித் தலைமை தாங்கி வந்து தொண்டாற்றிய உலக குருவே

ஞானசம்பந்தர் என்றும் ஆறது ஏறும் சடையான் அருள் மேவ, வீறது ஏறும் தமிழால் வழிகண்ட குருமணியே ஞான சம்பந்தர் என்றும் திருஞான சம்பந்தரை இன்னுர் என இனம் பிரித்துக்காட்டும் வகையில் அவர்மேல் ஆறு நூல்கள் பாடி யருளிய பெருமைக்கு உரியவர் நம்பியாண்டார் நம்பிகள். நம்பியாண்டார் நம்பிகளின் ஆறு நூல்கள் இல்லையானுல் திருஞானசம்பந்தரின் அருளாட்சித் திருத்தொண்டையும் அவர்தம் அவதார நுட்பத்தையும் யாராலும் புரிந்துகொள்ள இயலாமற் போயிருக்கும். அத்தகு நிலையில் உலக குருவாகத் திருப்பல்லக்கேறி, திருச்சின்னம் முழங்க அருளாட்சி செலுத் திய திருஞான சம்பந்தர் பாடிய பதிகங்கள் மூன்று.

''உரையினில் வந்த பாவம்'' எனத் தொடங்கும் பதிகம் இரண்டாந் திருமுறையிலும், ''காம்பினை வென்ற'' எனத் தொடங்கும் பதிகமும், ''கடலிடை வெங்கடு'' எனத் தொடங் கும் பதிகமும் மூன்ருந் திருமுறையிலும் தொகுக்கப் பெற் றுள்ளன.

திருஞானசம்பந்தப் பெருமான், இன்று நமக்குக் கிடைத் துள்ள வகையில், மூன்று திருப்பதிகங்களை அருளியுள்ளா ரெனில், குறைந்தது மூன்று நாட்களாவது திருநாரையூரில் தங்கி, நாரையூர்ப் பெருமானை நண்ணிநின்று வழிபட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

''சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழுதாலே போதும்'' என்ற அனுபவமும், அவ்வாறு தொழுதலேயன்றி, அவர்தம் திருப்பதிகம் சொல்லவல்லவர் தாமே ''திருவளர் செம்மையாகி அருள்பெறு மிக்கது உளது என்பர் செம்மை யினர்'' என்ற பயன் பெறுவர் எனக் கூறி முடித்தருளுகின்ருர். ''திருவளர் செம்மையாகி'' என்ற தொடருக்குத் தம் வாழ்க்கை முழுவதையும் ஈடுபடுத்தி, விளக்கவுரை அமைத் தவர் திருநாவுக்கரசரே. திருவளர் செம்மை என்பது சிவமே. சிவமேயாவர் என்ருலும் அவர்கள் சிவமொடு இணைய நின்று கொண்டிருப்பர் என்று எண்ணிவிட வேண்டா. இவ்வுலகுக்குத் திருவருளை மிகுதியாக அனைத்துயிர்களும் அனுபவிக்குமாறு செய்யும் பணியில் சிறந்து நிற்கும் செம்மையினர் ஆவர் என்ருர். திருநாரையூரில் நின்ற இறைவனை, ''எரியாய்ச் சீறிய செம்மையாகும் சிவன்'' என்றே குறிப்பிட்டருளுகின்ருர்.

எல்லா அறங்களுக்கும் மூலமாய் நின்ற பேரறம் எனப் பெறும் 'செம்மை அறம்' என நின்ற சிவன், இரண்டாம் பதிகத்தில் பாண்டரங்கக் கூத்தியற்றும் ஆடற் கோலத்த வனைத் திருஞானசம்பந்தருக்கு அருளனுபவப்படுகின்றான். நள்ளிருள் நட்டம் ஆடும் செயலால் விளையும் நன்னலம் ஓங்கும் நாரையூர் என்று நாலாம், ஏழாம் திருப்பாட்டுக்களில் அருளிச் செய்கின்றார்.

முதற் பதிகத்தில் அறத்தின் செம்மையாக நின்ற சிவன் இரண்டாம் பதிகத்தில் ஆட்டத்தினால் குறைகளை அழித்துச் செம்மை பேணுகின்றான். இவ்வகையில் அறமூர்த்தியாகவும் தானே தனிநிலைப் பொருள் எனப் பொருள் வரையறை செய்யும் புண்ணிய மூர்த்தியாகவும் நிற்கின்றான் என்றார்..

மூன்றும் பதிகத்தில், சிவன் தன் அடியார்களோடும் அம்மையோடும் நின்றான் என்றும்,

"நான் அமரும் பொருளாகி நின்றான்
திருநாரையூர் எந்தை"

என்றும் தம்முடைய மூன்றும் நிலையில் அமைந்த திருவருள் அனுபவத்தையும் அமைத்துக் கூறுகின்றார். இந்நிலையில்,

"பெண்ணில் அமர்ந்து ஒருகூற தாய
பெருமான் **அருளார்ந்த**
அண்ணல் மன்னி உறை கோயிலாகும்
மணி நாரையூர்"

என்று, அப்பெருமான் திருவருள் வடிவமாகவே நின்றுளார் என்றார். அப்பெருமானை, அவ்வூர் சென்று உடனுறைவு ஆக்கிக்கொள்ளுங்கள்; அதுவே போதும் என்றருளுகின்றார். அவ்வகையில் மூன்றும் நிலை அனுபவத்தை நாமுணரும் வகையில் தெளிய எடுத்தோதும் முறையைச் சற்றே நினைத்தால் எலும்பெலாம் உருகும் இன்பப் பெருக்கு உண்டாகும் என்பது திண்ணம்.

திருஞானசம்பந்தர் அருளும் மூன்றும் திருப்பதிகத்தில் திருநாரையூரைப் பெரியவன் இடம் என்றார்; கரவாதார் வியப்போடு பேசவும் பேணவும் நின்ற பெரியோன் இடம் என்றார்; அவன் அவ்வாறு நின்றமையால் **தேசமெல்லாம் வந்து பொருந்திப் புகழ்கின்ற செம்மையை**-அறத்தைப் பெற்ற பெருமை

யுடையது திருநாரையூர் என்றார். திருநாரையூரிற் பெருமான் அருள் ஐந்தொழில் பேணுவதைக் குறிப்பிட்டு மகிழ்கின்றார்.

திருவருளாகவும், செம்மை எனப் பெறும் அறச்செம்மலாகவும் நின்ற பெருமான் "**காலமாகி, தவமாகி, வினையின் புணர்ப்பாகி, ஞாயிறாகி, வாழியர்**" என நேர்முகப்படுத்தி அனுபவம் பெற்றபின், அவன் மைந்தனாகி நின்று ஐந்தொழில் புரியும் வகை இதுவே என்று விளக்கினார்.

ஊழியும் இன்பமும் — முறைப்படுத்தித் தரும் ஊழிக் காலமும் அதன் விளைவாம் இன்பமும் என நின்று அவ்வகையில் காலத்தோடு இணைந்து படைக்கின்றான்; உயிர்கள் உயர்வடைதற்குரிய உயர் செயலாகத் தானே நின்றும், அவைகளை நிற்க வைக்கும் தவமும் ஆக அமைகின்றான்; இதுவும் படைத்தலே. பின்னர் ஏழு இசை, இசையின் அடிப்படையில் அமையும் பொருளனுபவ இன்பம், இன்பமாய வாழ்க்கை என இவ்வாறு வரையறை செய்துகொண்டு, உயிர்களின் வினையின் வண்ணம் அவைகளை இன்பத்துறை சார் வாழ்க்கையில் புகுத்துகின்றான். இந்த ஒன்றிலேயே அவன் ஐந்தொழிலும் அமைந்தாலும், இதனைப் பொதுவாக, காத்தல் என்றே கருதுவர் சான்றோர். அடுத்து, நாழிகை முதலியவைகளாக உணரப்பெறும் 'ஞாயிறு' என்பது அறத்தின் ஆற்றல். ஞாயிறு என அறத்தின் கிழவனாக நின்று, உயிர்களைக் காத்தும் தண்டித்தும், அறக்கருணையும் மறக்கருணையும் கொண்டு நின்று தூய்மைப்படுத்துகின்றான். இது முறையே அருளாட்டினுள் அடங்கும் அழித்தல் ஆகும். எல்லா நிலையிலும் உயிர்களை வாழ்த்தியமைகிறான் ஆதலின் 'வாழியர்' எனவும் ஒவ்வொருவரும் திருநாரையூர் சென்று பெருமானைக் கண்டால், அவன் தனக்கு எவ்வாறு பணி செய்கின்றான்; தனக்கு எவ்வாறு ஐவகைத் தொழில் மேற்கொண்டு பணியாற்றுகின்றான் என்பதை நேர்நின்று ஒவ்வொருவரும் காணுமாறு ஒரு வகை அனுபவத்தை அங்கே பெறமுடியும் எனவும் அருளுகிறார் ஞானசம்பந்தர். கடவுள் நமக்காக ஐந்தொழில் செய்கிறான் என்பதை நாங்கள் நேரே பார்த்ததில்லை; அருளாளர்கள் கூறுகிறார்கள். ஆகையால் நம்புகிறோம் என்று கூறுபவர்கள் திருநாரையூர் சென்றால், அவரவர்களுக்காக அவன் நேர்நின்று நடாத்தும் ஐந்தொழிலை அவரவர்களும் நேரே கண்டு உண்மை இது எனக் கண்டு மெய்ப்பொருளனுபவம் பெறமுடியும்.

அவ்வகையில், உலகத்தவர்களின் ஐயத்திற்கு நேர்நின்று காட்சியளவையில் விடையளிப்பவனாக நின்றமையால் அப்பெருமானை "வாழியர்" எனவும் மகிழ்வுடன் கூறி வாழ்த்துகின்றார். எனவே, திருநாரையூர் சென்று வழிபட்டால், ஒவ்வொருவரும் தத்தம் கணக்கினை, வினையின் விளக்கத்தை; அதன் தீர்வுகாகப் பெருமான் இயற்றும் ஐந்தொழில் விளக்கத்தை நேர்நின்று கண்டு அனுபவ வழியில் மெய்ப்பொருளனுபவம் பெறமுடியும் என்றார்.

மேலே கூறிய வகையில், திருநாரையூர்ப் பெருமான் அறம், பொருள், இன்பம் என மூன்றாகவும் நின்று மெய்ப்பொருளனுபவம் தந்து, திருஞானசம்பந்தரிடம் நிறைந்து விளங்கினான் என்று கொள்ளுதல் வேண்டும். இவ்வனுபவம். ஞானசம்பந்தர்க்கு மட்டுமன்று! நமக்கும் இயலுவதாக அமைத்துக் கொடுப்பதே திருமுறைத் திருப்பதிகங்களின் செம்மைத் திருத்தொண்டு.

திருநாவுக்கரசர் திருவாக்கில்...

திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகைப் பதிகமும் தாண்டகப் பதிகமும் என்ற இரண்டு திருப்பதிகங்கள் திருநாரையூரைச் சிறப்பிப்பன. திருத்தாண்டகம் என்பது அருளனுபவம் பெற்று நின்ற காலையில், அவ்வனுபவ விரிவானது குறுகிய அடிகளாற் புகழ இயலாமையின், நீண்டு செல்லும் சுத்தத் தாளத் தொன்மை இசை அமைய நின்ற நெடுமைத் திருப்பாட்டாகும். இத்தகைய யாப்பமைதியுடைய பாட்டுக்களை முதன்முதல் அமைத்தவர் திருநாவுக்கரசரே யானமையின் அவர் ''தாண்டக வேந்தர்'' என்று சிறப்பிக்கப் பெற்றார்.

திருக்குறுந்தொகைப் பதிகம் முழுவதும் பெருமான் அழகை நமக்கு எடுத்து இயம்பும் பதிகமாக அமைகிறது. அப்பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "அம்ம அழகிதே" என்ற சொற்கள் வந்து முடிவதாக அமைத்தமையின் திருநாரையூர்ப் பெருமானுக்கு இன்று வழங்கும் "சௌந்தரேஸ்வரர்" என்ற பெயரின் அடிப்படையில் பெற்ற அனுபவ விளக்கமாக இப்பதிகம் அமைந்தது எனக் கொள்ளலாம். எனவே, பெருமானுக்கு, சௌந்தரேஸ்வரர் என்ற பெயர் உண்டு என்பதைத் திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகைப் பதிகத்தால் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

அடுத்து, திருத்தாண்டகப் பதிகம், அப்பெருமானை நேரே கண்டு வணங்கப்பெற்ற நிலையில் அப்பரடிகளாற் பாடப் பெற்ற பதிகம் எனக் கொள்ளவேண்டும். திருநாவுக்கரச ருக்குத் திருநாரையூரில் பெருமான் நேர்க்காட்சி அருளியிருக் கிறான் என்பதை வரலாறாக அமைக்கிறது அத்தாண்டகப் பதிகம். திருத்தாண்டகம் எல்லாத் தலங்களுக்கும் அமைய வில்லை. சிறப்புமிக்க, அருளனுபவம் வாய்த்தபோதே தாண்டகயாப்பு அமையும். ஆதலின், திருநாவுக்கரசர் திருநாரையூரில் குறிப்பிட்டுக் கூறத்தக்க, திருவருளனுபவம் பெற்றுச் சிறந்தாராதல் வெளிப்படை.

திருநாவுக்கரசர் இத்தாண்டகப் பதிகத்தில் எட்டாந் திருத்தாண்டகத்தில்.

"திரிபுரஞ் செற்று ஒரு மூவர்க்கு அருள் செய்தானை"

என்று குறிப்பிடுவதன் மூலம் திரிபுராதிகளை அழித்தபின் அம்மூவரையும், அவர்தம் ஊர்களையும் இணைய நிறுத்தி அழகு செய்தவன் என்ற வகையில் திரிபுரசுந்தரியையும் இணைத்துக் கூறியமை நாம் கண்டு இன்புறுதற்குரியது. எனவே, திருநாவுக் கரசர் தம் திருப்பதிகத்தால் திருநாரையூர் இறைவன், இறைவி பெயர்கள் இப்போதுள்ளவைகளே எனத் துணிய லாம்.

இனி, திருத்தாண்டகப் பதிகத்தின் பத்தாந் திருத்தாண் டகத்தில் திருநாவுக்கரசர்,

"மீளாத ஆளென்னை உடையான் தன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி ஞானை
மாளாமை மறையவனுக்கு உயிரும் வைத்து
வன்கூற்றின் உயிர்மாள உதைத்தான் தன்னை"

என்ற வரிகளின் மூலம் நாரையின் வழிபாட்டை எடுத்துக் கூறுகிறார். வெளி - வெள்ளை நிறமுடைய நாரை என்று சான்றோர்களால் உரை காணப் பெற்றுள்ளது. நாரை செய்த வழிபாட்டை விரும்பியவன். அடுத்து மார்க்கண்டேயன் வரலாறும் கூறப்பெறுகிறது, மார்க்கண்டேயன் இங்கே வந்து அருள்பெற்ற வரலாற்றைத் திருநாரையூர்ப் புராணம் மூலமாக அறியலாம்.

இனி, திருநாரையூரை அப்பரடிகள் நன்னகர் என்று குறிப் பிட்டார். விக்கினம் நேராமையே நன்மை. அவ்வகையில்

பொல்லாப் பிள்ளையாரை உடன்கொண்ட சிவத்தல நன்மை. திருவருட்பேறு இங்கே தடையின்றிக் கிடைக்கும் என்ற கருத்தில் கூறினாராதல் தெளியலாம். அவ்வகையில் பொல்லாப் பிள்ளையாரின் திருவருட் பெருமையையும் இத்தாண்டகம் விளக்கி நிற்பதாயிற்று.

முடிப்புரை

திருஞானசம்பந்தர் மூன்று நாட்களும், திருநாவுக்கரசர் இரண்டு நாட்களும் திருநாரையூரில் தங்கிப் பதிகம் அருளியிருத்தல் வேண்டும். இருவரும் நாரையூர்ப் பெருமானை நேர்நின்று தரிசித்து அருளனுபவம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. நாரையின் வழிபாட்டை அப்பர் பாடலால் உறுதி செய்வதோடு, அம்மையப்பர் பெயர்களும் அவரால் உறுதி செய்யப் பெறுவனவாயின. நன்னகர் என்பதால் விக்கினம் நீங்கிய நகர் எனப்பொருள் தந்து, பொல்லாப் பிள்ளையாரையும் சிறப்பித்துக்கூறிய வரலாறு இருவர் திருமுறைகளாலும் விளங்கியன எனக் கொள்ளலாம்.

திருநாரையூர் - கல்வெட்டு

கல்வெட்டு: கல்வெட்டுக்கள் 4 கிடைத்தன. 11-ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டவை. திருநாரையூர் - தனியூரான் வீரநாராயண சலம் சேர்ந்த ஒரு பிடாகை தனியூர் ஆய ஆட்சி குலோத்துங்க சோழன் சந்தி விளக்குக்காக ஊர் ஒன்று தந்தான். கைலாச முடையார்க்கு நித்திய நிபந்தத்திற்காகப் பொருள் இல்லாமையினுல் ஆண்டு ஒன்றுக்கு 540 கலம் நெல் தரக்கூடிய நிலதானம் விக்கிரம சோழனுல் தரப்பட்டது. குற்றம் தீர்ந்த தீர்ப்புகள் கூறப்பட்டுள்ளன. பசு திருடியதைச் சபையோர் விசாரித்து அவனிடம் அப்பசுவும் கன்றுகளும் மீட்கப்பட்டன. கோப்பெருஞ்சிங்கன் 1250 தில் 60 மா நிலம் விற்கப்பட்டது.

[இது 1954-ல் தருமையாதீனத்தால் வெளியிடப்பெற்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அருளிய தேவாரப் பதிகங்கள் இரண்டாந் திருமுறை என்ற நூலில் பக்கம் (111 ல்) எழுதப் பெற்றுள்ளதன் உண்மைப் படி.]

———

உ
சிவமயம்

திருநாரையூர்த் தேவாரத் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்தர்

இரண்டாந் திருமுறை

பண். பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

உரையினில் வந்த பாவம் உணர் நோய்கள் உம்ம
செயல் தீங்கு குற்றம் உலகில்
வரையில் நிலாமை செய்த அவை தீரும் வண்ணம்
மிக ஏத்தி நித்தம் நினைமின்
வரை சிலை யாக அன்று மதில் மூன்றெரித்து
வளர் கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன் மேய செல்வத்
திருநாரையூர்கை தொழவே. 1

ஊனடை கின்ற குற்றம் முதலாகி உற்ற
பிணி நோய் ஒருங்கும் உயரும்
வானடை கின்ற வெள்ளை மதி சூடு சென்னி
விதியான வேத விகிர்தன்
கானிடை யாடி பூதப் படையான் இயங்கு
விடையான் இலங்கு முடிமேல்
தேனடை வண்டுபாடு சடை அண்ணல் நண்ணு
திருநாரையூர் கைதொழவே. 2

ஊரிடை நின்று வாழும் உயிர் செற்ற காலன்
துயருற்ற தீங்கு விரவிப்
பாரிடை மெள்ள வந்து பழியுற்ற வார்த்தை
ஒழிவுற்ற வண்ணம் அகலும்
போரிடை அன்று மூன்று மதிவெய்த ஞான்று
புகழ்வா னுளோர்கள் புணரும்
தேரிடை நின்ற எந்தை பெருமா னிருந்த
திருநாரையூர் கைதொழவே. 3

தீயுற வாய ஆக்கை அதுபற்றி வாழும்
வினை செற்ற உற்ற உலகின்
தாயுறு தன்மையாய தலைவன் தன் நாமம்
நிலையாக நின்று மருவும்
பேயுற வாய கானில் நடமாடி கோல
விடமுண்ட கண்டன் முடிமேல்
தேய்பிறை வைத்துகந்த சிவன் மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே. 4

வசை அபராதமாய உவரோதம் நீங்கும்
தவமாய தன்மை வரும் வான்
மிசையவர் ஆதியாய திரு மார் பிலங்கு
விரிநூலர் விண்ணும் நிலனும்
இசையவர் ஆசி சொல்ல இமையோர்க ளேத்தி
யமையாத காத லொடுசேர்
திசையவர் போற்றநின்ற சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே. 5

உறைவளர் ஊன்நிலாய உயிர் நிற்கும் வண்ணம்
உணர்வாக்கும் உண்மை யுலகில்
குறையுள வாகி நின்ற குறை தீர்க்கு நெஞ்சின்
நிறைவாற்று நேசம் வளரும்
மறைவளர் நாவன் மாவின் உரிபோர்த்த மெய்யன்
அரவார்த்த அண்ணல் கழலே
திறைவளர் தேவர் தொண்டின் அருள்பேண நின்ற
திருநாரையூர் கைதொழவே. 6

தனம்வரு நன்மையாகும் தகுதிக் குழந்து
வருதிக் குழன்ற உடலின்
இனம் வளர் ஐவர் செய்யும் வினயங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனம் ஒரு காலம் மூன்று புரம் வெந்து மங்கச்
சரமுன் தெரிந்த அவுணர்
சினம் ஒரு காலழித்த சிவன் மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே. 7

உருவரைகின்ற நாளில் உயிர் கொள்ளுங் கூற்றம்
நனி அஞ்சுமாதல் உறநீர்
மருமலர் தூவி என்றும் வழிபாடு செய்ம்மின்
அழிபாடிலாத கடலின்
அருவரை சூழிலங்கை அரையன் தன் வீரம்
அழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்துகந்த சிவன் மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 8

வேறுயர் வாழ்வு தன்மை வினை துக்கமிக்க
பகை தீர்க்கு மேய வுடலில்
தேறிய சிந்தை வாய்மை தெளிவிக்க நின்ற
கரவைக் கரந்து திகழும்
சேறுயர் பூவின் மேய பெருமானு மற்றைத்
திருமாலும் நேட எரியாய்ச்
சீறிய செம்மையாகும் சிவன் மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே. 9

மிடைபடு துன்பம் இன்பம் உளதாக்கும் உள்ளம்
வெளியாக்கும் உன்னி யுணரும்
படையொரு கையிலேந்திப் பலிகொள்ளும் வண்ணம்
ஒலி பாடி யாடி பெருமை
உடையினை விட்டுளொரும் உடல் போர்த்துளோரும்
உரைமாயும் வண்ணம் அழியச்
செடிபட வைத்துகந்த சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே. 10

எரியொரு வண்ணமாய உருவானை எந்தை
பெருமானை உள்கி நினையார்
திரிபுரம் அன்று செற்ற சிவன் மேய செல்வத்
திருநாரைவூர் கைதொழுவான்
பொருபுனல் சூழ்ந்த காழி மறைஞான பந்தன்
உரை மாலை பத்தும் மொழிவார்
திருவளர் செம்மையாகி அருள்பேறு மிக்கது
உளதென்பர் செம்மை யினரே. 11

திருச்சிற்றம்பலம்.

மூன்றாந் திருமுறை

பண். பழம் பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

காம்பினை வென்றமென்தொளி பாகங் கலந்தான் நலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடு வில் திருநாரையூர் மேய
பூம்புனல் சேர்புரி புன்சடையான் புலியின் உரிதோன் மேல்
பாம்பினை வீக்கிய பண்டரங்கன் பாதம் பணிவோமே. 1

தீவினை யாயின தீர்க்க நின்றான் திருநாரை யூர் மேயான்
பூவினை மேவு சடை முடியான் புடை சூழப் பலபூதம்
ஆவினில் ஐந்துங் கொண்டு ஆட்டுகந்தான் அடங்கார் மதில்
[மூன்றும்
ஏவினை எய்தழித்தான் கழலே பரவா எழுவோமே. 2

மாயவன் சேயவன் வெள்ளியவன் விடஞ்சேரும் ஐம் மிடற்றன்
ஆயவ னாகி ஓர் அந்தரமும் அவன் என்று வரை ஆகம்
தீயவன் நீரவன் பூமியவன் திருநாரையூர் தன்னில்
மேயவனைத் தொழுவார் அவர்மேல் வினையாயின வீடுமே. 4

துஞ்சிருள் ஆடுவர் தூமுறுவல் துளங்கும் உடம்பினராய்
அஞ்சுடர் ஆர்எரி யாடுவர் ஆர் அழலார் விழிக்கண்
நஞ்சுமிழ் நாகம் அரைக்கு அசைப்பர் நலன் ஓங்கு நாரையூர்
எம்சிவனார்க்கு அடிமைப் படுவார்க்கு இனியில்லை யேதமே. 4

பொங்கிளங் கொன்றையினர் கடலில் விட முண்டு
[இமையோர்கள்
தங்களை ஆர் இடர் தீர நின்ற தலைவர் சடைமேலோர்
திங்களை வைத்து அனல் ஆடலினர் திருநாரையூர் மேய
வெங்கனல் வெண்ணீறணிய வல்லார் அவரே விழுமியரே. 5

பாருறு வாய்மையினர் பரவும் பரமேட்டி பைங்கொன்றைத்
தாருறு மார்புடையான் மலையின் தலைவன் மலைமகளைச்
சீருறு மாமறுகிற் சிறைவண்டு அறையுந் திருநாரை
யூருறைஎம்மிறைவர்க்கு இவைஒன்றொடொன்றொவ்வாவே. 6

கள்ளி யிடுதலை யேந்து கையர் கரிகாடர் கண்ணு தலர்
வெள்ளிய கோவண ஆடை தன்மேல் மிளிர் ஆடர வார்த்து
நள்ளிருள் நட்டம தாடுவர் நன்னலன் ஓங்கு நாரையூர்
உள்ளிய போழ்தில் எம்மேல்வரு வல்வினையாயின வோடுமே. 7

நாமமெனப் பலவும் உடையான் நலனோங்கு நாரையூர்
தாம் ஒம்மெனப் பறை யாழ்குழல் தாளார் கழல் பயில
ஈம விளக்கெரி சூழ்சுடலை யியம்பும் இடு காட்டில்
சாம முரைக்க நின்றாடுவானும் தழலாய சங் கரனே. 8

ஊனுடைவெண்டலைகொண்டுழல்வான்ஒளிர் புன்
[சடைமேல்ஓர்
வானிடை வெண்மதி வைத்துகந்தான்வரிவண்டு யாழ் முரலத்
தேனுடை மாமலர் அன்னம் வைகும் திருநாரையூர் மேய
ஆனிடை ஐந்துகந்தா னடியே பரவா அடைவோமே. 9

தூசு புனை துவராடை மேவும் தொழிலார் உடம்பினில் உள்
மாசு புனைந்து உடை நீத்தவர்கள் மயல் நீர்மை கேளாதே
தேசுடை யீர்கள் தெளிந்தடைமின் திருநாரையூர் தன்னில்
பூசுபொடித் தலைவர் அடியார் அடியேபொருத்தமே. 10

தண்மதி தாழ்பொழில் சூழ் புகலித் தமிழ் ஞான சம்பந்தன்
ஒண்மதி சேர் சடையான் உறையும் திருநாரையூர் தன்மேல்
பண் மதியாற் சொன்ன பாடல் பத்தும் பயின்றார் வினைபோகி
மண்மதியாதுபோய்வான்புகுவர்வானோர்எதிர்கொளவே. 11

திருச்சிற்றம்பலம்.

பண். பழம் பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லான் உமையோடு ஒரு பாகன்
அடலிடையிற் சிலை தாங்கி யெய்த அம்மான் அடியார் மேல்
நடலை வினைத்தொகைதீர்த்து உகந்தான்இடம் நாரையூர்
[தானே. 1

விண்ணின் மின்னேர்மதி துத்திநாகம் விரிபூ மலர்க்கொன்றை
பெண்ணின் முன்னே மிகவைத்துகந்த பெருமானெரியாடி
நண்ணிய தன்னடி யார்களோடுந் திருநாரையூரானென்
றெண்ணுமினும் வினைபோகும் வண்ணமிறைஞ்சுந்
[நிறைவாமே. 2

தோடொருகாதொருகாதுசேர்ந்தகுழையானிழைதோன்றும்
பீடொருகால் பிரியாது நின்ற பிறையான்மறையோதி
நாடொருகாவமுஞ் சேரநின்ற திருநாரையூரானைப்
பாடுமினீர் பழிபோகும் வண்ணம்பயிலுமுயர்வாமே. 3

வெண்ணிலவஞ்சடை சேரவைத்து விளங்குந் தலையேந்திப்
பெண்ணிலமர்ந்தொரு கூறதாயபெருமா னருளார்ந்த
அண்ணன் மன்னியுறை கோயிலாகு மணிநாரையூர் தன்னை
நண்ணலமர்ந் துறைவாக்குமின் கணடலைகரிசறுமே. 4

வானமர் தீவளிநீர் நிலனாய்வழங்கும் பழியாகும்
ஊனமரின்னுயிர் தீங்குகுற்ற முறைவாற்பிறிதின்றி
நானமரும் பொருளாகி நின்றான்றிரு நாரையூரெந்தை
கோனவனைக் குறுகக் குறுகாகொடுவல்வினை தானே. 5

கொக்கிறகுங்குளிர் சென்னிமத்தங்குலாயமலர்சூடி
அக்கரவோடரையார்த் துகந்தவழகன்குழகாக
நக்கமருந் திருமேனியாளன்றிரு நாரையூர்மேவிப்
புக்கமரும்மனத்தோர்கடம்மைபுணரும்புகறானே. 6

ஊழியு மின்பமுங் காலமாகியுயருந் தவமாகி
ஏழிசையின்பொருள்வாழும்வாழ்க்கைவினையின்புணர்ப்பாகி
நாழிகயும்பலஞாயிறாகிநளிர்நாரையூர் தன்னில்
வாழியர்மேதகுமைந்தர்செய்யும்வகையின்விளைவாமே. 7

கூசமிலாதரக்கன்வரையைக்குலுங்கவெடுத்தான்றோள்
நாசமதாகியிறவடர்த்தவிரலான்கரவாதார்
பேசவியப்பொடுபேணநின்றபெரியோனிடம்போலும்
தேசமுறப்புகழ்செம்மைபெற்றதிருநாரையூர்தானே. 8

பூமகனும்மவனைப்பயந்தபுயலார்நிறத்தானும்
ஆமளவுந்திரிந் தேத்திக்காண்டலறிதற்கரியானார்
பாமருவுங்குணத்தோர்களீண்டிப்பலவும்பணிசெய்யும்
தேமருவுந்திகழ்சோலைசூழ்ந்ததிருநாரையூர்தானே. 9

வெற்றரையாகியவேடங்காட்டித்திரிவார்துவராடை
உற்றரையோர்களுரைக்குஞ்சொல்லை யுணராதெழுமின்கள்
குற்றமிலாததோர்கொள்கையெம்மான் குழகன்றொழிலாரப்
பெற்றரவாட்டிவரும்பெருமான்றிருநாரையூர்சேர்வே. 10

பாடியலுந்திரைசூழ்புகலித்திருஞானசம்பந்தன்
சேடியலும்புகழோங்குசெம்மைத்திருநாரையூரான்மேல்
பாடியதண்டமிழ்மாலைபத்தும்பரவித் திரிந்தாக
வாடியசிந்தையினர்க்குநீங்குமவலக்கடலுனே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழி னாரையூர் நம்பனுக்
காறு சூடிலு மம்ம வழகிதே. 1

புள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கொண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தெண்டிரை நாரையூ ரானஞ்சை
அள்ளி யுண்டலு மம்ம வழகிதே. 2

வேடு தங்கிய வேடமும் வெண்டலை
ஓடு தங்கிய வுண்பலி கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ ரானடம்
ஆடு பைங்கழ லம்ம வழகிதே. 3

கொக்கின் றூவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலு நாரையூர் நம்பனுக்
கக்கி னாரமு மம்ம வழகிதே. 4

வடிகொள் வெண்மழு மானமர் கைகளும்
பொடிகொள் செம்பவ ளம்புரை மேனியும்
நடிகொ ணன்மயில் சேர்திரு நாரையூர்
அடிக டம்வடி வம்ம வழகிதே. 5

சூல மல்கிய கையுஞ் சுடரொடு
பாலு நெய்தயி ராடிய பான்மையும்
ஞால மல்கிய நாரையூர் நம்பனுக்
கால நீழலு மம்ம வழகிதே. 6

பண்ணி ஞன்மறை பாடலொ டாடலும்
எண்ணி லார்புர மூன்றெரி செய்ததும்
நண்ணி ஞர்துயர் தீர்த்தலு நாரையூர்
அண்ண லார்செய்கை அம்ம வழகிதே. 7

என்பு பூண்டெரு தேறி யிளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்கவே
நன்ப கற்பலி தேரினு நாரையூர்
அன்ப னுக்கது அம்ம வழகிதே. 8

முர லுங் கின்னர மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாடலு நீடுலாம்
நரலும் வாரிநன் ஞரையூர் நம்பனுக்
கரவும் பூணுத லம்ம வழகிதே. 9

கடுக்கை யஞ்சடை யன்கயி லைம்மலை
எடுத்த வாளரக் கன்றலை யீரைஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ ரான்விரல்
அடுத்த தன்மையு மம்ம வழகிதே. 10

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை யரியான் றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன் றேய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 1

பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் றன்னைப்
பாரொடுநீர் சுடர்படர்காற் ருயி ஞனை
மஞ்சுண்ட வானுகி வானந் தன்னின்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் றன்னை

நெஞ்சுண்டென் னினைவாகி நின்ருன் றன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர்போய் நீங்க வோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 2

மூவாதி யாவர்க்கு மூத்தான் றன்னை
முடியாதே முதனடுவு முடிவா ஞனைத்
தேவாதி தேவர்கட்குந் தேவன் றன்னை
திசைமுகன்றன் சிரமொன்று சிகைத்தான் றன்னை
ஆவாத வடலேறெென் றுடையான் றன்னை
யடியேற்கு நினைதோறு மண்ணிக் கின்ற
நாவானை நாவினினல் லுரையா ஞனை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 3

செம்பொன்னை நன்பவளந் திகழு முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழு மலர்க்கணைவே ளுலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் றன்னைக்
கழுகினெடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 4

புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் றன்னை
விரையுடைய வெவ்வெருக்கங் கண்ணி யானை
வெண்ணீறு செம்மேனி விரவி ஞனை
வரையுடைய மகடவஞ்செய் மணுளன் தன்னை
வருபிணிநோய் பிரிவிக்கு மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 5

பிறவாது மிறவாதும் பெருகி ஞனைப்
பேய்பாட நடமாடும் பித்தன் றன்னை
மறவாத மனத்தகத்து மன்னி ஞனை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை யுயிரா ஞனை
யுள்ளானைப் புறத்தானை யோசை யானை
நரவாரும் பூங்கொன்றை சூடி ஞனை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 6

கோவிலூர் ஆதீனம்
Acc. No: 623
Q1:38
கோவிலூர்-630 30

தக்கனது வேள்விகெடச் சாடி ஞானைத்
தலைகலனுப் பலியேற்ற தலைவன் றன்னைக்
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக்
கோணுகம் பூணுகக் கொண்டான் றன்னை
அக்கினொடு மென்பணிந்த வழகன் றன்னை
யறுமுகனோ டானைமுகற் கப்பன் றன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் ருனை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 7

அரிபிரமர் தொழுதேத்து மப்பன் றன்னை
அந்தகனுக் தந்தகனை யளக்க லாகா
எரிபுரியு மிலிங்கபுரா ணத்து ளானை
யெண்ணுகிப் பண்ணு ரெழுத்தா ஞனைத்
திரிபுரஞ்செற் றொருமூவர்க் கருள்செய் தானைச்
சிலந்திக்கு மரசளித்த செல்வன் தன்னை
நரிவிரது காட்டகத்தி லாட லானை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 8

ஆலால மிடற்றணிரியா வடக்கி ஞனை
யாலதன்கீ ழறநால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனுகிப் பழமுமாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையா ஞனை
மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனுய விமலன் றன்னை
நாலாய மறைக்கிறைவ ஞயி ஞனை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 9

மீளாத வாளென்னை யுடையான் றன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி ஞனை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றி னுயிர்மாள வுதைத்தான் றன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
றோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே ஞனே. 10

திருச்சிற்றம்பலம்.

ஆகத் திருப்பதிகங்கள் 5.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

திருநாரையூர்

விநாயகர் திருவிரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலைவிய னாரையூர் முக்கண்
அரசுமகி ழத்திமுகத் தான். 1

முகத்தாற் கரியனென் றாலுந் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை யுன்னும் விரும்படியார்
அகத்தான் றிகழ்திரு நாரையூ ரம்மான் பயந்தவெம்மான்
உகத்தா னவன்ற னுடலம் பிளந்த வொருகொம்பனே 2

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர்—நம்பனையே
தன்னவலஞ் செய்துகொளுந் தாழ்தடக்கை யாயென்னோய்
பின்னவலஞ் செய்வதெனோ பேசு. 3

பேசத் தகாதெனப் பேயெரு தும்பெருச் சாளியுமென்
றேசத் தகும்படி யேறுவ தேயிமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழி லுங்கையு நுந்தையு நீயுமிந்தத்
தேசத் தவர்தொழு நாரைப் பதியுட் சிவக்களிறே. 4

களிறு முகத்தவனைக் காயஞ்செந் தீயின்
ஒளிறு முருக்கொண்ட தென்னே—யளறுதொறும்
பின்னாரை யூரார லாரும் பெரும்படுகர்
மன்னாரை யூரான் மகன். 5

மகத்தினின் வானவர் பற்கண் சிரந்தோ ணெரித் தருளுஞ்
சகத்தினி னீள்பொழி னாரைப் பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கையந்தக் கையது மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாயந்த வாயது போலு மடுமருப்பே. 6

மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால்—நெருப்பை
அருந்தவெண்ணு கின்றவெறும் பன்றே யவரை
வருந்தவெண்ணுகின்ற மலம். 7

மலஞ்செய்த வல்வினை நோக்கி யுலகை வலம்வருமப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேல்
சலஞ்செய்த நாரைப் பதியரன் றன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி றேயுன்னை வாழ்த்துவனே. 8

வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சா யலைத்தருவா னன்றே—வினஞ்சாயத்
தேலரையூர் நம்பன்மகன் றிண்டோ ணெரித்தருளு
நாரையூர் நம்பர்மக னும். 9

நாரணன் முன்பணிந் தேத்தநின் றெல்லை நடாவியவத்
தேரண வுந்திரு நாரையூர் மன்னு சிவன்மகனே
காரண னேயெங் கணபதி யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேயென் பவர்க்கில்லை யல்லல்களே. 10

அல்லல் களைந்தான்ற னம்பொ னுலகத்தின்
எல்லை புகுவிப்பா னீண்டுழவர்—நெல்லல்களை
செங்கழுநீர் கட்குந் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதா ரைங்கரத்த கோ. 11

கோவிற் கொடிய நமன்றமர் கூடா வகைவிடுவன்
காவிற்றிகழ்திரு நாரைப் பதியிற் கரும்பணைக்கை
மேவற் கரிய விருமதத் தொற்றை மருப்பின்முக்கண்
ஏவிற் புருவத் திமையவ டான்பெற்ற யானையையே 12

யானேத் தியவெண்பா வென்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான்—றேனே
தொடுத்தபொழி னாரையூர்ச் சூலம்வல னேந்தி
எடுத்த மதமுகத்த வேறு. 13

ஏறிய சீர்வி ரணக்குடி யேந்திழைக் கும்மிருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கு முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பனைச் சிங்கத்தி னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் வாற்றெழு நாரைப் பதியுள் விநாயகனே. 14

கனமதில்சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார்
மனமருவி ஞன்பயந்த வாய்ந்த—சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்ருர்க்கு
மாசார மோசொல்லு வான். 15

வானிற் பிறந்த மதிதவ ழும்பொழின் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்த்திரு நாரைப் பதிதிகழுங்
கோனிற் பிறந்த கணபதி தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென் றுரைப்பரிவ் வையகத்தே. 16

வையகத்தா ரேத்த மதிஞரை யூர்மகிழ்ந்து
பொய்யாகத்தா ருள்ளம் புகலொழிந்து—கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தா
ஞங்கனிநஞ் சிந்தையமர் வான். 17

அமரா வமரர் தொழுஞ்சர ஞரைப் பதியமர்ந்த
குமரா குமரற்கு முன்னவ னேகொடித் தேரவுணர்
தமரா சறுத்தவன் றன்னுழைத் தோன்றின னேயெனநின்
றமரா மனத்தவ ராழ்நர கத்தி லழுந்துவரே. 18

அவமதியா துள்ளமே யல்லலற நல்ல
தவமதியா லேத்திச் சதுர்த்தோ—நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். 19

நாந்தன மாமன மேத்துகண் டாயென்று நாண்மலரால்
தாந்தன மாக விருந்தன ஞரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேயைந்து செங்கய னேநின் றிரண்மருப்பை
ஏந்தின னேயென்னை யாண்டவ னேயெனக் கென்னையனே. 20

திருச்சிற்றம்பலம்.

விநாயகர் திருவிரட்டை மணிமாலை

முற்றிற்று.

———

திருத்தொண்டர் புராணம்

திருநாவுக்கரசு நாயனார் புராணம்

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற கழல்வணங்கி
அருள்முன் பெற்றுப்
பொய்பிறவிப் பிணியோட்டும் திருவீதி புரண்டுவலங்
கொண்டு போந்தே
எப்புவனங்களும் நிறைந்த திருப்பதியின் எல்லையினை
இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திருநாரையூர் பணிந்து
பாடிச் செல்வார். (1449)

திருஞானசம்பந்த நாயனார் புராணம்

நம்பரை நலந்திகழ் நரையூரினில்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடி நின்று
எம்பிரான் கவுணியர் தலைவர் ஏத்தினார். (2156)

அப்பதி பணிந்து அருந்தமிழ் புனைந்து தம்
மெய்ப்படு விருப்பொடு மேவுநாள் அரன்
பொற்பதி பலவும் முன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர் கருப்பறிய லூரினில். (2157)

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். (4286)

திருச்சிற்றம்பலம்.

———

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

திருநாரையூர்ப் புராணம்

* விநாயகர் காப்பு

உலக முய்ந்திடத் திருமுறை சேரிட முணர்த்தி
நலமி குந்திருத் தொண்டர்தஞ் சரிதமு நல்கிப்
புலந லந்தரு நாரையூர்ப் புகர்முகப் பெருமான்
இலகு பொன்னடித் தாமரை யிறைஞ்சியேத் தெடுப்பாம்.

கடவுள் வணக்கம்

சிற்சபாநாதர்

நலஞ்சாரு மெழுத்தஞ்சிற் றிருமேனி
நயந்தருளி நலமில் லாத
மலஞ்சாய வமுக்கியரு டானெடுத்தே
யுதறியிரு மாயை தம்மை
வலஞ்சாரு மெரியேந்தி யிருவினைசுட்
டுயிர்கள்சுக வாரி மூழ்கப்
பொலஞ்சாரு மம்பலத்துட் டிருநடஞ்செய்
பெருமானைப் போற்றி வாழ்வாம். 1

சிவகாமசுந்தரி

மூவகையா முயிர்வருக்க மெனும்புதல்வர்
மலநோய்கண் முழுது நீங்கித்
தாவரிய சுகவாழ்வு பெறுவதனுக்
கிறையவனூர் தாங்கொள் கின்ற
ஓவரிய திருமேனி யனைத்துமளித்
தவராட லுவந்து நோக்கி
மேவடியா ருளக்கமலம் வீற்றிருக்கு
மன்னைபதம் விரும்பி வாழ்வாம். 2

சௌந்தரேசர்

பகர்மார்க் கண்டர்திருநாரை பாண்ட வாதி பலர்முன்னுள்
அகமா ரன்பால் விதியுளியே யருச்சித் திறைஞ் சவவ்வவர்க்குத்
தகமாக் கருணை புரிந்தருளித் தமியேம் பிறவி நீங்கநலம்
மிகமா வளஞ்சேர் திருநாரை யூர்வாழ் விமலன் றாள்பணிவாம்.

---

* இக்காப்பு முதலிய செய்யுள்கள், சூரியனார்கோயி லாதீனம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமிகள் இயற்றியன.

திரிபுரசுந்தரி

பெருநா கப்பணி யுடனே குழவிப்
பிறையுஞ் சடைமிசை யணியும் பெருமான்
இருநா ழித்தரு மருநென் முதலா
வெண்ணான் கறமும் பெருகப் புரிவாள்
தருநா கத்தவர் முதலெவ் வுயிருந்
தழையத் தழையும் பொழிலிற் றிகழும்
திருநா ரைப்பதி வளருங் கருணைத்
திரிபுர சுந்தரி சரணம் பணிவாம். 4

பொல்லாப்பிள்ளையார்

தன்னைக் குறித்த திருப்பணியுஞ்
சான்றோர் பிறர்க்குச் செயும்பணியும்
முன்னைத் தனது வழிபாடு
முடிப்போர்க் கினிதா முடிப்போனை
என்னை நினைத்துத் தனதுபணி
யியற்றப் பணித்த விபமுகனைப்
புன்னைத் தருச்சூழ் திருநாரைப்
பொல்லா முதல்வன் றனைப்பணிவாம். 5

சித்திபுத்திகள்

பத்தி யிற்செய் பணிசிறி தாயினும்
உத்த மத்திரு வோடுமெய் வீடுநல்
கத்தி வத்திரத் தண்ண லகத்தமர்
சித்தி புத்திகள் சேவடி போற்றுவாம். 6

சுப்பிரமணியர்

மன்னு மூவிரு கண்களு நுதலிடை மறையப்
பன்னு வாரிசக் கரமுக விழிகண்முப் பானும்
அன்னை மாரிரு பாகமு மாமரு ளுருக்கொண்
டென்னை யாடிரு முருகனல் லிணையடி பணிவாம். 7

திருநந்திதேவர்

சுருதிச் சென்னியின் மெய்ப்பொருட் டொகையினை விரியாத்
தருநற் சைவநூற் பொதுச்சிறப் பியல்பெலாஞ் சாலத்
தெருளச் சொல்சிவ ஞானபோ தம்புவி தேற
அருளிச் செய்குரு நந்திதா ளகந்தழீஇத் தொழுவாம். 8

அகத்தியர்

இன்னியற் றமிழி னுலு மிளநறுந் தென்ற லாலும்
தன்னுளத் தருளின் றண்மை தரணியோர் தெளியக் காட்டி
என்னுளச் சிலையின் மீது மிருந்தருள் பொதியத் தாசான்
மன்னகத் தியன்பொற் பாத மலர்தலைக் கணிந்து வாழ்வாம்.

சமயகுரவர்

கருஞால முண்டவன் பிரமாதி தேவருங்
காணாமை வெந்தழற் றூணாகி நின்றவெம்
பெருமா னடித்தொண்டி னுயர்வீறு தேறவும்
பேரா வியற்கைமெய் வீடேய வும்புவி
வருஞான சம்பந்தர் வாகீசர் சுந்தரர்
மணிவாச கங்கோவை தருமன்ப ரென்னுமித்
திருமா ணெழிற்சமய குரவோர்த மின்னருட்
டேனூறு செங்கமல பாதங்கள் போற்றுவாம். 10

நம்பியாண்டார்நம்பிகள்

முன்னரு மறைக ணான்கா வகுத்திடு முனிவ னனைப்
பன்னருந் தமிழ்வே தங்கள் பதினொரு முறைகளாக
மன்னிட வுலகி லென்றும் வகுத்தவன் கருணைச் செல்வம்
துன்னிய நம்பி யாண்டார் நம்பிதா டொழுது வாழ்வாம். 11

சேக்கிழார்

அங்க ணன்றரு மாதி யுலகெலாம்
துங்க மார்திருத் தொண்டர் புராணத்துள்
எங்கு மார வியம்பிய சேக்கிழான்
பொங்கு மாணடி போற்றிசெய் வாமரோ. 12

சந்தானகுரவர்

பண்ணி னோசையிற் பழத்துறு சுவையினிற் பரன்பால்
நண்ணு கின்றதத் துவிதமா நயமென நவின்றே
வெண்ணை மேவுமெய் கண்டநல் வியன்குரு மரபிற்
புண்ணி யந்தரு குரவர்தம் பொன்னடி பணிவாம். 13

சண்டேசுரர்

தண்டு கொண்டுதன் முதுகினிற் புடைத்தமை
தானறி யாதுள்ளம்
மண்டு காதலிற் பூசனை செய்துழி
வைத்தபாற் குடந்தள்ளக்
கண்டு தாதைதன் றாளெறிந் தீசனார்
கழலடிக் கன்பார்ந்த
தொண்டர் செய்தவே தவமெனத் தெரித்தவன்
றுணையடி தொழுதுய்வாம். 14

வாழ்த்து

திருவமர் நாரை யூருறை யீசன்
றிருப்பணி செய்யுநல் லன்பர்
பெருகிடு மாயுள் பிணியிலா யாக்கை
பெற்றுயர் திருவொடும் வாழ்க
அருமறைப் பயனுஞ் சைவமு நீறு
மக்கமா மணியுமஞ் செழுத்தும்
தெருளம ரீரா றெனுந்திரு முறையுஞ்
சிறந்துநீ டூழிவா ழியவே. 15

திருச்சிற்றம்பலம்.

———

உ

சிவமயம்

திருநாரையூர்ப் புராணம்

யானைமுகத்தை உடையவரும் வல்லபையோடு கூடியவரும் சிவந்த திருமேனி உடையவரும் இளம்பிறையைச் சூடியவரும் ஆகிய விநாயகப் பெருமானுக்கு வணக்கம்.

1. நாரையின் பிறப்புரைத்தது

முன்னொரு காலத்தில் முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, 'இப்பரத கண்டத்திலே இம்மை இன்பமும் வீடும் தருவனவாகச் சிறந்த தலங்களின் வகைகளையும் அவற்றுள்ளும் மிகச் சிறந்த ஒரு தலத்தின் பெருமையினையும் அடியேங்களுக்குக் கூறியருளுக' என வேண்டிக் கொண்டனர். சூதமுனிவர் முனிவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினர் :

'உலகத்திலே கணேசப் பெருமானுக்குச் சிறந்தனவாகக் கூறப்படும் தலங்கள் 108; சிவனுக்குரிய தலங்கள் 108; திருமாலுக்குரிய தலங்கள் 108; பராசக்திக்குரிய தலங்கள் 64; சூரியனுக்குரிய தலங்கள் 12.

கணேசர் முதலாகச் சொல்லப்பட்ட ஐந்து வகைத் தெய்வத் தலங்களுள் இரண்டு தெய்வங்களுக்கு இருப்பிடமாக உள்ளவை 960. சிவனுக்குரிய தலங்கள் முதலாக உள்ள ஐந்து தலங்களுள் மூன்று தெய்வங்கட்கு இருப்பிடமானவை 480. திருமால் தலங்கள் முதலாக உள்ள ஐந்தினுள் நான்கு தெய்வங்கட்கு இருப்பிடமானவை 240. ஐந்து தெய்வங்கட்கும் இருப்பிடமானவை 120. இவ்வாறு பரதகண்டத்தில் சிறந்தனவாகவும் எல்லா நலங்களையும் தருவனவாகவும் உள்ள தெய்வத் தலங்கள் 2200 என்பர் பெரியோர்.

கணேசப் பெருமானுக்கும் மற்றொரு தெய்வத்திற்கும் உரியனவாய், புத்தி முத்தி தரும் தலங்கள் '**பிராசாதங்கள்**' என்று கூறப்படும்.

கணபதி சிவன் இருவருக்கும் உரிய தலம் 'சிவப்பிரா சாதம்' எனப்படும். இத்தகைய தலங்கள் 108. இவற்றுள் 'விரைவில் சித்தி தருவதும் போகம், வீடு இரண்டையும் தரத் தக்கதுமாகிய உயர்ந்த தலம் திருநாரையூர் ஒன்றேயாம். அந்தத் தலத்தின் வரலாற்றை முருகப் பெருமான் சனகர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்தருளினர். அவர் உபதேசித்த வண்ணமே திருநாரையூர்த் தலத்தின் பெரு மையை உங்களுக்குக் கூறுவேன்; அன்புடன் கேளுங்கள்' என்று சூத முனிவர் கூறுவாராயினர்.

ஒரு காலத்தில் சனகாதி முனிவர்கள் முருகப் பெருமானை வணங்கித் 'திருநாரையூர்த் தலத்தின் பெருமையை எங்களுக்கு உபதேசித் தருளவேண்டும்' என்று வேண்டிக் கொள்ள, முருகப்பெருமான் பின்வருமாறு அருளிச் செய் கின்றார்.

திருநாரையூர் என்பது தெய்வத் தலங்கள் எல்லாவற் றுள்ளும் சிறப்புடையது. அங்கே விநாயகப் பெருமான் எட்டுத் திருவிளையாடல்களைச் செய்தருளினர். அவ்வாறே அடியார்க்கு நல்லவராகிய சிவபெருமானும் எட்டுத் திருவிளை யாடல்களைப் புரிந்தருளினர்.

இராசேந்திர பட்டணத்திலுள்ள ஆதி சைவர்கள் வாழ்ந்துவரும் சிறப்புடையது திருநாரையூர்.

பிரம்மாவினுடைய புதல்வனாகிய தர்மப் பிரஜாபதி என் பவன் ஒரு முனிவன். அவன் திருமாலை வழிபட்டு, திருமாலே தனக்குப் புதல்வனாக வரவேண்டும் என்று வேண்டிக் கொண் டான். திருமாலும் அவனது வேண்டுகோளுக்கிணங்கி, நரன் நாராயணன் என இரண்டு உருவம்கொண்டு அம்முனிவனுக் குப் புதல்வர்களாய் அவதரித்தார்.

அங்ஙனம் அவதரித்த நர நாராயணர் இருவரும் முனிவர் களால் வணங்கப் பெற்றுத் தவநிலையில் இருந்து, தங்கள் தவத்தினாலே பரமசிவனை மகிழ்வுறச் செய்தனர். இவ்வாறு ஒழுகும் நாளில் முற்கல முனிவரின் புதல்வராகிய புருசுண்டி

என்னும் முனிவர் விநாயகப் பெருமானின் திருநாமங்களைச் சொல்லித் துதித்துக் கொண்டு, பதரிகாவன மார்க்கமாய் முற்கலாச்சிரமத்தை நோக்கிச் செல்வாராயினர். அப்போது அம்முனிவரைக் கண்டு நான்முகன் முதலிய எல்லோரும் ஆசனம் விட்டெழுந்து அன்போடு வழிபட்டார்கள். நாராயண முனிவன் மட்டும் தான் இருந்த இருக்கைவிட்டு எழாமலும் வழிபடாமலும் சும்மா இருந்தான். அங்ஙனம் இருப்பதைக் கண்ணுற்ற புருசுண்டி முனிவர் வெகுண்டு, 'தருமனுக்குப் பிறந்த அதமனே, நாரைபோல் நெடிய சரீரத்தை உடையவனே, நீ நாரையின் கர்ப்பத்திலே பிறந்து பூமியில் இருப்பாயாக' என்று சபித்து மேற்செல்வாராயினர்.

அவ்வாறு சபிக்கப்பெற்ற நாராயண முனிவன் அஞ்சித் தன் தவறு உணர்ந்து புருசுண்டி முனிவரின் கால்களில் வீழ்ந்து வணங்கிச் சாபநீக்கம் செய்யுமாறு வேண்டிக் கொண்டான். அது கேட்டு மனமிரங்கிய புருசுண்டி முனிவர் நாராயணனை நோக்கி, 'நீ பூமியில் நாரையாகப் பிறந்து உனது பூர்வ ஞானம் கைவரப்பெற்று விநாயகப் பெருமானை அருச்சிப்பாய். எம்மை இகழ்ந்த இப்பாவம் அப்பெருமான் அருளால் நீங்கும். அதன் மேல் நீ விரும்பிய சிவலிங்கத்தைப் பூசித்து, நாரை வடிவத்தினின்றும் நீங்கி உன்னுடைய பழைய வடிவத்தை அடைவாய்' என அருள் புரிந்து முற்கலாச்சிரமத்தை நோக்கிச் சென்றார்.

உடனே நாராயண முனிவன் ஒரு நாரை வயிற்றிலே பிறந்து அனந்தேசுரம் என்னும் சிறந்த தலத்தை அடைந்து, கிழக்கு முதலிய ஏழு திக்கிலும் சிவபெருமானை வழிபட்டு ஈசானிய திக்கை யடைந்து அங்கே சௌந்தரிய நாயகியுடன் கூடிய சிவலிங்கப் பெருமானையும் அருகே ஒரு விநாயகப் பெருமானின் திருவுருவத்தையும் கண்டான். பறவை அரசாகிய நாரை அங்கே தியான நிட்டையில் அமர்ந்த சித்தராகிய பக முனிவரையும் கண்டு வணங்கியது. அம்முனிவர் தம் ஞானக் கண்ணால் நாரையைத் தருமனது புத்திரன் என அறிந்து தம்மிடத்தே வந்திருந்த மார்க்கண்டேயரோடு உரிய முறையில் உபசரித்தார். பின்னர் மார்க்கண்டேயரை நோக்கி, அந்நாரையின் பிறப்பு வரலாற்றையும் கூறினர், அதுகேட்ட மார்க்கண்டேயர் அந்நாரையை அன்புடன் உபசரித்தார், பகமுனிவர் ஆச்சிரமத்திலே நாரையும் பக முனிவரும் மார்க்கண்டேயரும் மகிழ்ச்சியுடன் தங்கியிருந்தனர்.

---

2. பகமுனிவர் தோற்றம் உரைத்தது

நாராயண முனிவனது அவதாரமாகிய நாரையானது பகமுனிவரை நோக்கி வணங்கி 'முனிவர் பெருமானே, எனது சாபநீக்கத்தின் பொருட்டு விநாயகப் பெருமானையும் சிவ பெருமானையும் எந்தத் தலத்தில் எவ்வாறு பூசிக்க வேண்டும்' என வினவியது. அதனைக்கேட்ட பகமுனிவர், 'எம்மாலும் எம் நண்பர் மார்க்கண்டேயராலும் நன்ருக வழிபடப் பெற்ற, எம் ஆசிரமத்தின் அருகேயுள்ள இவ் விநாயகப் பெருமானையும் இச் சிவலிங்கப் பெருமானையும் முறைப்படி அருச்சிப்பாயாக, விரைவில் உனக்குச் சாப நீக்கமும் நீ விரும்பிய பேறுகளும் உண்டாகும்' என்று உபதேசித்தார்.

நாரையானது முனிவரை நோக்கி 'உம்முடைய வரலாறு யாது? உம்மால் இவ்விநாயகரும் இச் சிவபெருமானும் எவ்வாறு அருச்சிக்கப் பெற்றுர்கள்? என்ன சித்தி உங்கட்கு உண்டாயிற்று? எல்லாவற்றையும் எனக்கருளிச் செய்ய வேண்டும்' என வேண்டியது. அது கேட்டு பகமுனிவர் பின்வருமாறு கூறுவராயினர் :

அங்கிரசின் கோத்திரத்திற் பிறந்த முற்கலர் என்ற சித்தர் உலகோர்க்கு அருள் செய்தற் பொருட்டுப் பூமியெங்கும் தலயாத்திரை செய்துவந்தார். அவர் இந்திரத்தியுநம் என்றதடாகத்தின் அருகே வந்தார். அங்கு ஆணும் பெண்ணுமாகிய இரு கொக்குகள் வசித்து வந்தன. அவ்விரண்டனுள் கணவனுகிய கொக்கு இறந்தது. பெண் கொக்கு மிகுந்த கவலையோடு அழுதுகொண்டிருந்தது. அப்பெண் கொக்கினது வருத்தத்தினை நீக்க எண்ணிய முற்கலர் என்னும் அச் சித்தர் சிறந்த ஆண் கொக்கின் உடம்பினுள்ளே புகுந்து உயிர்த்தெழுந்து அப்பேடையோடு கூடி ஓராண்டுகாலம் வாழ்ந்து வந்தார். அப்போது அவரால் அப்பெண் கொக்கினிடத்தே யான் கருப்பத்திலே இருந்து ஞானம் நிரம்பிக் கொக்குருவாகப் பிறந்தேன். பிறந்ததும் என் தந்தையாகிய அம்முனிவரைப் பணிந்து வீடுபேற்றுக்குரிய உபாயத்தை அருளிச் செய்யும்படி வேண்டினேன். அவர் தம் பெயரால் ஆகிய புராணத்தை எனக்கு எடுத்துரைத்தார். முற்கலருடைய சேர்க்கையாலும் மௌத்கல்யம் என்னும் ஞான

நூற்கேள்வியாலும் என் தாய் உலகப்பற்றை நீத்து முற்கல ருடைய ஆணைப்படி ஆன்மயோகத்தினை மேற்கொண்டாள். யான் என் தந்தை முற்கலருடைய அருளால் யோகத்திலும் ஞானத்திலும் சிறந்து சிவயோகத்தில் விருப்புற்றவன் ஆயினேன். முற்கலர் தம் இருப்பிடத்தை அடைந்தார். என்னுடைய தாய் பூத உடலை நீத்துப் பிரமலோகத்தை அடைந்தார். நான் தியான சமாதியில் விருப்புடையவனாய் மகிழ்ச்சியோடு அங்கேயே வாழ்ந்திருந்தேன்.

அப்போது வேநன் என்னும் அரசனது கொடுமையாலும் இரணியனது கொடுமையாலும் பூமியானது தன் வளப்பத்தை இழந்து வறண்டது. நீர்நிலைகள் எங்கும் தண்ணீர் இல்லாமை யால் பசு, பறவைகள் யாவும் யான் இருந்த இந்திரத்தியுநம் என்னும் தடாகத்தை அடைந்தன. தனிமையை விரும்பிய யான் அத்தடாகத்தைவிட்டு இத்தலத்தை அடைந்து தவம் செய்ய விரும்பினேன்.

முலாதாரத்திலே கணபதியையும் சுவாதிட்டானத்திலே நான்முகனையும் மணிபூரகத்திலே திருமாலையும் அநாகத மாகிய இருதயத்தில் உருத்திரனையும் விசுத்தியில் அம்மையப்ப ராகிய மகேசுவரனையும் ஆஞ்ஞையில் சதாசிவனையும் தியா னித்து ஆயிரம் ஆண்டுகள் தாரகமந்திரத்தை இடைவிடாமல் செபித்து வந்தேன். அப்போது சுவாதிட்டானத்தை அடைந்த பிரமதேவர் ஒளிப்பிழம்பாய் ஒரு பீடவடிவில் அமைந்தார். உடனே அணிமா என்னும் சித்தி என்னை அடைந்தது. மேலும் ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தேன். மணிபூரகத்தை அடைந்த திருமால் எனது தியான யோகத்தால் யோனி பீட வடிவாகத் தோன்றினார். மகிமா என்னும் சித்தி என்னை அடைந்தது. பின்னும் ஆயிரம் ஆண்டுகள் யோகத்தில் இருந் தேன். அநாகதத்தை அடைந்த உருத்திரர் தமது குணவடிவ மான உருவத்தைவிட்டு வடிவமற்றதும் மேன்மை யுற்றது மான ஓர் ஒளிப்பிழம்பாகத் தோன்றினார். அப்பொழுது கரிமா என்னும் சித்தி என்னை அடைந்தது. மேலும் ஆயிரம் ஆண்டுகள் கழித்து மகேசுவரர் ஒளியுருவாய்த் தோன்றினார். அப்போது இலகிமா என்னும் சித்தி என்னை யடைந்தது. மேலும் ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. சதாசிவர் பேரொளிப் பிழம் பாகத் தோன்றினார். பிராப்தி என்னும் சித்தி என்னை அடைந்தது. மேலும் ஆயிரம் ஆண்டுகள் சென்றன. மகா

ருத்திரர் முதலியவர்களின் ஒளியெல்லாம் கூடி ஒளிமயமாய்த் தோன்றின. பிராகாமியம் என்னும் சித்தியும் என்னை அடைந்தது. மேலும் ஆயிரம் ஆண்டுகள் சென்றபின் அவ்வொளியானது பிரம வைணவ பீடங்களோடு கூடிய இலிங்க வடிவாகத் தோன்றியது. அப்போது ஈசுவரத் தன்மை அளிக்க வல்ல 'ஈசத்துவம்' என்னும் சித்தி என்னை அடைந்தது. மேலும் ஆயிரம் ஆண்டுகள் சென்ற பின்னர் மிகப்பெரியதும் பரஞ்சோதி சொரூபம் உடையதும் உலகத்திற்கு மேலான காரணமானதும் ஆகிய மகாலிங்கம் எனக்கு முன்னே வெளிப்பட்டுத் தோன்றியது. என் இருதயத்தில் தோன்றிய இலிங்கம் உடனே மறைந்தமையால் கண்ணை விழித்தபோது எனக்கு எதிரே இலிங்கம் இருப்பதைப் பார்த்தேன்.

அவ்விலிங்கத்தின் மத்தியில் பராசக்தி ஒரு பாதியில் பொருந்திய திருவுரு உடையவரும் மாயையை உடையவருமாகிய பரமேசுவரரைப் புறக்கண்ணால் தரிசித்து நமக மந்திரங்களால் வணங்கிப் பின்வருமாறு தோத்திரம் செய்தேன் :

1. எல்லா உயிர்கட்கும் உணவை யளிப்பதும் வினைகட்கு ஏதுவானதும் சித்தர், தேவர், முனிவர் முதலியோர்க்கு ஆதாரமானதும் எவ்வுயிர்க்கும் இம்மை மறுமை இன்பங்களையும் வீடுபேற்றையும் அளிப்பதுமாகிய பூமி வடிவானவரே, போற்றி.

2. ஆறு, கிணறு, தடாகம் இவற்றால் உயிர் வாழ்வை உண்டு பண்ணுவதும் உலகப் படைப்புக்கு முதலாவதும் தாகத்தைத் தணிப்பதும் ஆகிய நீர் வடிவானவரே, போற்றி.

3. சிறந்த மந்திரங்களாலே தன்னிடத்தே ஓமம் செய்யப்பட்ட அவியுணவினைத் தேவர்கள்பால் செலுத்துவதும் உயிர்வாழ்வுக்கு மருந்தாவதும் பூமியைத் தூய்மை செய்வதுமான தீயுருவானவரே, போற்றி.

4. உயிர்களின் உயிர்வளியாகத் திகழ்வதும் கண்ணுக்குத் தெரியாததும் தூய்மையுடையதும் ஊற்றுணர்வால் அறியப்படுவதும் அண்டங்கள் பலவற்றையும் நிலைநிறுத்துவதுமான காற்றுருவானவரே, போற்றி.

5. எங்கும் பரவி எவற்றையும் தன்னுள் அடக்கி நிற்ப தும் செவிக்குப் புலனாகும் ஒலிப்பண்பை யுடையதும் அருவ மானதும் உடலில் மகேசனுக்கு உறையுளாவதும் தடைசெய் யப்படாததும் ஆகிய ஆகாய உருவினரே, போற்றி.

6. இருட்படலங்களை அழிப்பதும் மக்களின் அறியாமை யைப் போக்குவதும் மறைமுடிவின் சாரமானதும் உலகத் தின் கண்ணாகத் திகழ்வதுமாகிய ஞாயிற்று வடிவினரே, போற்றி.

7. வெப்பத்தைப் போக்குவதும் அமுதத்தைப் பெருக்கு கின்ற தண்கதிர்களால் தேவர்களை மகிழ்விப்பதும் ஆகிய திங்கள் வடிவினரே, போற்றி.

8. மகா மந்திரத் தொகுதிகளோடு கூடிய எண்ணற்ற வேள்விகளால் தேவர்களை மகிழ்விக்கின்ற இயமானன் என்னும் உயிர் வடிவானவரே, போற்றி.

நிலம், நீர், நெருப்பு, காற்று, வான், ஞாயிறு, திங்கள், உயிர்த் தொகுதி என்னும் எட்டு மூர்த்தங்களை உடைய மகாலிங்கத்தின் தோத்திரமாகிய இந்த எட்டுப் பனுவல்களை யும் அன்புடன் பாராயணம் செய்வோர் இம்மை, மறுமை, வீடுபேறு ஆகிய மும்மை நலங்களையும் உறுதியாகப் பெறுவர்.

இவ்வாறு என்னால் துதிக்கப்பெற்ற மகாதேவர் கருணை யோடு என்னைப் பார்த்து 'நீண்ட கால்களையுடைய கொக்கே, எம்மிடமிருந்து வேண்டிய வரங்களைக் கேட்பாயாக' என அருள்செய்தார். அதுகேட்ட யான் 'மகாதேவரே, தேவரீ ருடைய திருவருளால் சிவமாந்தன்மைப் பெருவாழ்வை அடைய விரும்புகின்றேன். வேறொன்றையும் நான் விரும்ப வில்லை. உலக உயிர்கள் நின்திருவருளைப் பெற்று உய்யும் வண்ணம் தேவரீர் இம்மகாலிங்கத்தில் எப்போதும் எழுந் தருளி இருத்தல் வேண்டும். எனக்குக் காட்சியளித்த பங்குனி மாத உத்திரநாளாகிய இந்நாளில் இத்தலத்தில் உம்மை யார் பூசிக்கின்றார்களோ அவர்கள் ஏழாயிரம் ஆண்டுகள் யான் செய்த தவத்தினால் முயன்றுபெற்ற பயனையும் மேலும் அவர்கள் தம் மனத்தில் எண்ணியவற்றையும் தேவரீர் அவர்

களுக்குத் தந்தருளவேண்டும்' என்று அப்பெருமானை வேண்டிக்கொண்டேன்.

அப்போது இறைவன், 'நீ உன்னுடைய சிரசில் ஆஞ்ஞா மத்தியில் இவ்விலிங்க சொரூபமாக நம்மைத் தியானிப்பாயாக. மூலாதாரத்தில் அருவுருவாகிய ஆனைமுகனுகவும் எம்மைப் போற்றுவாயாக. எம்முடைய ஆணைப்படி ஆயிரம் ஆண்டுகள் சிவமாந் தன்மைப் பெருவாழ்வைத் தரவல்ல பெருஞ்சித்தியை அடைவாய். இத் தலத்தில் நீ வேண்டிய படியே அன்பர்களுக்கு அருள்செய்து இவ்விலிங்கத்தில் பிரம கற்பம் வரையில் விளங்குவோம்' என்று அருள்செய்து மீண்டும் என் நெஞ்சத்துள்ளே மறைந்தருளினர். பகனுகிய எனது வேண்டுகோளின்படி அன்பர்களுக்கு அருளவேண்டி 'பகேசுவரர்' என்னும் பெயரோடு சிவபெருமான் இலிங்க வடிவாக உள்ளார். மூலாதாரத்தில் விநாயகரையும் பிரமரந்திரத்தில் சிவனையும் எப்பொழுதும் தியானித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறினர்.

3. பொல்லாப் பிள்ளையார் வரலாறு உரைத்தது

என் பிரமரந்திரத்தில் தியானிக்கப் பெற்றிருந்த சிவலிங்கமானது மூலாதாரத்தில் உள்ள பிரமத்தின் ஒளியாகிய தீயினாலே உருகியொழுகுந் தன்மை பெற்றது. குண்டலினியாகிய அமுதசக்தி மூலாதாரத்தில் உள்ள மூலப் பிரகிருதியோடு கலந்து ஆதாரமண்டலத்தில் தங்கியது. அப்போது காரிய காரணத் தன்மையிலிருந்து நீங்கினேன். அதனால் எல்லா உலகங்களையும் வசீகரிக்கும் 'வசித்துவம்' என்னும் சித்தி என்னை அடைந்தது.

மூலப் பிரகிருதி ரூபமானதும் துரியாதீதத்தின் இடமானதுமான ஆதார சக்கரத்தில் ஒரே தியானத்துடன் ஆயிரம் ஆண்டுகள் இருந்தேன். அப்போது ஒரு சோதி தோன்றிற்று. அதன் நடுவில் செந்தாமரையில் வீற்றிருப்பவரும் செம்மேனியினரும் இரண்டு சக்திகளால் தழுவப் பெற்றவரும் தம் கைகளால் அபயம், வரதம், அங்குசம், பாசம், மோதகம் இவற்றைத் தாங்கியவரும் ஆகிய விநாயகப் பெருமானை அவர் அருளால் கண்டு அவர்தம் பொருள்சேர் புகழ்த்திறங்களைப் பலவாறு போற்றித் துதித்தேன்.

யான் அன்பினாற்கூறிய போற்றுதல்களைக் கேட்டு மகிழ்ந்த விநாயகப் பெருமான் என்னை நோக்கிப் பின்வருமாறு அருள் செய்தார். 'முற்கலனுடைய புத்திரனே, நீ கூறிய இத்தோத்திரங்களை மூன்று காலங்களிலும் அன்போடு ஓதும் அறிவுடையோன் நன்மக்கட்பேறு முதல் விரும்பிய செல்வங்கள் எல்லாவற்றையும் அடைவான். முடிவில் சிவ வடிவத்தையும் அடைவான். எம்முடைய சத்தியாகிய சித்தி பிரமத் தன்மையைத் தரத்தக்கவள். அவள் எமது ஞான சக்தியாகிய புத்தி தேவியோடும் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளோடும் உன்னிடத்தில் தங்குவாள். நீ பேரானந்தத்தை உடையவனாய்ப் பிரம கற்பம் வரை உலகத்தில் இருப்பாய்.

உன்னைச் சரணடைந்த தேவர் மனிதர் முதலியோர்க்கு ஞானத்தையும் வைராக்கியத்தையும் பக்தியையும் கொடுத்தற்பொருட்டு எம் ஆணையால் நீ இங்கு நிலைபெறுவாயாக. நீ திருமால், பிரமன் முதலிய தேவர்களாலும் தொழத் தக்கவன் ஆகுக. உனக்கு அருள்புரிந்த ஆவணி மாதத்து

அமாவாசை நாளாகிய இன்று இத் தலத்தில் யார் எம்மை அன்போடு வழிபடுகிறார்களோ அவர்கள் வேண்டிய வரங்களை யெல்லாம் தந்தருள்வோம். அன்புடைய பகனாகிய உன்னால் வழிபடப் பெற்ற காரணத்தால் 'பகசித்தி விநாயகர்' என்னும் பெயரோடு இந்தத் தலத்தில் பிரமகற்பம் வரை தங்கி எல்லாச் சித்திகளையும் தந்து நிலைபெறுவோம்' என்று கூறி விநாயகப் பெருமான் என் உள்ளே மறைந்தார்.

பின்னர், விநாயகப் பெருமான் பகேச லிங்கத்தின் வலது பாகத்தில் தோன்றி நின்றார். உடனே யான் அவ்விநாயகப் பெருமானையும் சிவலிங்கப் பெருமானையும் புறத்தே பூசித்து முற்கூறிய 'இந்திரத்தியும்நம்' என்னும் தடாகக் கரையில் போயிருந்து நிட்டை கூடினேன். எனக்குச் சித்தி கிடைத்த நாளில் ஆண்டுக்கொரு முறை இத் தலத்தை அடைந்து விநாயகரைப் பூசிப்பேன். இன்றைக்கும் அந்த நாள். விநாயக பூசை என்னுற் செய்யப்பட்டது. நான் செல்லும் போது மார்க்கண்டேயரும் இங்கு வந்து சேர்ந்தார். அவருடன் பேசிக் கொண்டிருக்கும்போது உன்னைக் கண்டு உன் வரலாறு அறிந்துகொண்டேன். இனி இங்கே இந்தச் சிவலிங்கப் பெருமானையும் நீ வழிபட்டு உனது சாபம் நீங்கி உனது ஆசிரமத்துக்குப் போவாயாக எனப் பக முனிவர் நாரைக்கு அருளிச் செய்தார்.

நாரை மறுபடியும் பகமுனிவரை வணங்கி, மார்க்கண்டேயர் குறிப்புப் பற்றியும் மார்க்கண்டேயருடன் உண்டான நட்புப் பற்றியும் சொல்லும்படிப் பணிவுடன் கேட்டது. பகமுனிவர் கூறுவாராயினர் :

மிருகண்டு முனிவர் குமாரர் கச்யப முனிவர். சிறப்பு வாய்ந்த அவர் பரமசிவனைக் குறித்துத் தவஞ் செய்தார். இறைவன் தோன்றியபோது, உருவழகும் குண நிறைவும் சிவபக்தியும் ஞானமும் யோகசித்தியும் உடைய ஒரு புதல்வனை அருளுமாறு முனிவர் வேண்டினார். 'நீ வேண்டியபடி ஒரு மகன் பிறப்பான், ஆனால் பதினாறு வயதுவரை வாழ்ந்து எம்மை அடைவான்' என்று திருவாய் மலர்ந்து இறைவன் மறைந்தார்.

மிருகண்டு முனிவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அப்பிள்ளை தன் தந்தையின் மூலம் வரத்தின் தன்மையை

அறிந்தான்: பின் நாரதரை அணுகித் தான் நெடுங்காலம் வாழ்வதற்குரிய வழியைச் சொல்லுமாறு வேண்டினன்.

'மிருகண்டுவின் மகனே, உயிரானது சுவாசப் பிரமாணம் உடையது. ஆண்டு அளவை உடையது இல்லை. மனிதர்களால் பதினறு ஆண்டுகளில் பத்துக்கோடி மூச்சு விடப்படும். நீ சுவாசத்தை இயற்கையாக இயங்க விடாது யோக மார்க்கத்தால் தடுத்துக் குறைவாக விட்டு உன் வாழ்நாளைப் பெருக்கிக் கொள்வாய். முற்கல முனிவரின் குமாரர் கோட்டான் முனிவர். அகூபாரர் என்பது அவர் பெயர். அவர் இமய மலையில் தவம் செய்துகொண்டிருக்கிருர். அவரை அடைந்து யோக மார்க்கத்தை அறிந்துகொள்' என்று நாரதர் கூற, ஐந்து வயதினரான மார்க்கண்டேயர் அவ்வாறே சென்று ஓராண்டுக்குள் நுட்பமாக அறிந்து கொண்டார்.

அங்கிருந்து புறப்பட்ட மார்க்கண்டேயர் பல தலங்களில் தங்கினர்; யோக நெறியில் மூச்சுகளைக் குறைத்துவிட்டுக் கொண்டே வந்து திருக்கடவூரில் ஓராண்டுக்காலம் யோகத்தில் அமர்ந்தார். இம்முறையால் பதினேராண்டுகளில் ஓராண்டுக்குரிய மூச்சுக்கள்தான் யோக நெறியில் விடப்பட்டன. ஆதலால் மார்க்கண்டேயருக்கு அப்போது வயது ஆருயிற்று; பதினறு ஆகவில்லை.

இந்த நுட்பத்தை அறியாத இயமன் பொதுவான ஆண்டுக் கணக்கில் மார்க்கண்டேயருக்கு வயது பதினறு ஆயிற்றென்று அவர் உயிரைக் கவர்ந்து செல்ல வந்தான். சிவலிங்க பூசையில் இருந்த முனிவரைப் பாசத்தால் மாட்டி இழுத்தான். அதனுற் கோபமடைந்த மகாதேவர் இயமனைத் தமது காலால் உதைத்தார்; பின்னர் தேவர் வேண்டிக் கொண்டதற்கு இணங்க இயமனைப் பிழைக்கச் செய்தார்; மார்க்கண்டேயரைப் பார்த்துச் சிவபெருமான், 'நீ யோக சித்தியால் சீவன் முத்தன் ஆனுய். நீ பதினயிரம் ஆண்டுகட்கு ஒரு தடவை ஒரு மூச்சுவிடும் சக்தி உடையவனுய் ஏழு கற்பம் வரை நிலைத்திருந்து பின்னர் கைவல்லிய முத்தியையும் அடைவாய்' என்று அருளினர்.

எனது சீடனுகிய அகூபாரனுடைய சீடர் மார்க்கண்டேய முனிவர் வரலாறும் தமக்கும் மார்க்கண்டேயருக்கும் உள்ள தொடர்பும் பகமுனிவர் கூறினர்.

---

4. அகூபாரன் முதலியோர் வரலாறு

கணகர் என்னும் முனிவர் சிறந்த துறவியும் உலக குருவு மாவார். அவர் பிராணிகளில் பக்குவமுடைய உயிர்களுக்கு ஞானசித்தியை அளிக்கும் பொருட்டு முற்கல முனிவரை ஞான குருவாக நியமித்தார். முற்கலர் ஆங்கிரச முனிவரின் குமாரர்.

மனிதர், தேவர்களுக்குக் குருவாகப் புருசுண்டி என்னும் சித்தரையும் விலங்குகளுக்குக் குருவாகப் பூஷா மிருகம் என்னும் சித்தரையும், பறவைகட்குக் குருவாக பகமுனிவரை யும், பாம்பு முதலியவற்றிற்குக் குருவாக கிருகலாச முனி வரையும், நீர்வாழ்வன வற்றிற்குப் பாபாரகர்ணன் என்னும் ஆமையையும் நியமனம் செய்தார். இவர்கள் ஆங்கிரச முனிவரால் அவ்வச் சாதியில் பிறந்த பிள்ளைகளாவார்கள்.

அகூபாரன் என்னும் கோட்டான் எனது சீடனும் தம்பியு மாகும். அது முற்கலர் ஆணைப்படி என்னிடம் பிரம தத்து வத்தை அறிந்தது. அதனிடம் மார்க்கண்டேயர் பிரம தத்து வத்தை அறிந்து ஏழு கற்பகாலம் வாழ்ந்தார்.

இந்திரன் சபையில் அவனோடு சம ஆசனத்தில் இருந்து இந்திரத்தியும்நன் என்னும் அரசன் அட்டதிக்குப் பாலகர் களால் பூமிக்குத் தள்ளப்பட்டான். புண்ணிய வசத்தால் அவன் இமயமலையில் உள்ள மார்க்கண்டேயர் ஆசிரமத்தில் விழுந்து அவரிடம் தன் வரலாறு கூறினன். மார்க்கண்டேயரும் அவர் குருவாகிய அகூபாரரும் இந்திரத்தியும்நனைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று சொன்னார்கள். பிறகு மார்க்கண்டே யரும் இந்திரத்தியும்நனும் இந்திரத்தியும்ந சரசு என்னும் தடாகக் கரையில் இருந்த என்னைக் கண்டனர். அப்பொழுது பிரமத்தை அறிந்த உம்மால் இந்திரத்தியும்நன் என்னும் அரசன் அறியப்பட்டவனா, என இந்திரத்தியும்நன் கேட்டான். நானும் தெரியாது என்று கூறி, 'வயதால் மூத்த என் தமையன் பாபாரகர்ணன் என்னும் ஓராமை இத்தடாகத்தில் இருக் கிறது. அதைக் கேட்போம்' என்று கூறினேன். பிறகு மூவ ருடன் தடாகத்தை அடைந்து, "பிரமத்தை அறிந்த உம்மால் இவ்வரசனை அறியக்கூடுமோ" என்று கேட்டேன்.

'இந்திரத்தியும்நன் என்னுலும் இங்குள்ள என் போன்ற வர்களாலும் நன்கறியப்பட்டவன்; அவன் அந்தணர்களுக்கு அளவற்ற தானங்கள் செய்தவன். அந்தத் தான நீரால் உண்டானதே இங்குள்ள இந்திரத்தியும்ந சரசு' என்று கூறி அவனைத் தழுவிக்கொண்டு, பிரம தத்துவத்தை உபதேசித்தார். அவ்வளவில் அவன் வைகுண்டம் சார்ந்தான்.

மயூரேசம், பகாச்சிரம் என்னும் இரு தலங்களும் எனக்குச் சிறந்தவை. இந்திரத்தியும்ந தடாகமே எனது வாழ்விடம். விநாயக சதுர்த்தியிலே மயூரேச விநாயகரை வழிபாடு செய்து, ஆவணி மாதத்து அமாவாசையில் எல்லா நன்மைகளையும் தரும் இந்தத் தலத்தில் வழிபாடு செய்துவருகிறேன். நீயும் இத்தலத்தில் விநாயகப் பெருமானையும் சிவலிங்கப் பெருமானையும் வழிபட்டுச் சாப நீக்கம் அடைந்து உனது பதரி வனத்தை அடைவாய்' என்று சொல்லி மயூரேசபுரத்தை அடைந்தார்.

5. நாரைக்கு அருள்புரிந்தது

நாராயணப் பறவையாகிய நாரை பகமுனிவர் சொன்ன படி விநாயகப் பெருமானை அறுகங் கொழுந்துகள், வன்னிப் பத்திரங்கள், மந்தார மலர்கள், பல்வேறு மலர்கள் கொண்டு வழிபட்டது ; ஆறெழுத்து மந்திரத்தையும் ஆழ்ந்த திடமான பத்தியோடு நூறு ஆண்டுகள் சொல்லிற்று. விநாயகப் பெருமான் புருசுண்டி, அஞ்சர், அவ்வியத்தர் முதலிய சித்தர் களோடு தோன்றிக் காட்சி தந்தார். 'புண்ணியவானே, நாராயணப் பறவையே உனக்கு வேண்டும் வரத்தைக் கேள் தருகிறேம்' என்றூர்.

அதைக்கேட்ட நாரை,'விநாயகப்பெருமானே, உம்முடைய சாரூப்பியத்தை அடைந்தவராகிய புருசுண்டி முனிவரை அவமதித்தமையால் எனக்குண்டாகிய சாபக்கேட்டினை நீக்கி யருள வேண்டும்' என்று கேட்டுக்கொண்டது.

சித்தர்களிலும் எமது சாரூப்பிய நிலைபெற்ற புருசுண்டி முனிவன் மிக மேலானவன். அவனை அவமதித்த குற்றம் அவன் அருளாலும் எம் அருளாலும் மட்டுமே நீங்கும். அன்றி, அநேக கோடி புண்ணியங்களாலும் நீங்காது. எங்கள் இருவர் அருளாலும் உம் குற்றம் நீங்கிற்று. இந்த நல்ல நாளில் அன்போடு எவர் எம்மை வழிபட்டாலும் அவரின் பாபங்கள் அனைத்தும் நீங்கும். இந்தத் தலத்தில் கிருதயுகத்தில் உன்னல் வழிபடப் பெற்றமையால் யாம் **திருநாரைப் பிள்ளையார்** என்னும் பெயரோடு இருப்போம். நீ புருசுண்டி முனிவர் அருளியபடி இங்குள்ள பரமசிவனையும் வழிபட்டு நாரைப் பிறப்பினின்றும் நீங்கி உனது ஆசிரமத்தை அடைவாயாக' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

நாரை மறுபடியும் சிவலிங்கப் பெருமானை நன்ருக வழி பாடு செய்து உமையொரு பாகனுன இறைவனை நினைத்துத் தவம் புரிந்தது. நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் அவ்விலிங்க மத்தியினின்றும் உமையோடும் நந்தி முதலிய கணங் களோடும் சதாசிவப் பெருமான் தோன்றினர். நாரையானது பரமசிவனைக் கண்டதும் நமக மந்திரங்களால் துதித்து வணங்கியது.

நாரையின் வழிபாட்டிற்கும் வேண்டுதலுக்கும் மகிழ்ந்த சிவபெருமான் நாராயண முனிவனின் நாரை வடிவத்தை நீக்கினார்.

நாரை வடிவம் நீங்கிய நாராயண முனிவர் சிவபெருமானை நோக்கி, 'ஐயனே, உம்மிடத்து நிலையான அன்பு வேண்டும். என் பெயரொடு உம்முடைய திருப்பெயரும் சேர்த்துப் **பலாகேசுவரர்** எனத் தேவரீர் திருநாமம் வழங்கப்பெற வேண்டும். எனக்கு உம் அருள் கிடைத்த நன்னாளில் பத்தியுடன் வந்து எவர் வழிபாடு செய்யினும் அவருடைய பாவங்கள் அனைத்தும் நீங்க வேண்டும்' என வேண்டினார். இறைவன் அவ்வாறே அருள, நாரை வடிவம் நீங்கித் தரும பிராசாபதியின் குமாரராகிய நாராயண முனிவர் பதரிகா வனம் சேர்ந்தார்.



6. புருசுண்டி முனிவர் வரலாறு

சாரசுவத கற்பத்தில் கோதாவரிக் கரையில் விப்பிரப் பிரியன் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் கௌதம முனிவனை அடைந்து சிவமாந்தன்மையைப் பெறும் பேற்றை விரைவில் அடைதற்குரிய வழியைச் சொல்லுமாறு வேண்டினான். பரமேசனுக்கு லட்சாபிஷேக விதியினால் நீராட்டினால் அட்டமா சித்திகளோடு சிவமாந்தன்மையையும் பெறலாம் என்று முனிவன் சொன்னான்.

அதனைக் கேட்டு மகிழ்ந்த விப்பிரப்பிரியன் லட்சாபி ஷேகம் செய்யும் முறையைச் சொல்லுமாறு வேண்டினான். 'திருமஞ்சன காலத்திலே சமகாநுவாக முன்னாகப் பதினொரு முறை உருத்திரத்தைச் செபம் செய்து மஞ்சனமாட்டுதல் ஓரபிடேகம் என்று சொல்லப்படும். இப்படி இலட்சம் பிராமணர்களுக்கு விருந்தளித்து ஒரு இலட்சம் அபிடேகம் செய்தால் அது நாம் நினைப்பதை எல்லாம் அளிக்கும்' என்று முனிவன் கூறினான்.

விப்பிரப்பிரியன் கோடிசங்கரமென்னும் தலத்தில் பிராமணர்களோடு கூடிப் பரமசிவனுக்குத் தினம் நூறு அபிடேகம் செய்தான். இவ்வாறு ஆயிரம் முறையில் இலட்சம் அபிடேகம் செய்தான். ஆனால் விக்நசாந்தியின்பொருட்டு விநாயக பூசையைச் செய்யாமல் பெருமுயற்சி செய்து சிவனுக்கு மட்டும் நூறாயிரம் முறை திருமஞ்சனம் செய்தான். அதனால் அந்த அந்தணன் புத்தி மோகத்தை அடைந்தான். இலட்சத்திற்குப் பத்து அபிடேகம் குறைவாக இருக்கும் போதே விநாயகரின் மாயைத் தன்மையால் அறிவிழந்து வருத்தமுற்று, அட்டசித்திகளில் ஒன்றும் தனக்குக் கிடைக்க வில்லை என்றும் உருத்திராபிடேகம் இலட்சமும் பயனற்றுப் போயின என்றும் கூறி வெகுண்டு தன் கையில் இருந்த கௌரீ சிருங்கம் என்னும் பாத்திரத்தைச் சிவலிங்கத்தின் உச்சியில் எறிந்தான்.

அதைக் கண்டு மந்திரம் செபித்துக்கொண்டிருந்த அந்தணர்களெல்லாம் ஆ! ஆ! என்று அலறினார்கள். அப் பொழுது சிவபெருமான் தோன்றி; "நல்ல பயன் கிட்டும் வேளையில் பொறுமை இல்லாமல் வேடனைப் போல் நடந்து

கொண்டமையால் வேடனாகக் கடவாய்; வேடனாகிப் பிராமணர்களை வருத்தித் திரியும்போது என் பக்தனும் யோக சித்தனுமாகிய முற்கலனைக் கண்டு அவனருளால் சாப நீக்கம் அடைவாய். அவன் உபதேசத்தால் சித்திகளையும் அடைவாய்'' என்று சாபமும் சாப நீக்கமும் தந்து மறைந்தார்.

அந்தணனும் அதுகேட்டு வருந்திக் கௌதம முனிவன் சொன்னவாறு சிவனை இடையறுது நினைத்துத் திரிவேணியில் உயிர்விட்டான். பின்னர் அவ்வந்தணன் வேடர் குலத்திலே பிறந்து வளர்ந்து, எல்லோருக்குந் துன்பந் தந்து கட்குடித்து, களவு பொய்களிற் பயின்று வந்தான். ஒருநாள் ஓர் அந்தணனைக் கண்டு அவனைக் கொல்வதற்காகத் துரத்திக்கொண்டு ஓடினான். ஓடும்போது, இறைவன் அருளால் அங்கே யோகத்தில் சிறந்து பிரமத்தை அறிந்து வானத்தில் செல்பவனாகிய முற்கல முனிவனைக் கண்டான். அவ்வளவில் தன் கையிலிருந்த ஆயுதங்களை விட்டெறிந்தான். முனிவன் திருவடிகளில் வீழ்ந்து பிறவியிலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான்.

முற்கல முனிவன் அவ்வேடனுக்குக் கணேசப் பெருமானது திருநாம மந்திரத்தை உபதேசித்தான். முனிவன் கட்டளைப் படியே வேடன் ஓர் மரத்தடியில் தங்கினான்; கணபதி நாம மந்திரத்தை இடைவிடாது சொன்னான். உணவும் கொள்ளாமல் கல்லுப்போல அசையாதிருந்து யோகத்தைப் பெற்று அதுவே குறியாக நிலைத்து விட்டான். அவன்மீது புற்று வளர்ந்து மூடிச் செடிகளும் சுற்றி மறைத்தன.

இப்படி ஆயிரம் ஆண்டுகள் சென்றன. அவ்வழியே வந்த முற்கலன் புற்றினால் மூடப்பட்டிருக்கும் தன் மாணாக்கனைப் பார்த்தான். கண் மாத்திரம் தோன்ற, உடலமெல்லாம் புற்றால் மூடப்பட்ட நிலையில் இருந்த வேடனின் மேலிருந்த புற்றுமண்ணை நீக்கி அபிமந்திரித்த நீராலே அவ்வேட முனிவனது உடல் முழுவதையும் நனைத்தான்.

உடனே அந்த வேட முனிவன் துதிக்கையுடன் விநாயக மந்திரத்தைச் செபிப்பதுமாகிய சிறந்த உடலை அடைந்தான். முற்கல முனிவனால் உணர்த்தப்பட்ட வேடமுனிவன் தன் இரு

கண்களையும் திறந்தான். அப்போது வேடமுனிவன் கண்களிற் றோன்றிய தீ மின்னல்போல விண்ணில் சென்று மூவுலகையும் சுடத் தொடங்கியது.

பிறகு வேடனாகிய அந்தண முனிவன் விநாயக நாமத்தைத் தனக்கு உபதேசித்த அருளாளனாகிய தனது குருவைக் கண்டு மகிழ்ச்சியோடு தனயன் தந்தையைத் தழுவுவதுபோலத் தழுவிக்கொண்டான். புற்றிலிருந்து மீளப்பிறந்த புதல்வனாகிய அவனை முற்கல முனிவன் கொண்டாடினான்; புருவமத்தியிலிருந்து துதிக்கை முளைத்திருப்பதால் அவனுக்குப் 'புருசுண்டி' எனப் பெயரிட்டு மகா மந்திரத்தை உபதேசித்தான். 'விநாயகப் பெருமான் எல்லாராலும் பூசிக்கப் பெறுதல் போல், நீயும் பூசிக்கப்படுவாய். உன்னை வழிபடுபவர்கள் பாவ நீக்கம் பெறுவார்கள். பிறவிப் பயனும் பெறுவார்கள். உனக்கு என் வாக்குப்படி வயது ஒரு இலட்ச கற்பகாலமாகும்' என மேலும் பல வரங்களை முற்கல முனிவன் தந்தான்.

பிரமா முதலிய தேவர்களும் நாரதர் முதலிய முனிவர்களும் வந்து புருசுண்டியை வணங்கி வாழ்த்தினர். புருசுண்டி ஏகாட்சர மந்திரமாகிய மகாமந்திரத்தைச் செபம் செய்யத் தொடங்கினான். நூறு ஆண்டுகள் சென்ற பிறகு விநாயகப் பெருமான் புருசுண்டி முனிவனுக்குக் காட்சி தந்து, பிரமத் தன்மை முதலாகிய பத்துச் சித்திகளும் அளித்தார்.

இங்ஙனம் விநாயகப் பெருமானது திருவருளால் முற்கல முனிவரின் புத்திரனாகிய புருசுண்டி முனிவன் வரங்களை அடைந்து பிரம வித்துக்களில் உயர்ந்தவனாயும் ஞானியாயும், நாமலம் என்னும் சிறந்த தலத்தில் வசித்து வந்தான்.

7. பொல்லாப் பிள்ளையார் திருவிளையாடல் குணவானுக்கு அருள்புரிந்தது

முனிவர்கள் வேண்டுகோளின்படி ஆறுமுகப் பெருமான் அருளியது :

மகத தேசத்தைச் சந்திரசேனன் என்னும் அரசன் அறநெறிப்படி அரசாண்டு வந்தான். அவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவர்கள் வயிற்றில் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவன் பெயர் பலவான். அவன் தந்தை சொற்படி கிரிவிரச நகரத்தில் இருந்து பூமியை ஆண்டான். இரண்டாம் மனைவியின் மகனான வீரியவான் பாடலிபுரத்தி லிருந்து அரசு செலுத்தினான். சந்திரசேனன் வனத்திற் சென்று யோகம் செய்து விண்ணுலகடைந்தான்.

பலவான் பிராமண குலத்திலும் சத்திரிய குலத்திலும் வைசிய குலத்திலும் சூத்திர குலத்திலும் சூத குலத்திலும் ஆக ஐந்து பெண்களை மணந்துகொண்டான். ஐந்து மனைவியர்க்கும் பதினாறு குழந்தைகள் பிறந்தனர். சத்திரிய குலத்துப் பெண்ணாகிய பட்டத்தரசிக்கு மட்டும் பத்துப் பிள்ளைகள் பிறந்தனர். பிள்ளைகள் பதினாறுபேரும் பிருசாசுவனிடத்தில் வில் வித்தை கற்றனர்.

இப்பதினாறு குமாரர்களும் அழகுடன் வில் வித்தை, மற்போர், கதாயுதப்போர், வாட்போர் முதலியவற்றில் சிறந்த பயிற்சி பெற்றிருந்தனர் ; வேதம் தரும் சாத்திரங்களி லும் வல்லவராய் விளங்கினர். அது கண்டு மன்னன் மகிழ்ந்து, பட்டத்தரசியின் மைந்தனும் அறிவிற் சிறந்தவனுமாகிய துர்முகனுக்கு முறைப்படி இளவரசுப் பட்டம் சூட்டினான் ; மற்றைக் குமாரர்களையும் துர்முகனுக்கு அமைச்சர்களாகவும் படைத் தலைவர்களாகவும் நியமித்தான்.

வீரியவான் கர்க்க முனிவனின் மகள் சுகந்தி குந்தலையையும் விதர்ப்ப மன்னன் மங்கையராகிய சுந்தரி, மங்களாம்பிகை என்னும் இருவரையும் மணந்துகொண்டான். சுந்தரியிடம் தருமவான், மருத்துவான், சாபவான் என்னும் மூவர் பிறந் தனர். சுகந்தி குந்தலையிடம் குணவான் பிறந்தான் ; இவன்

மிக்க அழகுடையவன். மங்களாம்பிகையிடத்தில் திருதிமான் சத்தியவான் என்னும் இருவர் பிறந்தனர்.

தருமவான் என்னும் மூத்த அரசிளங் குமாரனுக்கு வயது ஏழு நடைபெறும்பொழுது, துர்முகனின் மாமன் பலவானேடும் பல அரசர்களோடும் சேர்ந்து விரியவானை வஞ்சனையாகப் போர் செய்து வென்றுன்.

துர்முகனுடைய மாமனுகிய துச்சனியென்பவன் தான் வென்ற நாட்டைப் பலவானுகிய மைத்துனனுக்குக் கொடுத்து விட்டு அரசர்களோடு தன் நாட்டை அடைந்தான்.

நாட்டை இழந்த வீரியவான் தன் மனைவி மக்களுடன் காட்டையடைந்து முனிவர்களுடன் வசித்து வந்தான். புண்ணிய காலமாகிய துலா மாதத்தில் காவிரியில் நீராடுவதற்குக் கௌதமன் முதலாகிய முனிவர்கள் ஓமாம்புலியூர் என்னும் தலத்தை அடைந்தார்கள். வீரியவானும் தன் மனைவி மக்களுடன் அம்முனிவர்களின் பின் சென்றுன்.

அங்ஙனம் வந்த முனிவர்களிற் சிலர் ஓமாம்புலியூரிலும் சிலர் இராமநாதபுரத்திலும் சிலர் தெற்கிருப்பிலும் சிலர் அநந்தேசுரத்திலும் இருந்தார்கள். வீரியவான் தன் மனைவி மக்களுடன் திருநாரையூரிலே இருந்தான்; அப்பொழுது தன் மக்களுக்குத் தானே வித்தைகளைக் கற்பித்தான்.

வீரியவான் மக்களுள் ஒருவனுன குணவான் விளையாட்டில் பற்றுடையவனுக இருந்தான். அவன் தந்தையையும் சகோதரர்களையும் ஏமாற்றிவிட்டு அதிகாலையில் முனிகுமாரர்களுடன் விநாயகர் ஆலயத்திற்குப் போய் வரலானுன். அதிகாலையில் நீராடி அறுகங் கொழுந்தும் வன்னிப் பத்திரமுங் கொண்டு பொல்லாப் பிள்ளையாரை அருச்சித்து மண்ணிஞல் செய்த மோதகங்களைப் பத்தி பாவனையோடு நிவேதனம் செய்து விநாயகர் நாமாவளியைச் செபித்துக்கொண்டு ஒரு யாமம் வரை தினந்தோறும் தியானம் செய்துகொண்டிருப்பான். பிறகு மற்ற சிறுவர்களுடன் வீட்டுக்கு வருவான்.

குணவான் வித்தைகள் கற்காமல் பூசையில் ஈடுபடுவதை அவன் தாய் அறிந்து வெறுத்தாள். தேவ பூசையில் கருத்துடையனுய் விளையாட்டிற் காலம் கழிக்கும் அவனுக்கு உணவு

தர மறுத்தாள். 'பொல்லாப் பிள்ளையாரே உனக்கு உணவு அளிக்கும், போ' என்று வெளியே துரத்தினாள்.

குணவான் பொல்லாப் பிள்ளையாரை அடைந்து, அழுது கொண்டு 'விநாயகப் பெருமானே, இனி உம்முடைய பூசையைக் கைவிட்டு வீடு போக மாட்டேன். நீர் உணவு அளித்தால் உண்பேன். வேறு பிறர்பால் உணவு வேண்டேன்' என்று கூறிப் பெருமானையே இடைவிடாது தியானம் செய்து கொண்டிருந்தான்.

அன்று மாலை குணவானது தாய் கோயிலுக்கு வந்து யோகிபோல அசைவற்றுப் பொலிவுடன் தியானம் செய்யும் தன் மகனை உணவு உண்ண வீட்டிற்கு அழைத்தாள். குணவான் அவளால் தரப்படும் உணவை ஏற்க மறுத்தான்; இறைவன் தரும் உணவையே உண்ணப் போவதாகக் கூறி விட்டுத் தியானத்தில் அமர்ந்தான். அவன் செய்கையைக் கேட்ட வீரியவான் அவனை வெறுத்தான். 'மனிதரில்லாத இடத்தில் இருக்கும் அவன் விலங்குகளுக்கு இரையாகட்டும். அவனைப் பற்றி எனக்கு அக்கரை இல்லை' என்று சொல்லித் தன் செயல்களைச் செய்யச் சென்று விட்டான்.

அரச குமாரனாகிய குணவான் தனியே இருப்பதால் பயமில்லாதவனாகவும் நோயற்றவனாகவும் விநாயகப் பெருமானையே தியானித்துக் கொண்டிருந்தான். அதனால் அவனுடைய புறக்கரணங்கள் ஒடுங்கின. அப்பொழுது விநாயகப் பெருமானின் கிங்கரனாகிய விக்நம் என்பவன் தோன்றிப் பல வகையான அஞ்சத்தக்க வடிவங்கொண்டு குணவானை அச்சுறுத்தினான். குணவான் தியானத்தில் இருந்ததால் அச்சம் தோன்றாமல் யோகி வேந்தர்போல் இருந்தான். ஒருநாள் முழுதும் உணவு இல்லாமல் கழிந்தது.

பொல்லாப் பிள்ளையார் அவன் பத்தியால் மகிழ்ந்து சித்திரை மாதத்தில் வளர்பிறையும் துதியையும் கூடிய நல்ல நாளில் விடியற்காலத்தில் சித்தி புத்தியுடன் காட்சி தந்தார். அந்தத் தோற்றத்தைக் கண்டு குணவான் விநாயகப் பெருமானைப் பலமுறை வணங்கி மகிழ்ந்தான்.

அப்போது பொல்லாப் பிள்ளையார் குணவானாகிய சிறுவனைத் தம் திருக்கரத்தால் அன்போடு அணைத்துக்

கொண்டார். புத்திதேவி அவனுக்குப் பாலூட்டி அதன்வழி அறுபத்துநான்கு கலைகளையும் தந்தாள். சித்திதேவியும் அவனை எடுத்து அணைத்துப் பாலூட்டி அட்டமாசித்திகளையும் அளித்தாள். பொல்லாப் பிள்ளையார் அவனை நோக்கி, 'அளவில்லாத பலமும் அளவில்லாத அழகும் உனக்கு அளித்தோம். போர் நேர்ந்தால் என்னை நினைப்பாயாக. நாம் அனைத்து வகை ஆயுதங்களும் நிறைந்த தேர் ஒன்று அளிப்போம். அதனால் நீ எல்லோரையும் வென்று சிறப்படைவாய். இந்த உலக இன்பங்களை நூறுயிரம் ஆண்டுகள் அனுபவித்து முடிவில் உன் கணத்தாரோடு எம்மை அடைவாய்! நீ எம்மைக் கண்களாரக் கண்டு வரம்பெற்ற இந்த நாளில் இந்தத் தலத்திற்கு வந்து எவர் வழிபட்டாலும் அவர்களுக்கும் இப்படியே எல்லா நன்மையும் அருளுவோம்' என்று கூறி மறைந்தார்.

பிறகு குணவான் பொல்லாப் பிள்ளையார் ஆலயத்தில் இரவைக் கழித்து மறுநாள் காலையில் வழிபாடு முடித்துக் கொண்டு வீடு சென்றான். விநாயகப் பெருமான் அருள் பெற்று ஞான ஒளி வீசவரும் தன் மகனைக் கண்டு கட்டித் தழுவி மார்போடு அணைத்து அளவிட முடியாத களிப்படைந் தாள் அவன் தாய். குணவான் தந்தை இச்செய்தி அறிந்து ஏனைய மைந்தர்களுடனும் கௌதம முனிவருடனும் வந்து குணவானைப்பற்றிய விவரங்களை அறிந்து கொண்டான். குணவான் விநாயகர் அருளைப்பெற்ற நன்மையைக் கௌதம முனிவர் ஞானக்கண்ணால் உணர்ந்து அச்சித்த குமாரனை வணங்கினர்.

8. வீரியவான் அரசாட்சி பெற்றமை

தேவகி மைந்தனுகிய கண்ணன் பிள்ளைப் பருவத்திலேயே பல சித்துகள் செய்தமை போலக் குணவானும் பிள்ளைப் பருவத்திலேயே பல சித்து விளையாட்டுகள் நிகழ்த்தினுன்.

இவ்வாறிருக்கும்போது மாசி மாதத்தில் கௌதமர் முதலிய முனிவர்கள் தம் மனைவி மார்களுடன் கோதாவரிக்கு நீராடச் சென்றனர். குணவானும் அவர்களுடன் சென்று அங்கும் பல சித்துகள் செய்தான். தன் சித்து வன்மையால் சித்தபுரம் என்னும் பெயரால் ஒரு நகரை நிறுவினுன். மக்கள் இன்பமாக வாழ்வதற்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் வளங்களையும் உண்டாக்கினுன். அந்நகரத்தின் நடுவில் சங்கநிதி பதும நிதிகளோடு விளங்கும் ஒப்பு உயர்வற்ற அரண்மனையில் வீரியவான் தங்கினுன்.

பல நாடுகளிலிருந்தும் நால்வகை வருணத்தினர் சித்த புரத்தில் குடியேறினர். எல்லா வளங்கள் நிறைந்ததும் இன்பம் தருவதும் தூய்மை உடையதுமான அந்நகரம் குபேர புரியை ஒத்திருந்தது. நகரின் புறத்தே இந்திரனின் உவ வனத்தைக் காட்டிலும் மேலான வனம் ஒன்று இருந்தது. அவ்வனத்தில் எண்பத்தெண்ணுயிரம் முனிவர்கள் மகிழ்ச்சி யோடு வாழ்ந்தனர். வீரியவான் மனு முறையாக அரசு செலுத்தினுன்.

வீரியாவன் மைந்தர்கள் அனைவரும் பத்தாண்டுக்காலம் கௌதம முனிவரிடம் எல்லாக் கலைகளையும் கற்று மிகவும் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சதக்கினி என் னும் படைக்கலத்தின் இரகசிய உண்மையறிந்த சித்தனுகிய குணவான், அளவற்ற பலமும் கோடி மன்மதர் அழகும் பூமி போன்ற பொறுமையும் உடையவனுகவும் குணநலங்களால் எல்லோருடைய உள்ளங்களையும் கவரக் கூடியவனுகவும் தாய் தந்தையர், உடன்பிறந்தோர், சான்ருேர்களின் கருத்தறிந்து நடப்பவனுகவும் சிறந்து விளங்கினுன்.

வீரியவான், தன் மூத்த மகன் தருமவானுக்கு இருபத் திரண்டு வயது நடக்கும்போது தன் மக்கள் அனைவரையும் அழைத்தான். 'எனக்கு என் தந்தை அளித்த பாகம் பாடலி

புரம் ஆகும். எனது மாற்றுந்தாயின் மகன் பலவான், வஞ்சனையால் என் இராச்சியத்தைக் கவர்ந்துகொண்டான். அவன் இன்னும் பல நாடுகளைக் கைப்பற்றிச் சக்கரவர்த்தியாக விளங்குகின்றான். நான் உங்களைக் காப்பாற்றி வளர்ப்பதற்காகக் காட்டில் வாழ்ந்து வந்தேன்.

'இந்தச் சித்தபுரம் குபேரனது நகரம் போன்று இருப்பினும் முன்னோர் வழிவந்த நாட்டை இழந்த நாம் அரசராக மாட்டோம். இப்பொழுது நீங்களெல்லாரும் சிறந்த வீரர்களாகிவிட்டீர்கள். ஆதலால் படையெடுத்துச் சென்று அவர்களை நீதியொடு வென்று பலவானை அவன் புத்திரர்களோடும் மைத்துனனோடுங் கட்டி விரைவில் கொண்டு வாருங்கள்' என்று அறிவித்தான். குணவான் சகோதரர்கள் சூழ ஒரு அக்குரோணி சேனையுடன் பாடலிபுரத்தை அடைந்தான்.

குணவான் அந்நகரை அடைந்ததும் பலவானுகிய தன் பெரிய தந்தைக்குத் தூதன் ஒருவனை அனுப்பினுன். அவன் பலவானிடம் சென்று, 'மாமன்னனே, நான் தருமவான் தூதன். நீ உன் தம்பியைப் பாடலிபுரத்தினின்றும் ஓட்டிவிட்டு நீதியில்லாமல் அவன் நாட்டை ஆண்டு வருகின்றாய். வீரியவான் மக்கள் இப்பொழுது சித்தபுரத்தை ஆண்டு வருகிறார்கள். எனினும் முன்னோர் வழிவந்த நாட்டைத் திரும்பப்பெற விரும்பிய வீரியவான் உலகத்தாரால் புகழப்பெறும் சிறந்த வீரர்களாகிய தன் குமாரர்கள் ஆறு பேரையும் பெரும் படையுடன் அனுப்பியுள்ளான். சமாதான முறையில் பிதிரார்ச்சிதமான நாட்டைத் தருகின்றாயா? அல்லது போர் முகத்தில் தருகின்றாயா? என்பதைத் தெரிந்துவரவே என்னைத் தூதனுப்பியுள்ளார்கள்' என்று கூறினுன்.

பலவான் தன் மக்களை அழைத்து, அத்தூதன் கூறியவை உண்மை என்றும் குணவான் விநாயகப் பெருமான் அருள் பெற்றவன் ஆதலால் அவனோடு போர் செய்து வீணே அழியாமல் வீரியவானுக்குரிய பாகத்தைத் தந்துவிடுதல் முறை என்றும் கூறினுன்.

துர்முகன் என்னும் இளவரசன், அரசன் கூறியதைக் கேட்டு, 'தந்தையே, வீரர் பெருமகனே, நம்மிடம் பதினறு அக்குரோணி சேனைகள் இருக்கின்றன. என் உடன்பிறந்தவர்

களும் மிகச் சிறந்த போர் வீரர்கள். ஆதலால் வனவாசி களாகிய அவர்களுக்கு நாட்டைத் திருப்பித் தரமுடியாது. போர் செய்து பெற்றுக்கொள்ளலாம்' என்று கூறினான்.

துர்முகன் சொல்லி அனுப்பியதைக் கேட்ட குணவான் தனது சேனையைச் சக்கரவியூகமாக அணிவகுத்துப் போருக்குப் புறப்பட்டான். துர்முகனின் சகோதரனை விரதவான் பதுமவியூகமாகப் படைகளை அணிவகுத்து வியூக முனையில் நின்று போர்ப் பறையைக் கொட்டினான்.

அம்முழக்கம் கேட்ட குணவான் பொல்லாப் பிள்ளை யாரைத் தியானித்தான். அவர் வரமளித்தபடி தேர் வந்தது. அதில் பலவகையான போர்க் கருவிகள் இருந்தன. கணேசப் பெருமான் அளித்த வில்லையெடுத்து வளைத்து நாணொலி எழுப்பினான். அவ்வொலி கேட்டுப் பகைவர்கள் மயக்க முற்றுப் பூமியில் வீழ்ந்தனர். குணவான் விரதவானை நெருங்கி வணங்கி 'என் மூத்த தமையனே, உன்னால் ஓர் அடி கொடுக்கப் பட்டால், அதன் பிறகுதான் உன் ஆணைப்படி நான் உன்னோடு போர் செய்வேன்' என்று கூறினான்.

குணவானின் தேரைக் கண்டு வியந்து, நாணொலியைக் கேட்டுப் பயந்து, நீதியோடு கூடிய அவன் குணத்தைக் கண்டு மகிழ்ந்து நின்ற விரதவான் பல அம்புகளை அவன்மீது ஏவினான். குணவான் விளையாட்டாக அவன் விட்ட அம்புகளை வீழ்த்தினான். அவன் தேரை அழித்து அவனோடு போர் செய் தான். விரதவான் பயந்து ஓடினான். குணவான் மூன்று அக்குரோணி சேனைகளையும் கொன்று குவித்தான்.

அதைக் கண்ட துர்முகன் முதலாகிய பதினறு சகோதரர் களும் பதினறு தேசத்தரசர்களோடும் சேர்ந்து கொடிய படைக் கருவிகளால் தாக்கிக் குணவானோடு போர் செய்தனர். குணவான் எல்லாச் சேனைகளையும் அழித்தான். பதினறு தேசத்தரசர்களையும் மூர்ச்சை அடையச் செய்தான்; துர்முகன் முதலான பதினறு பேர்களையும் கட்டித் தனது தேரில் ஏற்றிக்கொண்டு ஒரு யாமநேரத்தில் போர் முடித்து வெற்றி வீரனுகத் தந்தையை அடைந்தான்.

துர்முகன் முதலிய பதினறுபேரும் நாணமும் அச்சமும் அடைந்து நின்றனர். பதினறு தேசத்தரசர்களும் மூர்ச்சை தெளிந்து, துர்முகன் முதலியோர் சிறைப்பட்டதை அறிந்து பயந்து சாகாதிருந்த தங்கள் சேனையுடன் உயிர் தப்பியோடி மகிழ்ந்தனர்.

———

9. பலவான் மக்கள் வரம் பெற்றமை

பலவான் தன் மக்கள் சிறைப்பட்டதைத் தூதன் மூலம் அறிந்து அவமானமும் வேதனையும் அடைந்தான். முதிய அமைச்சர்களையும் படைத் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு காணிக்கைப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு தன் தம்பியின் மக்களாகிய தருமவான் முதலியவர்கள்பால் சென்றான்.

தருமவான் முதலானவர்கள் பலவானைக் கண்டு வணங்கி, 'அரசே உன்னுடைய மைந்தர்கள் உனதாணைப்படிப் போர் செய்து தோற்றனர். அவர்களைச் சிறைப்படுத்தியுள்ளோம். எங்கள் தந்தையை நீ வஞ்சனையாகப் போர் செய்து வெற்றி கொண்டாய். எங்களில் ஒருவனாகிய குணவான் செய்த நேர்மையான போரால் உன் மக்கள் வெல்லப்பட்டுச் சிறைப் படுத்தப் பெற்றுள்ளனர். நீ சேனையோடு வந்து போர் செய்து உன் புதல்வர்களை மீட்பது கருத்தா? அல்லது உன் புதல்வர் களுடன் எங்கள் தந்தைபால் வருவது கருத்தா? சொல்லுக' என்று கேட்டான்.

அதுகேட்ட பலவான் போர் செய்ய விரும்பாது தானும் அவர்களோடு தம்பியிடம் வருவதற்குச் சம்மதித்தான். தருமவான் முதலாகிய எல்லோரும் சித்தபுரத்தை அடைந் தார்கள். அடைந்ததும் தந்தை வீரியவானைக் கண்டு பகை வர்களை வென்ற வரலாற்றைக் கூறினார்கள்.

தமையனைக் கண்ட வீரியவான் அன்புடன் வணங்கினான். 'அருமைத் தம்பியே, நான் மைத்துனன் சொற்கேட்டு வஞ்சனை யாக உன்னைப் போரில் வென்று உன் நாட்டைக் கைப்பற்றி னேன். இப்பொழுது படை பலத்தால் என் மக்கள் செருக் குற்று என் சொல்லையும் கேளாமல் உன் புதல்வர்களுடன் பொருது தோல்வியடைந்தனர். நீ எங்கள் பிழையைப் பொறுத்து மறந்து என் பிள்ளைகளை விடுவிக்க வேண்டும். எனக்குரிய பாதி இராச்சியத்தையும் எனக்குத் தரவேண்டும்' என்று வேண்டினான்.

அதுகேட்ட வீரியவான் மகிழ்ந்து தமையன் மக்களைச் சிறையினின்றும் விடுவித்தான்; அவர்கள் அனைவருக்கும் தனதில்லத்தில் விருந்திட்டான்; பொன்னும் மணியும் தந்து

அவர்களை அவர்கள் இராச்சியத்துக்கு அனுப்பிவைத்தான். பிறகு வீரியவான் தருமவானைப் பாடலீபுரத்துக்கு அரசனாக முடிசூட்டித் தம்பிகளாகிய மருத்துவான் சாபவான் என்னு மிருவரையும் உடன் அனுப்பினான். தருமவான் தன் தந்தையின் ஆணைப்படி பாடலிபுரத்தைச் சிறப்பாக ஆண்டுவந்தான். பின்னர் வீரியவான் குணவானைச் சித்தபுரத்திற்கு அரசனாக விதிப்படி முடிசூட்டிவிட்டுத் தான் கௌதமன் முதலிய முனிவர்களுடன் வனத்தை அடைந்து வேதாந்த சாத்திரங்கள் பயின்றான்.

குணவான் தன் உடன்பிறந்தார்களாகிய திருதிமான், சத்தியவான் துணையுடன் நீதியுடன் அரசியலை நடத்தினான். குணவான் ஒருவனால் வெல்லப்பட்ட துர்முகன் முதலானோர் தாங்களும் தவம் செய்து மேன்மையடைய விரும்பித் தந்தையாகிய பலவானிடம் விடை பெற்றுக்கொண்டு திருநாரையூரை அடைந்தனர்; அங்குள்ள பொல்லாப் பிள்ளையாரையும் சிவலிங்கப் பெருமானையும் வழிபட்டு, சிவபெருமானைத் தியானித்துப் பஞ்சாட்சரத்தைச் செபித்துக் கொண்டு தவம் செய்தனர்.

இவ்வாறு மூவாண்டுகள் தவம் செய்த பிறகு பரமசிவன் அவர்கள்முன் தோன்றினார். அவரைப் பன்முறை வணங்கி, குணவானையும் அவன் சகோதரர்களையும் வெல்லும் ஆற்றலும் படைக்கலங்களும் தருமாறு வேண்டினர். சிவபெருமானும் அவ்வாறே அருளினார். விரதவான் என்னும் வீரனுக்கு, மற்றவர்களுக்கு அளித்த ஏழு வித்தைகளையும் அளித்து மகாபாசுபத வித்தையையும் அருளினார். பின்னர், பரமசிவன் விரதவானைப் பார்த்து அவனுக்கு மகாபாசுபத கவசத்தையும் அளித்து, 'வீரனே, சித்த புருடனாகிய குணவான் கணபதி வடிவமாகிய எம்மைத் தியானித்து என்னுடைய வலிமையைப் பெற்றுள்ளான். அவனைப் போரில் மும்மூர்த்திகளாலும் வெல்ல முடியாது. மகாபாசுபத கவசத்தை அணிந்த உன் மீதுவிடும் எந்தக் கருவியும் ஊடுருவ முடியாது. தேவராலும் உன்னை வெல்ல முடியாது. உன் கைவிரல், நக நுனியில் பகைவர் தாக்கினால் கவசம் உன்னைவிட்டு எம்மை வந்தடையும். நீ ஒருவனே குணவானோடு சண்டையிடுதற்கு ஏற்றவன். உன் சகோதரர்கள் குணவான் சகோதரர்களோடு சண்டையிடுதற்குரியவர்கள். குணவானும் நீயும் வரம்பெற்றிருந்தாலும் எவனிடம் தருமம் உண்டோ அவனே வெற்றி பெறுவான்' என்று சொல்லி மறைந்தார்.

துர்முகன் முதலானவர்கள் மகிழ்ச்சியுடன் கிரிவிரச நகரத்தை அடைந்து தாங்கள் வரம்பெற்ற வரலாற்றைத் தந்தைக்குச் சொன்னார்கள். தந்தையாகிய பலவானும் அதுகேட்டு மகிழ்ந்தான்.

10. பலவான் மைந்தர் போர் புரிந்தமை

பலவானுகிய அரசன் துர்முகனைப் பார்த்து, 'என் அருமை மைந்தனே ? நீ சிவபிரான் அளித்த வரத்தின் வலிமையால் குணவானை வெல்லுவாயோ ?' எனக் கேட்டான்.

'தந்தையே குணவான் சிவனுக்குச் சமமான வல்லமை உடையவன். அவனுடன் சண்டை செய்வதற்கு ஏற்றவன் விரதவான் ஒருவனே ஆவான். பகைவர்கள் தாக்கும் அடி ஒன்றும் அவன் உடலிற்படாது. விரதவான் குணவானை மிகுதி யாக அடிப்பானுயின் பொறுக்க முடியாத துன்பத்தால் போரினின்றும் ஓடிவிடுவான். ஓடானுயின் இறந்துவிடுவான். அவனுடைய சகோதரர்களும் தோற்று நம்மைச் சரண் அடைவார்கள்' என்று துர்முகன் கூறினுன்.

துர்முகன் கூறியதைக் கேட்ட விரதவான், 'தந்தையே, முன்னே நடந்தபோரில் குணவானுடைய வல்லமையையும் கொடைக் குணத்தையும் நன்கறிந்தோம். நூற்றிலொரு பங்கும் அவனுக்கு நான் ஒப்பாகேன். கௌதமன் வாக்கினுலும் சிவனுடைய வாக்கினுலும் ஒன்றை ஆக்கவும் அழிக்கவும் வேறென்ருக மாற்றவும் வல்லவன். முன்னே தன்னுல் வெல்லப் பட்ட நம் இராச்சியத்தையும் நமக்கே அளித்த அறச் சிந்தனை யாளன். அவனைப்போல் நானும் வரம் பெற்றிருந்தாலும், எங்கே தருமமுண்டோ அங்கே வெற்றி உண்டாகும் என்று சிவபெருமான் நம்மைப் பார்த்துக் கூறியிருப்பதால் தரும நெறி செல்லாத நாம் வெல்லமாட்டோம். அறநெறியில் வாழும் குணவானே வெற்றி பெறுவான்!' என்று கூறிப் போர் செய்ய மறுத்தான்.

வாக்குமி பலவானுகிய தந்தையிடம், 'நாம் உபாயத் தால் குணவானை வெல்ல வேண்டும். இப்பொழுது தருமவான் பாடலீபுரத்தில் வசிக்கிருன். குணவான் தன் சித்தியால் எழுப்பப்பெற்ற சித்தபுரத்தில் தன் சகோதரர்களோடு வசித்து வருகிருன். நாம் இப்பொழுது பாடலீபுரம் சென்று தருமவானேடு போர் செய்யவேண்டும். போரில் அவர்களை வென்று பாடலீபுரத்தைக் கைப்பற்றிவிடலாம். இதையறிந்த குணவான் கோபத்தோடு வரும்போது முனிவர்களாலும் நீதி வாக்கியங்களாலும் அவனைச் சமாதானப்படுத்திக் கொள்

வோம். குணவான் தருமமுடையவனுதலின் நமக்கே பாடலீ புரத்தை அளித்துவிட்டுச் சித்தபுரத்திலேயே தங்கிவிடுவான். குணவான் இங்கு வருவதற்குள் நாம் சென்று விரைவில் தருமவான் முதலியோரைத் தாக்கி அழித்துவிட வேண்டும்' என்று திட்டம் வகுத்துச் சொன்னுன். இதைக் கேட்ட துர்முகன் முதலிய பதினுறு பேரும் அதுவே சரி என்று கருதிப் பதினுறு தேசத்தரசர்களுடன் பாடலீபுரத்தை அணுகிப் போர்முரசு கொட்டினுர்கள்.

தருமவான் ஒற்றர்கள் மூலம் நிகழ்ந்ததைத் அறிந்து கொண்டு சித்தபுரத்திற்கு உத்தமமான ஒரு தூதனை அனுப்பினுன். தன் சகோதரனுகிய சாபவான் மூலம் துர்முகன் முதலியோர் பெற்ற வரத்தைப் பற்றித் தெரிந்தான்.

தருமவான் ஓர் அக்குரோணி சேனையுடன் சகோதரர்கள் இருவரும் சூழப் போர்க்களத்தை அடைந்து போர் செய்தான். சித்தபுரத்தினின்றும் குணவான் ஆணைப்படி திருதிமான் சத்தியவான் என்னுமிருவரும் ஓர் அக்குரோணி சேனையுடன் வந்து தருமவானுக்குத் துணையாகச் சேர்ந்து போர் செய்தனர்.

ஒரு முகூர்த்தத்துக்குள் விரதவான் படைகள் அழிந்தன. தன் சேனையின் அழிவையும் துன்பத்தையும் கண்ட விரதவான் கோபம் அடைந்து தெய்வத்தன்மை வாய்ந்த படைகளைப் பகைவர்மீது ஏவினுன். சாபவான் அவற்றை அவ்வவற்றின் எதிர்ப்படைகளால் அழித்தான். விரதவான் கொடுமை வாய்ந்த மகா பாசுபதத்தைப் பயன்படுத்த அதனையும் சாபவான் தடுத்தான்.

சகோதரர்கள் பதினுறுபேரும் சாபவானை முற்றிப் போர் செய்தனர். சாபவானது சகோதரர்களும் துர்முகன், முதலியவர்களைச் சூழ்ந்து பொருதனர். திடவீரமுள்ள சாபவான் விரதவானுடைய கைவிரல் நுனிகளில் அடித்துக் கவசத்தைப் பயன்படா வகை செய்தான். விரதவான் பயந்து போர்க்களத்தை விட்டு ஓடலானுன். அதைப் பார்த்த துர்முகன் முதலியோரும் போர்க்களத்தினின்று ஓடினுர்கள்.

இவ்வாறு தருமவான் முதலியோர் பகைவர் கூட்டங்களை வென்று வெற்றி முழக்கத்துடன் தங்கள் நகரை அடைந்தார்கள்.

11. தருமவான் யாகம் செய்தமையும் குணவான் முத்தி பெற்றமையும்

துர்முகன் முதலியவர்கள் போரிலே தோற்றுத் தமது நகரத்தை அடைந்து நடந்த நிகழ்ச்சிகளைத் தம் தந்தைக்கு விரிவாகக் கூறினர்கள்.

அதைக் கேட்ட பலவான், "குணவானது சிறப்பினல் அவனுடைய சகோதரர்களும் சிறந்தவல்லமை பெற்றனர். அவர்கள் எப்பொழுதும் அறநெறியில் நடப்பதால் வெற்றியுடன் இருக்கின்ருர்கள். ஆதலால் நீங்கள் பகைமையை விட்டு அன்புடன் அவர்களோடு ஒழுக வேண்டும்" என்று தன் மக்களுக்கு அறிவுரை கூறினன்.

அவன் கூறியதைக்கேட்டு விரதவான் மிகவும் மகிழ்ந்து, "சிவபெருமானல் அருளப்பெற்ற கவசத்தைச் சாபவான் அறுத்தான். அவனை வெல்பவன் இம் மூவுலகிலும் இல்லை. ஆதலால் அவர்களோடு நட்பாக இருப்பதே சிறப்பு" என்று சொன்னன்.

அதன் பின்னர் பிதாவின் ஆணைப்படியே துர்முகன் முதலிய மைந்தர்கள் அனைவரும் பகைமையை விட்டுத் தருமவான் முதலியவர்களிடம் அன்பாயிருந்து தமக்குரிய கிரிவிரச நகரத்தை ஆண்டுவந்தனர்.

ஒருசமயம் சித்தனகிய குணவான் பாடலிபுரத்தை அடைந்தான். தருமவான் அவனை வரவேற்று அன்பு செய்தான். "பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற குணவானே, உன்னல் நாங்கள் பெரும் பேறெல்லாம் பெற்ருேம். பெரும் புகழ் அடைவதன் பொருட்டு ஆயிரம் அசுவமேத யாகமும் நூறு இராசசூய யாகமும் செய்ய விரும்புகின்ருேம். கணபதி அருள்பெற்ற நீயே நடத்தித்தர வேண்டும்" எனத் தருமவான் கேட்டுக் கொண்டான்.

சகோதரன் மொழிகேட்ட குணவான், 'நீ மன்னர்களுக்கெல்லாம் விரைவில் அழைப்பு அனுப்பு. செல்வத்தின் பொருட்டு அவர்களை வருத்துதல் வேண்டா. அறநெறியில் வாராத பொருளால் யாகம் செய்தால் உயர்ந்த பலன்

கிட்டாது. யாகத்திற்கு வேண்டும் பொருளெல்லாம் நானே தருவேன்' என்று அன்போடு சொன்னுன். அது கேட்டுத் தருமவான் மகிழ்ச்சிகொண்டான்.

குணவான் மறுநாட்காலையில் விநாயகப் பெருமானையும் தன் தாயார்களாகிய சித்தி புத்தியென்னும் இருவரையும் தியானத்தாலும் திடபத்தியாலும் மகிழ்வுறச் செய்தான். மூவரும் நேரில் காட்சி தந்தனர். அவர்களை வணங்கி 'ஆயிரம் அசுவமேத யாகங்களும் நூறு இராசசூய யாகங்களும் நடத்தற்குரிய பொருள் அருளவேண்டும்' எனக் குணவான் வேண்டினுன்.

சித்தி தேவியார் கருணையால் கிரிவிரச வனப்பக்கத்தில் தருமவான் இராச்சியத்தின் எல்லையில் எல்லாப் பொருள் களுடன் கூடிய ஒரு நகரம் உண்டாயிற்று. அங்கு யாகத்திற்கு வேண்டிய குதிரைகள், நவமணிகள், கற்பகச் சோலைகள், காமதேனுக்கள் எல்லாம் நிறைந்தன. தாசர்களும் தாசிகளும் இருந்தனர். இவ்வகையான சிறந்த நகரத்தை அளித்து யாகம் சிறப்பாக முடிய வரமும் அளித்துத் தேவியருடன் விநாயகப் பெருமான் மறைந்தருளினுர்.

குணவான் தன் தமையன்மார்களோடு சென்று புதிய நகரத்தைக் கண்டான். அந்நகரம் பகைவர்களுக்கு ஆசை விளைவிப்பதும் நண்பர்களுக்கு வியப்பைத் தருவதுமாக விளங் கியது. நவநிதிகளும் நிறைந்த மூலபண்டாரங்கள் பல அங்கு இருந்தன. தருமவான் முதலியவர்கள் குணவான் புண்ணியத் தால் கிடைத்த அந்த நகரைக்கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

தருமவான் அழைப்பைப் பெற்ற அரசர் அனைவரும் புதிய நகர்க்கு வந்து அதைக்கண்டு வியந்தனர். திருதிமான் அவர் களுக்கெல்லாம் இடவசதி அளித்தான். யாகம் காணும் விருப் பத்தால் கௌதமன் முதலிய முனிவர்கள் எல்லோரும் வந்தனர். பலவானும் தன் புத்திரர்களுடன் வந்து சேர்ந் தான். வீரியவானுகிய தந்தையும் மூவர் மனைவியருடன் வந்து அங்கே தங்கினுன். தருமவான் முதலியோர் முதல் வீதியிலேயே இருந்து அனைவரையும் வரவேற்றனர்.

தருமவான், கௌதமன் கூறிய விதிப்படியே ஆயிரம் அசுவமேத யாகங்களையும் நூறு இராசசூய யாகங்களையும் செய்து முடித்தான்; யாகங்காண வந்தவர்களையெல்லாம் இந்திரன்போல் தோன்றும்படி சிறப்புச் செய்து அனுப்பினான். வந்தவர் அனைவரும் குணவானை வாழ்த்திச் சென்றனர். தருமவானும் யாகத்தை முடித்து, தனது பாடலீபுரத்தை அடைந்தான். சித்தி தேவியார் அளித்த புது நகரமும் மாயமாக மறைந்தது.

தருமவான் பூவுலகில் தேவேந்திரனைப்போல் இருந்து மகிழ்ச்சியோடு எல்லா இராச்சியத்தையும் ஆண்டுவந்தான். குணவானும் தமையன்மாரிடம் விடைபெற்றுச் சித்தபுரத்திற்குச் சென்றான். துர்முகன் முதலியவர்களும் குணவானுடைய சிறப்பையும் ஆற்றலையும் அறிந்து சிறிதும் பகைமையில்லாமல் இன்பமாக வாழ்ந்தனர்.

குணவான் ஒரு நூறாயிரம் ஆண்டுகள் தாய்தந்தையருடனும் உடன்பிறந்தாருடனும் உலகில் இன்பமாக வாழ்ந்து மீண்டும் பிறவாத இன்ப உலகு அடைந்தான். விநாயகப் பெருமான் அருள்பெற்ற பெரியோர்கள் குணவானுக்குப் 'பரமப்பிரியன்' என்று பெயர் சூட்டினார்கள். குணவான் கணேசப் பெருமானுக்குச் சமீபத்திலே வாழ்ந்திருந்தான்.

இந்த அத்தியாயத்தைப் படிப்பவர்கள் இட்ட சித்திகள் எய்தி மீண்டும் பிறவாநிலை அடைவார்கள்.

12. விப்பிரகனுக்கு அருள் புரிந்தமை

முன்னே ஒரு கிருதயுகத்தில் இத்திருநாரையூரில் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் விநாயக வழிபாட்டில் சிறந்தவன்; அவன் பெயர் சுசீலன். அவன் நாள்தோறும் விடியற்காலையில் கடன்களை முடித்துக்கொண்டு நல்ல பூமியில் முளைத்துள்ள ஆயிரம் அறுகந் துணர்களை மந்திரத்தோடு பறித்து இருபத்தொரு அறுகுகளால் ஐம்பது முடிச்சாகக் கட்டி அம்மாலையை விநாயகப் பெருமான் தோத்திரங்கள் சொல்லி மாலைதோறும் பொல்லாப் பிள்ளையாருக்குச் சாத்தி வந்தான்.

சுசீலன் வறியவன்; மனைவி இல்லாதவன். ஐந்து வயதுடைய தன் பெண்ணை ஆதரவு இல்லாத நிலையில் விட்டு இறந்து போனான். தாய் தந்தை இல்லாத மங்கலை என்னும் பெண்ணை அவ்வூரில் உள்ள பிராமணர்கள் வளர்த்து வந்தார்கள்.

விளையாட்டில் விருப்பமுடைய மங்கலை துரும்புகளால் மாலை கட்டிப் பொல்லாப் பிள்ளையாருக்கு நாள்தோறும் சூட்டி வந்தாள். அதனைக் கண்டு அருச்சகன் கோபங்கொண்டு அவளை அடித்தான். அடியைப் பொறுத்துக்கொண்டு விநாயகருக்குத் துரும்புமாலை சாத்தி வந்தாள்.

அவ்வூரில் அரதாசன் என்னும் அருச்சகன் ஒருவன் இருந்தான். சிவனருளால் அவனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அரதாசன் அப்பிள்ளைக்குச் சுத்தன் என்று பெயரிட்டு உரிய வயதில் வேதாகமம் முதலியவைகளை ஓதுவித்தான். அச்சிறுவன் பதினறு வயதுக்குள் வித்தைகளில் புலமை பெற்றான்.

சுத்தனின் மாமன் தன் மகளைச் சுத்தனுக்குக் கொடுக்க எண்ணினன்; சிவசந்நிதியை அடைந்து, 'பெருமானே, என் மகள் சுசீலையை என் உடன் பிறந்தாள் மகன் சுத்தனுக்கு மணம் செய்ய விரும்புகிறேன். தேவரீர் அருள் செய்ய வேண்டுகின்றேன்' என்று பணிவுடன் கேட்டான். உன் மருமகன் திருமணம் நடந்த ஐந்தாம் நாளில் இறந்துபடுவான்; இது உறுதி' என்று அசரீரி கூறக்கேட்டான்.

இங்ஙனம் இறைவன் கூறியதைக் கேட்ட மாமன் மிக வருந்தி இச்செய்தியை யாரிடமும் சொல்லாமல் மனைவியிடம் மட்டும் இரகசியமாகச் சொன்னன். அவள்தான் நீராடப்

போகும்போது தன் தோழிகளிடம் சொன்னுள். தோழிகள் தங்கள் கணவன்மாரிடம் சொல்ல இச்செய்தி எங்கும் பரவியது.

இச்செய்தியை அறிந்த பிராமணர்கள் சுத்தனுக்குப் பெண் கொடுக்க மறுத்தார்கள். பலர் தடுத்தும் சுத்தனது தந்தை சுசீலன் மகள் மங்கலேயை நிறைந்த அணிகள் பூட்டி மகனுக்கு மனேவியாக ஏற்றுக் கொண்டான்.

விநாயகப் பெருமானுக்கு மூடபத்தியாகத் துரும்பு மாலே சாத்திவந்த மங்கலே விவாக காலத்திலும் இரவிலே அத் துரும்பு மாலேயைத் தொடுத்து அன்போடு விநாயகப் பெருமானுக்குச் சாத்தி வந்தாள்.

சுத்தன் திருமணம் நிகழ்ந்த ஐந்தாம் நாள் இரவு வெளியே சென்று மலங்கழித்து அருகேயுள்ள தடாகத்தை அடைந்து, கால் கழுவிக்கொண்டு வேறு துறையிலே இறங்கி முகத்தைக் கழுவினுன். அப்பொழுது பெரிய முதலே ஒன்று வந்து சுத்தன் காலேக் கெளவித் தடாகத்தின் நடுவிடத்திற்கு இழுத்துக்கொண்டு போகத் தொடங்கியது.

அப்பொழுது மகா வித்துவானுகிய சுத்தன் முதலேயை நோக்கி, 'முதலேயரசே, நான் சொல்வதைக் கருணேயுடன் கேட்க வேண்டும். நான் என் சாவுக்கு வருந்தவில்லே. இளமை யிலேயே தாய்தந்தையரை இழந்தவளும் ஊரில் உள்ள பிராமணர்களால் காக்கப்பட்டவளும், அநாதையும், குணமும் அழகும் நிறைந்தவளுமாகிய என் மனேவியைக் குறித்தே நான் வருந்துகிறேன். அவள்பால் சென்றுவர, கருணேசெய்து என்னே விடுதலே செய்யவேண்டும்', என்று வேண்டினுன்.

'அந்தணரேறே, அறிவாளனே, நான் உணவு உண்டு மூன்று மாதத்திற்கு மேலாகிறது. பசியால் வருந்துகின்ற நான் கையிற் கிடைத்த உணவை எப்படி விடுவேன்?' என்று முதலே கேட்டது.

'முதலேகட்கரசே, அங்ஙனமாயின் என்னேச் சற்றே விடுக. நான் என் இல்லம் சென்று மனேவிபாற் கூறி அவளே ஆற்று வித்து மீண்டும் ஒரு முகூர்த்தத்தில் உன்பால் வருவேன். இதில் ஐயம் வேண்டா' என்று சுத்தன் கூறினுன்.

நியமப்படி பொல்லாப் பிள்ளேயார் ஆலயம் சென்று அப்பெருமானுக்குத் துரும்புமாலே சாத்தி கணவன் வீட்டுக்கு

வரும் மங்கலை வழியில் உள்ள தடாகத்தில் முதலைக்கும் தன் கணவனுக்கும் நடக்கும் உரையாடலைக் கேட்டுக் கணவன் அருகே வந்தாள்.

கழுத்தளவினதாகிய நீரில் முதலையால் பிடிக்கப்பட்டிருக்கும் கணவனைக் கண்டதும் கலங்கிய மங்கலை, "முதலையரசே, என்மேல் தயவுசெய்து என் கணவனை விடுத்து வேண்டுமானுல் பயமின்றி என்னை உண்ணலாம். யான் இறந்தாலும் என் கணவன் வேறு கன்னிகையை மணந்து இன்பமுடன் வாழலாம். என் கணவனை இழப்பேனுயின் அநாதையாகிய நான் விதவையாக இருந்து என்ன செய்வேன்?" என்று சொல்லி வருந்தினுள். முதலை, 'நீ பெண்ணுதலால் உன்னை உண்ண மாட்டேன். உன் கணவனை விடவும் மாட்டேன்' என்று கூறியது.

முதலை கூற்றைக்கேட்ட மங்கலையானவள் தன் கணவனுக்குமுன் உயிரைவிடத் துணிந்து, "பெருமானே, உலகங்களுக்கெல்லாம் தந்தையே, அன்பரைக் காப்பதில் கருத்துடையவனே, எங்களிருவர்க்கும் உன் திருவடித் தாமரையைத் தருக" என்று திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரிடம் வேண்டிக்கொண்டு நீரின் நடுவே பாய்ந்தாள். அப்போது விநாயகப் பெருமான் தமது துதிக்கையால் மங்கலையைப் பிடித்துக் கொண்டார். அப்பெருமானுடைய பாசமானது முதலையைக் கட்டி வெளியில் இழுத்துப் போட்டது. முதலையினின்று உயிர்தப்பிய சுத்தன் காயமில்லாமல் வெளியேறினுன்.

யானை முகத்தை உடையவரும் பெருச்சாளி வாகனம் உடையவரும் சித்தி புத்தி தேவியர்களை உடையவரும் ஒற்றைக் கொம்பை மூன்று திருக்கண்களை உடையவரும் பாசம், அங்குசம், வரதம், அபயம் என்னுமிவற்றைத் தரித்தவரும் செந்நிறமும் தொங்கிய வயிறும் சிவந்த ஆடையும் முறம்போலும் செவிகளுடையவருமாகிய விநாயகப் பெருமானைக் கண்களாரக் கண்டு மகிழ்ச்சியுடன் பன்முறை மங்கலை வணங்கினுள்.

பொல்லாப் பிள்ளையார் மங்கலையைத் துதிக்கையால் எடுத்துத் தமது திருமடிமீது வைத்துக்கொண்டு, "மங்கலையே, என் மகளே, நாள்தோறும் அறுகு கிடைக்காமையால் துரும்புகளால் திருமாலை தொடுத்துச் சாத்தி

வந்தாய். மற்றவர் சாத்தும் பொன்மணி மாலைகளைக் காட்டிலும் நீ சாத்திய துரும்பு மாலையே எனக்கு மிகச் சிறந்தது. அதனால் நான் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து நான் என்னையே உனக்களித்தேன். சத்தி தேவியாகிய சித்தியிடம் உள்ள எல்லா வலிமையும் உனக்கு உண்டாவதாக. என் ஆணையால் முத்தொழிலும் செய்யும் ஆற்றலைப் பெறுவாயாக. நீ உன் கணவனுடன் பதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து பலருக்கும் உதவிசெய்து, முடிவில் உன் கணவனுடன் என்னை வந்து அடைவாயாக.

"என் குமாரியே, நீயும் உன் கணவனும் புவனேசனும் சத்தியும்போல வாழ்வீராக. நீ உன் தந்தையாகிய என்னையும் தாய்மாராகிய சித்தி புத்திகளையும் எப்பொழுது நினைக்கின்றாயோ அப்போது நாங்கள் உன்முன் தோன்றி நீ விரும்பியவற்றை அளிப்போம். இன்று முதல் அட்டசித்திகளும் பதினான்கு வித்தைகளும் அறுபத்துநான்கு கலைகளும் எட்டு வகைச் செல்வங்களும் எட்டு சத்திகளும் ஏவல் மகளிராக உனக்குப் பணிசெய்யும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

விநாயகப் பெருமான் பாசம் பரிசித்தமையால் முதலை இந்திரலோகத்தை அடைந்தது. சுத்தனும் மங்கலையும் வீட்டையடைந்து நடந்தவற்றைக் கூறினர். அது கேட்டுச் சுத்தனது தந்தையும் தாயும் மருமகளைப் புகழ்ந்து கொண்டாடினர்.

மங்கலை இந்திரனுடைய மாளிகைபோல ஓரில்லத்தைப் படைத்துத் தனது மாமன், மாமி, கணவனுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தாள்; நாள்தோறும் திருநாரையூரில் உள்ள பொல்லாப் பிள்ளையாரை விதிப்படி அன்புடன் பூசித்து வந்தாள்; பல அரிய செயல்கள் செய்து பலருக்கும் உதவி வந்தாள்; பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுடன் இன்பமாகப் பன்னூறு ஆண்டுகள் வாழ்ந்து முடிவில் விநாயகப் பெருமான் அருளால் வீட்டின்பம் பெற்றுச் **சித்திபுத்தி** தேவிமாரின் தோழியானாள்.

பார்ப்பனப் பெண்ணுக்கு வாழ்வரசியாக வரமளித்த இவ்வரலாற்றை அன்புடன் படிப்பவர் எல்லாப் பேறுகளையும் பெறுவர்.

———

13. ஏமாங்கன் வரலாறு

முனிவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, மங்கலை விநாயகப் பெருமான் திருவருள் துணையால் செய்த மிக உயர்வான வரலாற்றைச் சொல்கிறார் ;

மாகிஷ்மதி என்னும் நகரத்தில் கிருதவீரியன் வமிசத்தில் தோன்றிய ஓரரசன் இருந்தான். அவனுடைய பட்டதத்தரசி யாகிய மூத்த மனைவி கருப்பமுற்றிருந்தாள். இளையவளாகிய குடிலை என்பவள் பொறாமையால் உணவில் நஞ்சு கலந்து நயவஞ்சகமாக மூத்தவளை உண்பித்தாள். நஞ்சு வேகத்தால் மூத்தவளுக்குத் தொழுநோய் (குட்டநோய்) உண்டானது. பின்னர் தொழுநோயுடன் கூடிய குழந்தை பிறந்தது. அதைக் கண்ட அரசன் அப்பொழுதே மூத்தவளைக் குழந்தையுடன் ஊரினின்றும் வெளியேற்றினன்.

வனத்தை அடைந்த அரசி மிகவும் துன்புற்றாள். அங்கு வேடன் ஒருவன் அவளைக் காப்பாற்றினன். குழந்தைக்கு ஓராண்டு முடியும்போது தாய் நோய் முற்றி இறந்தாள். வேடன் அக்குழந்தையை முடிந்த அளவு முயன்று காப்பாற்றி வந்தான். குழந்தை ஐந்து வயதை அடைந்தபோது வேடனும் இறந்தான். அவ்வேடன் மனைவி குழந்தையுடன் நகரத்துக்கு வந்து பிச்சை எடுத்துக் குழந்தையை அன்புடன் காத்து வந்தாள்.

இங்ஙனம் வேடன் மனைவி பிச்சைக்காக ஊர் ஊராக அலைந்து திரிகின்றபோது திருநாரையூரை அடைந்து மங்கலை வீட்டுக்குவந்து பிச்சை கேட்டாள். மங்கலையின் வேலைக் காரப் பெண், குழந்தையிடம் அரச இலக்கணம் இருப்பதைக் கண்டு வேட்டுவச்சியிடம் குழந்தை பற்றிய வரலாறு கேட்டறிந்தாள்.

தான் கேட்ட விவரத்தை மங்கலையிடம் பணிப்பெண் சொன்னாள். மங்கலையும் வெளியேவந்து பார்த்துக் குண்டலினி உருவமாகிய ஆதிசேடனது மத்தகத்தில் நடனம் செய்யும் பொல்லாப் பிள்ளையாரைத் தியானித்துத் திருநீற்றை மந்திரித்து அன்புடன் குழந்தையிடம் கொடுத்தாள். மங்கலை

யின் கட்டளைப்படி அக்குழந்தை அத்திருநீற்றை உடம்பிலே பூசிக்கொண்டு எஞ்சியதைப் பத்தியுடன் உட்கொண்டது. உடனே குழந்தை உடலிலிருந்த நஞ்சுவெப்பம் நீங்கியது.

காய்ச்சிய பொன்போல் ஒளிர்கின்றவனும் மன்னர் மன்னனுக்குரிய இலக்கணங்களை உடையவனுமாகிய அக்குழந்தையைப் பார்த்து மங்கலை முதலிய அனைவரும் வியப்படைந்தனர். மங்கலை அக்குழந்தைக்கு ஏமாங்கன் என்று பெயரிட்டுத் தன் வீட்டிலேயே வைத்து அன்போடு அருமையாக வளர்த்து வந்தாள். வேட்டுவச்சிக்கும் தன் வீட்டிலேயே வாழ்வதற்கு வகை செய்தாள்.

சுத்தன் ஏமாங்கனுக்குக் கலைகள் எல்லாவற்றையும் கற்பித்தான். ஏமாங்கனுக்குப் பதினறு வயதானவுடன் மங்கலை பொன்மயமான ஒரு பெரிய வில்லையும் அழிவில்லாத இரு அம்பறுத் தூணிகளையும் வாள், சங்கு இவைகளையும் கொடுத்து அன்போடு நோக்கி, ''என் அன்பு மகனே, நீ ஓர் அரசகுமாரன். உன் தந்தை மாகிஷ்மதி நகரத்தை ஆளும் வேந்தன். உன்தாய் கருவுற்றிருக்கும்போது உன் சிற்றன்னை அவளுக்கு நஞ்சு கலந்த உணவை அளித்தாள். அதனை உண்டதால் தொழுநோய் உண்டாயிற்று. அவளுக்குப் பிறந்த உன்னையும் தொழுநோய் பற்றியிருந்தது. அரசனல் நகரத்தினின்றும் துரத்தப்பட்ட உன் தாய் காட்டில் இறந்தாள். உன்னை ஒரு வேட்டுவச்சி கொண்டுவந்து என்கையில் தந்தாள். பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற நான் உன் நோயை நீக்கினேன். ஆதலால் என்னையே நீ தாயாக நினைக்கின்றுய்.

''உனது சிற்றன்னைக்கும் ஒரு பிள்ளை பிறந்தது. உருவத்தால் அழகிய அந்த ஆண் பிள்ளைக்கு இப்பொழுது வயது பன்னிரண்டாகிறது. மதுராபுரி அரசன் உன் தந்தையைப் போரில்வென்று சிறைப்படுத்தி விட்டுத் தானே மாகிஷ்மதி நகரிலிருந்து ஆட்சிசெய்கின்முன். ஆதலால் நீ, நான் தரும் தேரில் ஏறிச்சென்று மதுராபுரி அரசனை எளிதாகவென்று உன் தகப்பனைச் சிறைமீட்பாய்'' என்று கூறினுள்.

ஏமாங்கன் மங்கலையின் வாய்மொழியைக் கேட்டதும் தாய் தந்தையாகிய மங்கலையையும் சுத்தனையும் வணங்கி விடைபெற்றுக் கொண்டு தெய்வீகத் தேரில் ஏறி மாகிஷ்மதி நகரத்தை அடைந்து அங்கே அரசாளும் பகைவனைப் போருக் கழைத்தான். போருக்கு வந்த மன்னனைவென்று, நாட்டைத் தனதாக்கிக் கொண்டு தாய் தந்தையர்களைச் சிறைமீட்டு அவர்களை அன்போடு வணங்கி நின்றான்.

விடுதலைபெற்ற அரசன் ஏமாங்கனைப் பார்த்து, 'அரசரேறே? நீ யார், எனது நாட்டையும் என்னுயிரையும் காப்பாற்றித் தந்தமையால் நான் உன் தொண்டனைப் போல் உன் விருப்பப்படி நடக்கக் காத்துக் கொண்டிருக் கிறேன்' என்று சொன்னான்.

ஏமாங்கன் தந்தையை மீண்டும் வணங்கித் தன் வரலாறு முழுமையும் சொன்னான். அதைக் கேட்ட தந்தை மைந்தனை அன்போடு மார்பில் அணைத்துக்கொண்டான். தனது இளைய மனைவியைக் கடிந்து, கோபித்து ஏமாங்கனுக்கே இளவரசுப் பட்டம் கட்டி மகிழ்ச்சியோடிருந்தான்.

ஏமாங்கன் மங்கலையின் ஆணைப்படி தேவர், அசுரர், மனிதர் களோடு கூடிய பல உலகங்களையும் வென்று, நூறு அசுவமேத யாகங்களையும் நூறு இராசசூய யாகங்களையும் யூபமில்லாத கணயாகம் முதலிய மிகப்பெரிய யாகங்கள் பலவற்றையும் விதிப்படிச் செய்தான். பதினாயிரம் ஆண்டுகள் இப்பூமியை மனுநெறி கோடாது மங்கலாதேவியின் ஆணைப்படி ஆண்டான். கணபதி உபாசனையோடு கூடிய அவன் தனக்குப் பின் தனது பெருநாட்டை மைந்தனிடத்தே ஒப்படைத்து மங்கலையுடன் சிவலோகத்தை அடைந்தான்.

மங்கலை உலகத்தாரின் நன்மை கருதிச் செய்தருளிய அருஞ்செயல்கள் மிகப்பலவாம். விரிவாகும் என்று இங்கு ஒரு வரலாறுமட்டும் சொல்லப்பட்டது என்று முருகப் பெருமான் சொன்னார்.

———

14. குவலயாசுவன் வரலாறு

ஏமாங்கனுடைய சரிதம் கேட்ட முனிவர்கள். 'மங்கலை யின் கணவனுகிய சுத்தனை முதலை பிடித்தது எந்தக் குளத்தில்? அக்குளத்தை அமைத்தவர் யார்? தேவரீர் எங்களுக்குச் சொல்ல வேண்டும்' என, முருகப்பெருமான் சொல்லத் தொடங்கினுர்.

மாதிஷ்மதி நகரிலே பெரும் புகழ்பெற்ற அரசனுகிய சத்தியவான் இருந்தான். அவன் மிகச் சிறந்த ஞானியாகி மூன்றுலகத்திலும் புகழப்பட்டவன். அவனுடைய மகன் குவலயாசுவன் என்பவன் பதினுயிரம் யானை பலம் உடைய வனுகவும் வீரம், பத்தி, சாந்தம், அடக்கம் முதலிய பண்புகள் நிறைந்தவனுகவும் வில்வித்தையில் வல்லவனுகவும் தந்தை சொல் மீருதவனுகவும் மன்மதன்போன்ற அழகுடையவனு கவும் பதினுறுவயது நிரம்பிய காளைப் பருவத்தினனுகவும் விளங்கினுன்.

முனிவர்கள் செய்யும் யாகங்களைப் பாதாளகேது என் பவன் அழிக்கத் தொடங்கினுன். முனிவர்கள் யாகங்கள் அழியாமல் காக்குமாறு சத்தியவானை வேண்டினுர்கள். அவன் தன் மகன் குவலயாசுவனை அனுப்பி முனிவர்கள் யாகத்தைக் காக்குமாறு அனுப்பினுன். குவலயாசுவன் முனிவர்களுடன் சென்று யாகத்தைக் காக்கத் தொடங்கினுன்.

அப்பொழுது அசுரனுகிய பாதாளகேது பன்றி வடிவ மெடுத்து யாகத்தை அழிக்கும்பொருட்டு வந்தான். வந்தவன் வில்லேந்திய கையனுக நிற்கும் அரசனைப் பார்த்து ஓடத் தொடங்கினுன். அரசனும் முனிவர்கள் பணித்தவண்ணம் அசுரனைப் பின்தொடர்ந்து ஓடினுன். பயந்த அசுரன் பாதாள வழியாக ஒரு பிலத்தினுள் நுழைய அரசனும் அவனை விடாமல் பின்தொடர்ந்து சென்று கொன்றுன். அசுரனேடு பாதா ளத்தை அடைந்த அரசன் அவ்வசுரனுல்நிறுவப்பெற்ற பொன் மயமான பட்டினத்தைக் கண்டு அதனுள்ளே நுழைந்தான்.

மாவீரனுகிய குவலயாசுவன் அவ்வசுரனது அரண்மனை மாளிகையிலே அநேக பெண்களால் சூழப்பட்ட பேரழகி யாகிய ஒரு கன்னியைக் கண்டான். "அழகிற் சிறந்த

பெண்ணே, மாகிஷ்மதி மன்னன் குமரன் யான். முனிவர்கள் செய்யும் யாகத்தை இந்தப் பாதாளகேது அழித்து வந்தான். அந்த யாகங்களைக் காக்க விரதம் பூண்ட யான் அவனால் இழுக்கப்பட்டு இங்கே வந்தேன். பெண்ணே நீ யார்? இங்கே எப்படி வந்தாய்? விவரமாகக் கூறு'' எனக் கேட்டான்.

"வீரமன்னனே, யான் கந்தர்வப் பெண். என் பெயர் மதாலசை. என் தந்தை விசுவாவசுவினைப் போரில் வென்ற பாதாளகேது என்னைக் கவர்ந்துகொண்டு வந்து இந்தப் பிலத்தில் வைத்தான். அவன் பெற்றிருந்த பிரமசாபத்தால் என்னைக் கெடுக்காமல் விட்டு வைத்துள்ளான். இந்த இழிமகனை வெல்பவனே எனக்குத் தலைவனாவான் என உறுதி கொண்டிருந்தேன். ஆதலால் நீ என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என விளக்கம் சொல்லி முறைப்படி அவனுக்கு உணவளித்தாள்.

குவலயாசுவன் மதாலசையை அழைத்துக் கொண்டு முனிவர்களிடம் வந்து நிகழ்ந்ததைக் கூறி விடைபெற்றுக் கொண்டு தந்தையை அடைந்தான். தந்தையை வணங்கி நிகழ்ந்தவற்றைக் கூறிப் பெற்றோர்களின் அனுமதிப்படி மதாலசையை மணந்து கொண்டான். தந்தையின் ஆணைப்படி இளவரசனாக முடிசூட்டப் பெற்று ஏழாண்டு காலம் இன்பமாய் வாழ்ந்தான்.

பாதாளகேதுவின் தம்பி தன் அண்ணனைக் குவலயாசுவன் கொன்றதையும் மதாலசையைக் கொண்டு சென்று மணந்ததையும் கேள்வியுற்று அவ்வரசனை வஞ்சனையாக வெல்லவேண்டும் என்று நினைத்தான்; அந்தண முனிவன் வடிவுகொண்டு சத்தியவானாகிய பேரரசனை அணுகித் தன்னால் செய்யப்படும் யாகத்தைக் காக்க அரசன்மகனை அனுப்ப வேண்டினான். அரசனும் உடன்பட்டு இளவரசனைப் போய்வரப் பணித்தான்.

முனிவன் வடிவிலுள்ள அசுரன் நருமதையாற்றின் கரையை அடைந்து மூன்றுமாதம் தவம் செய்தான். பின்பு அரச குமாரனைப் பார்த்து, "நான் ஒரு மாதம் நீருக்குள்ளிருந்து தவம் செய்யவேண்டும். நீ கரையிலிருந்து எனக்கு இடையூறு வராமல் காக்க வேண்டும்'' என்று கூறி, அரசன்

கையிலிருந்த மோதிரத்தையும் நயமாகப் பேசிப் பெற்றுக் கொண்டான்.

பெருந்திறல் படைத்த அவ்வசுரன் மோதிரத்தை அணிந்துகொண்டு நருமதை ஆற்றில் மூழ்கி மூன்று நாள் இருந்தான். நான்காம் நாள் மாயையினுல் அரசனது நகரத்தை அடைந்தான். முன்புபோல் முனிவன் உருக் கொண்டு சத்தியவானைக்கண்டு, 'பாதாள கேதுவின் தம்பி யாகிய அசுரனுல் உன் மகன் கொல்லப்பட்டான். உன் மகனுடைய மோதிரத்தை அடையாளமாகக் கொண்டு வந்தேன்' என்று சொல்லி மோதிரத்தைச் சத்தியவானிடம் கொடுத்தான்,

அது கேட்டுச் சத்தியவானும் நகரத்தாரும் அழுது புலம் பினுர்கள். குவலயாசுவன் மனைவி மதாலசையும் கணவனை நெஞ்சில் நினைத்துத் தீயிற் புகுந்தாள். அரசன் மருமகள் இறந்ததைக் கண்டு மேலும் புத்திரசோகம் அதிகப்பட்டுத் தனது இராச்சியத்தை மந்திரி வசம் ஒப்படைத்துச் சோக நிலையத்தை அடைந்திருந்தான்.

அசுரன் மதாலசை இறந்தவுடன் தான் கொடுத்த மோதிரத்தைக் கவர்ந்துகொண்டு மிக மகிழ்ந்தான்; நருமதை யாற்றின் நடுவிலிருந்து வெளியே வந்து, மோதிரத்தைக் குவலயாசுவன் கையிற்கொடுத்துத் தன் தவத்தை நினைத்தபடி முடித்துக் கொண்டதாகவும் அவன் ஊருக்குச் செல்லலாம் என்றும் கூறி விடைகொடுத்து அனுப்பினுன்.

அரசன் குவலயாசுவன் முனிவர்க்குரிய கடமை செய்த மகிழ்ச்சியுடன் தன் நகரை அடைந்தான். இறந்தான் என்று நினைத்த மகன் திரும்பி வந்ததைக் கண்ட சத்தியவான் மகிழ்ந்து வருத்தத்துடன் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் சொன்னுன். மதாலசை இறந்ததைக் கேட்ட இளவரசன் அளவில்லாத துன்பம் அடைந்தான். மன உறுதியால் மனைவி யின் பிரிவைத் தாங்கிக்கொண்டு அவள் இறப்பதற்குக் காரண மான அசுரனைக் கொல்ல வஞ்சினம் கொண்டான்; தெய்வத் தன்மை வாய்ந்த பிரமசிரசு என்னும் அம்பை அசுரன்மீது ஏவினுன். அந்த அம்பு அசுரனின் தலையைக் கொய்துவந்து குவலயாசுவன் முன் வைத்தது. உடனே அரசன் அத்தலையை ஏவலராற் சுடுவித்தான்.

அதன்பின் குணக்கடலாகிய குவலயாசுவன் மனைவியின் பிரிவுத் துன்பம் தணிதற்பொருட்டுப் பல நாட்டு இளவரசர்களாகிய தோழர்களை அழைத்துப் பலவகையான பொழுது போக்குகளில் காலம் கழித்தான். பலருக்கும் பலவகையாலும் உதவி இன்புற்றுன்.

பாதாள உலகத்திலிருந்து விளையாட்டின் பொருட்டுப் பூவுலகத்தை அடைந்த நாக குமாரர்கள் இருவர் குவலயாசுவனுடைய அருங்குணச் செயல்களைக் கேள்வியுற்று அரச குமாரர்கள் உருவெடுத்து மற்றைய அரச குமாரர்களோடு இருந்தார்கள். அவர்கள் குவலயாசுவனுடன் மிகவும் நெருக்கமாகப் பழகி இன்புற்றனர். மற்ற அரசகுமாரர்கள் அடிக்கடித் தம் நாடு சென்று வந்தனர். நாக குமாரர்கள் அங்ஙனம் செல்லாமல் தொடர்ந்து மூன்றுண்டுகாலம் இருந்தார்கள்.

பின்னர் நாக குமாரர்கள் அரசனிடத்தில் விடைபெற்றுத் தம்முடைய பாதாள உலகத்தில் உள்ள மாளிகையை அடைந்தார்கள்; தம்முடைய தந்தைக்குத் தம் நண்பனுகிய குவலயாசுவனின் குணங்களையும் அன்புரிமையையும் எடுத்துக் கூறினர்கள். அது கேட்டு நாகராசன் மிகவும் மகிழ்ந்து தன் மக்களை மீட்டும் குவலயாசுவன் நகரம் செல்ல விடை கொடுத்தான். நாக குமாரர்கள் குவலயாசுவனுடன் கலந்து மகிழ்ந்திருந்தார்கள்.



15. மதாலசை உயிர்பெற்றமை

நாகராசன் குவலயாசுவனை மகிழ்விக்க விரும்பினான்: பாதாளத்தில் வாழும் சித்தராகிய கபில முனிவரை அடைந்து மதாலசையை உயிர்ப்பிக்கத் தக்கதோருபாயம் சொல்ல வேண்டினான்.

"நாகர் தலைவனே, இறந்தவர்களை உயிர்ப்பிப்பது மகா தேவர் ஒருவரால்தான் முடியும் ஆதலால் நீ முறைப்படி இலட்சார்ச்சனை செய்து மகாதேவரை ஒரு மண்டலம் பூசிப் பாயாக. அதனால் சிவபெருமான் மகிழ்ந்து உன்முன் தோன்றி உன் கருத்தை உறுதியாக நிறைவேற்றுவார்" என்று கபில முனிவர் கூறினார்.

திருமாலின் அம்சமாகிய 'கபிலமுனிவர் கூறியதைக் கேட்ட நாகராசன், இலட்சார்ச்சனை விதியைத் தனக்குச் சொல்லியருள வேண்டினான்.

"வைகறையில் நீராடி நீலோற்பலம் இரண்டாயிரம், வில்வதளங்கள் முந்நூறும் எடுத்து வைத்து, நைவேத்தியங்களையும் அமைத்துக்கொண்டு முதலில் விநாயகப் பெருமானைப் பூசித்துப் பின்னர்த் துவாரபூசை, பீடபூசை, கலசபூசை, சங்கபூசை இவைகளைச் செய்து, சிவமூல மந்திரத்தை ஆயிரம் உருச் செபித்து மகாதேவரை ஆவாகனஞ் செய்து, ஆசனங் கொடுத்துப் பின்னர் உருத்திரத்தைப் பதினொரு ஆவிர்த்தியாகச் செபிக்க வேண்டும். பவன் முதலிய அட்ட நாமங்களைக் கூறி, மகாதேவரை வில்வத்தால் அருச்சிக்க வேண்டும். பின்னர் தியானத்துடன் சிவமூல மந்திரத்தை ஆயிரம் உருச் செபித்து, சகச்சிரநாமஞ் சொல்லி நீலோற்பல மலரால் அருச்சிக்க வேண்டும். பின்னர் உருத்திரதிரிசதி நாமத்தால் வில்வங்கொண்டு அருச்சனை செய்யவேண்டும். அதன் பின்னரும் சகச்சிரநாமம் சொல்லி நீலோற்பல மலர்களால் வழிபாடு செய்யவேண்டும். பின்னர் பலவகைப் பழங்கள், உணவுப் பொருள்கள் வைத்து வழிபாடு செய்து, சிவமூல மந்திரத்தை ஆயிரம் முறை உருச்செபித்துப் பூசையை முடிக்க வேண்டும்" இவ்வாறு கபில முனிவர் நாகராசனிடம் அருளோடு கூறினார்.

அதைக் கேட்ட நாகராசன் பூமிக்கு வந்து சிறப்பான தலமாகிய திருநாரையூரை அடைந்தான். அங்கு எழுந்தருளியுள்ள பொல்லாப் பிள்ளையாரையும் சிவலிங்கப் பெருமானையும் கண்டு வணங்கினன். பின்னர் தேவதச்சனாகிய துவட்டாவை வரும்படி எண்ணினன். உடனே துவட்டா வந்து நாகராசனை வணங்கினன். நாகராசன் அவனைப் பார்த்து, 'இங்கே சுவாமி திருமுன்னர் சிவபெருமானுடைய பூசைக்காக நீலோற்பலத் தடாகம் ஒன்று உண்டுபண்ணுவாயாக' என்று கூறினன். அதுகேட்டு கங்கை நீர் நிறைந்ததும் நீலோற்பல மலர்கள் நிறைந்ததுமான ஒரு தடாகத்தைத் துவட்டா நிறுவினன்.

நாகராசன் திருநாரையூரில் தங்கிக் கபிலமுனிவர் கூறிய விதிப்படிப் பரமேசுவரனை வழிபட்டான். ஒன்றரை மாதம் இலட்சார்ச்சனை செய்து அமுதத்திற்கொப்பான அன்னங்களால் அடியார் பூசையும் நடத்தினன்.

நாகராசன் செய்த பூசனைகளால் மனமுவந்த சிவபெருமான் உமையொடும் சிவகணங்களோடும் காட்சி தந்தார். நாகராசன் நமக மந்திரங்களைக் கூறிக்கொண்டு வணங்கி ஆயிரம் திருப்பெயர்களால் இறைவனை அழைத்துத் தோத்திரம் செய்தான். சிவபெருமான் நாகராசனுக்கு வேண்டும் வரம் தர விரும்பினர்.

"குவலயாசுவனின் பட்டத்தரசி மதாலசை ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஓர் அரசனால் கொல்லப்பட்டாள். அவளை மீட்டும் உயிர்ப்பித்தருள வேண்டும்" என வேண்டினன். பரமசிவனும் மகிழ்ந்து அவ்வாறே அருளினர்.

உயிர்த்தெழுந்த மதாலசையைப் பரமசிவன் பார்த்து, "குழந்தாய், நீ முன்னர் ஓர் அசுரன் மாயையால் இறந்தாய். இப்போது நாகராசன் முயற்சியால் உயிர் பெற்றாய். ஆதலால் நீ நாகராசன் மகளாக ஆனாய். நீ பல காலம் பூமியில் வாழ்ந்து உன் கணவனுடன் நமது பதத்தை அடைவாயாக" என்று கூறினர்.

பின்னர் நாகராசனை நோக்கி, "அன்பனே, நமது திருமுன்னர் உன்னால் உண்டாக்கப்பட்ட தடாகத்தில் நீராடுபவர் எல்லாப் பாவங்களும் நீங்கப்பெற்று எல்லாச் செல்வ

மும் அடைவர். இத்தடாகத்திற்கு நாக தீர்த்தம் என்றும் சிவகங்கை என்றும் பெயர்'' என்று திருவாய் மலர்ந்து சிவபெருமான் இலிங்கத்தில் மறைந்தார். நாகராசன் மதாலசையை அழைத்துக்கொண்டு நாகலோகம் சென்றனன்.

நாககுமாரர்கள் இளவரசர்கள் உருவில் குவலயாசுவ னுடன் பத்துநாள் தங்கி இன்புற்ருர்கள். குவலயாசுவனிடம் 'எம் நண்பஞன அரசர் பெருமானே, நாங்கள் இருவரும் உனது மாளிகையில் இந்நாள் வரை இருந்து இன்பம் அடைந் தோம். அதுபோல் நீயும் எங்கள் நாட்டுக்கு வந்து எங்களுடன் இருப்பதை எம் தந்தையார் பெரிதும் விரும்புகின்ருர். ஆதலால் நீ எங்கள் மாளிகையில் தங்கி நட்புரிமையைச் சிறப்பிக்க வேண்டும்' என வேண்டிக்கொண்டனர். அரசனும் அவ்வாறே வர இசைந்தான்.

குவலயாசுவன், அவ்விருவரையும் அரச குமாரர்களாகவே கருதி அவர்களோடு சென்ருன். நருமதை நதிக்கரையில் உள்ள ஒரு சிறந்த நகரத்தை அடைந்ததும் நாககுமாரர்கள் தேவ மாயையால் அரசகுமரனே மயங்கச் செய்து பாதாள நகரத்துக்குக் கொண்டுபோய்த் தங்கள் நாகவடிவத்தைக் காட்டிஞர்கள். அவர்கள் வடிவத்தைக் கண்டு அரசன் வியந்து அவர்களுடன் நாகராசன் இருக்குமிடத்திற்குச் சென்ருன். நாகராசன் அரசிளங்குமரனைக் கட்டித்தழுவி முறைப்படிச் சிறப்புச் செய்தான். அறுசுவையுடன் கூடிய விருந் திட்டான்.

மூன்று நாள் கழித்து இளவரசன் தன் நகரத்திற்குச் செல்ல விரும்பிஞன், மக்கள் வாழும் பூவுலகத்தில் பெறுதற்கு அருமையான பொருள் தன்னிடம் இருப்பதாகவும் அதைப் பெற்றுச் சென்று நகரத்தைச் சீரும் சிறப்பும் பெற ஆளும் படியும் நாகராசன் சொன்ஞன். மேலும் பாதாள நகரத்தில் கட்டழகும் இளமையும் உடைய நாககன்னியர்கள் இருப்ப தாகவும் அவர்களையும் அழைத்துச் சென்று இன்பமாக வாழும்படியும் சொன்ஞன்.

அது கேட்ட குவலயாசுவன், தான் ஏகபத்தினி விரத முடையவன் என்றும் மதாலசையைத் தவிர வேறு பெண்களை மனத்தாலும் தான் விரும்புவதில்லை என்றும் கூறிஞன்.

நாகராசன், தன் பூசை அறையில் அருமையான பொருள் ஒன்று அவனுக்காக வைத்துள்ளதாகவும் விரும்பினுல் அதைப் பெற்றுச் செல்லலாம் என்றும் சொன்னுன்.

அதற்கு இசைந்த குவலயாசுவன் நாகராசனுடைய பூசை அறையை அடைந்தான். அங்கே நாக கன்னியர் நடுவில் தன் மனைவி மதாலசையைக் கண்டு வியப்படைந்தான்; அளவற்ற மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்று அவளைக் கட்டித்தழுவினுன். இறந்தவளைக் கண்ட எல்லையில்லாத ஆனந்தத்தால் உணர் விழந்து மூர்ச்சையானுன். அதனைக் கண்ட மதாலசை தண்ணீர் தெளித்து அன்பு செய்து அவன் மயக்கம் நீக்கினுள்.

பின்பு நாகராசன் நிகழ்ந்த செய்தியெல்லாம் கூறி மதாலசையை நாகமணிகளாலும் ஆடை அணிகளாலும் அழகு செய்து குவலயாசுவனிடம் ஒப்படைத்தான். நாகராசன் மேலும் சிலநாள் தன் அரண்மனையில் தங்கச் செய்து சிறப்புச் செய்தான். குவலயாசுவன் நாகராசனிடமும் அவன் மைந்தர்களிடமும் விடைபெற்றுத் தன் நகரமாகிய மாகிஷ்மதியை அடைந்து தாய்தந்தையரைக் கண்டு நடந்த வற்றையெல்லாம் விவரித்தான், மன்னனும் இறந்துபோன தன் மருமகள் உயிர்பெற்று வந்ததைக் கண்டு எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டான்.

குவலயாசுவன் தன் மனைவி மதாலசையுடன் கூடிப் பல நூற்றுண்டுகள் இன்பமுடன் வாழ்ந்தான்; அறவழி தவருமல் ஆட்சி செய்து குடிமக்களைத் தந்தைபோல் காத்தான். பிறகு தன் மகன் அலர்க்கனிடம் தன்னுட்சியை ஒப்படைத்து விட்டுச் சிவனுறையும் கைலாயத்தை அடைந்தான்.

திருநாரையூர் மகாலிங்கப் பெருமான், இறந்த உயிரை உயிர்ப்பித்து அருள் செய்த இரண்டாவது திருவிளையாடலைப் படிப்போர் விரும்பிய பேறுகளைப் பெறுவார்கள்.

———

16. அலர்க்கனுக்கு அருள் புரிந்தமை

முனிவர்கள் வேண்டிக் கொள்ள முருகப்பெருமான் அலர்க்கனுடைய வரலாறு சொல்லத் தொடங்கினுர்.

யோகியாகிய குவலயாசுவனுக்கு மதாலசையிடமாக ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்குத் தொட்டிற் பருவத்திலேயே மதாலசை ஞானநெறி புகட்டினமையால் அவர்கள் திட மனத்துடன் தவத்தின்மேல் சென்று விட்டார்கள்.

தன் மைந்தர்கள் தவம் மேற்கொள்ளக் காரணம் தன் மனைவி மதாலசையே என்று அறிந்து இராச்சியத்தை அமைச்சர்களிடம் ஒப்படைத்து வனத்தை அடைந்தான். தன் கணவன் காடு சென்றமைக்குரிய காரணத்தை அமைச்சர்கள் மூலம் அறிந்த மதாலசை தன் கணவனைத் தேடிச் சென்ருள். அரசன் திருநாரையூரில் முனிவர்களுடன் தங்கியிருப்பதை அறிந்து, அங்குச் சென்று அன்பால் வணங்கி, '' மாமன்னனே, என் உயிர்த் தலைவனே, என்னைப் பிரிந்து இங்கு வரக் காரணம் என்ன? யான் பிழை செய்திருப்பின் பொறுத்தருள வேண்டுகின்றேன். இனி உன் கட்டளைப்படியே நடப்பேன். இது சத்தியம்'' என்று சொல்லி அழுதாள்.

'' அழகிய மதாலசையே, உன் உபதேசம் கேட்டு ஏழு மக்கள் தவம் மேற் கொண்டார்கள். நாட்டை ஆளுதற்கு இளவரசன் இல்லாமையாலும் நமக்குப் பிள்ளை இல்லாமையாலும் இனி உபதேசம் செய்யாதே என்று சொன்னேன். பிறகும் நீ உன்போக்கினில் மாருமையால் அடுத்துப் பிறந்த இரண்டு அரச குமாரர்களும் உன் உபதேசம் கேட்டுத் தவத்துக்குச் சென்று விட்டார்கள். ஆதலால் நான் பிள்ளையில்லாதவனுனேன். கணவன் வெறுக்கும் செயலைச் செய்தமையால் உன்னை விட்டு நான் காட்டகத்தை அடைந்தேன். நீ ஏன் இங்குவந்தாய்?' எனக் குவலயாசுவன் கேட்டான்.

மதாலசை அரசனை வணங்கி மீண்டும் கூறத் தொடங்கினுள்: 'அரசே, இந்த ஒன்பது பிள்ளைகளும் பிரமபுத்திரர்கள். பிரமாவின் சாபத்தால் உன் பிள்ளைகளாய் வந்து

பிறந்தார்கள். அவர்கள் என் முகமாகத் தத்துவ உண்மைகளை உணர்ந்து உடனே துறவியானார்கள். உனக்கு இன்னுமொரு மகன் பிறப்பான். அவன் உன் நாட்டை ஆளுவான். ஆதலால் நீ நகரத்திற்கு வந்து இராச்சியத்தைக் காப்பாயாக!' என்று வேண்டினாள்.

மன்னன் அதுகேட்டு இராச்சியத்தில் பற்றுள்ள மகனைக் கண்ட பிறகே நாடுவர விரும்புவதாகவும் விருப்பம் இருப்பின் மதாலசை அவனுடன் தங்கலாம்; இல்லையெனில் நாடு செல்லலாம் என்றும் கூறினான். கணவன் மனமறிந்து அதன் படி நடப்பதையே மதாலசை விரும்பினாளாதலால் மன்னனுடன் காட்டிலேயே தங்கிவிட்டாள். தங்கிக் கணவனுக்குப் பணிவிடை செய்துவரும் நாளில் மதாலசை மன்மதனை ஒத்த ஆண் குழந்தையைப் பெற்றாள்.

குவலயாசுவன் குழந்தை பிறக்கும்வரை அலர்க்க (வெள்ளெருக்கு) இலையை உண்டு தவமிருந்தமையால் அக் குழந்தைக்கு அலர்க்கன் எனப் பெயரிட்டான். அவ்வரச குமாரன் ஒருநாள் யாரோ கூறிய 'கம்' என்ற சொல்லைக் கேட்டு அன்றுமுதல் அழும்போதும் சிரிக்கும்போதும் பேசும் போதும் விளையாடும்போதும் கம், கம், கம் என்றே கூறுவானாயினான்.

அக்குழந்தைக்கு இரண்டு வயது நடக்கும்போது குவலயாசுவன் மனைவியோடும் புத்திரனோடும் ஒரு துவாதசியாகிய நன்னாளில் வைகறையில் நீராடத் தடாகம் சென்றான். அரசன் முதலில் நீராடி இல்லம் சென்றான். மதாலசை தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்தாள். கரையிலிருந்த குழந்தை பொல்லாப் பிள்ளையார் ஆலயத்துள் நுழைந்தது.

கரையில் குழந்தையைக் காணாத மதாலசை தன் கணவனுடன் வீடு சென்றிருக்கும் என நினைத்து நீராடி வீடு சென்றாள். கோயிலுக்குள் நுழைந்த குழந்தை தாய்தந்தையரைக் காணாமையாலும் இருளாயிருந்தமையாலும் கம் கம் கம் என்று சொல்லிக்கொண்டு அழுதது. 'கம்' என்னும் ஒலிப் பொருளாகிய பிள்ளையார் குழந்தைமுன் தோன்றித் தந்தையன்புடன் அக்குழந்தையை எடுத்துப் புத்திதேவியிடம் தந்தார். அத்தேவியும் திருமுலைப்பால் அளித்துக் கலைஞானங் களையும் அளித்தாள். அக்குழந்தையை வாங்கிப் பிள்ளையார் சித்திதேவியிடம் தந்தார். சித்திதேவியும் திருமுலைப்பால் ஊட்டி அதனுடன் எல்லாச் சித்திகளையும் அளித்தாள். பொன்னொளியாய் விளங்கிய குழந்தைக்கு விநாயகப் பெருமான் யாராலும் மாற்ற முடியாத கவசம் அணிவித்து, வில்லும் அம்பறுாத் தூணிகளும் கதையும் கொடுத்தார்.

தேவிமார் இருவரும் குழந்தையை அணி செய்தனர். மெய்ஞ் ஞானம் பெற்ற குழந்தை மூவரையும் துதிக்கத் தொடங்கியது.

"எப்போதும் அன்பர்களுக்குத் திருவையும் மெய்யுணர் வையும் அளிப்பவர்களும் அழியாத இன்பத்தை அளிப்பவர் களும் ஆசையை நீக்குபவர்களும் ஆகிய சித்திபுத்தி தேவிமார் களேயும் சத், ஓம், தத் என்னும் மூன்று சொற்களுக்கும் ஒரே குறித்த பொருள் ஆவாரும் மூன்று கண்களை உடையவரு மாகிய விநாயகப் பெருமானேயும் வணங்குகின்றேன்.

ஒருகோடி மின்னல் ஒளியும் கற்பூர ஒளியும் போன்ற வடிவுடையவர்களும், வணங்கி நின்றவர்களுக்கு யோகத் தையும் பத்தியையும் கொடுப்பவர்களுமாகிய மகா சித்தி புத்தி தேவிமார்களேயும் மயில் போன்ற சித்திபுத்திகளின் கணவராதலால் தம் வயமுடைய அரசரும் உயிர்களின் செய்தியெல்லாம் கண்டு நிற்கும் வடிவமுடையவருமாகிய விநாயகப் பெருமானேயும் வணங்குகின்றேன்."

பெருமை வாய்ந்த அவ்வரசிளங்குமரன் இவ்விதம் சித்தி புத்தி தேவிகளேயும் கணபதியையும் துதித்துக்கொண்டு கணேசப் பெருமானது சந்நிதியில் நின்முன்.

அப்போது குழந்தையைக் காணுமல் கணவனுடன் விளக் கொளிகொண்டு சிவபெருமான் ஆலயத்தை அடைந்த மதாலசை குழந்தையைக் கணேசர் சந்நிதியில் கண்டாள்.

மின்னற் கூட்டம் போன்ற ஒளி உடையவனும் சிந்தாமணி யால் அலங்கரிக்கப்பட்டவனும் கணேசப் பெருமானுடைய அடையாளங்களுடன் கூடிய கவசத்தால் போர்க்கப்பட்டவ னும் சண்பக மலர்மணம் உடையவனும் வில் கதைகளோடு விளங்குபவனும் ஆகிய புத்திரனே அரசன் தன் மனேவியோடு கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். நடந்த வரலாற்றைச் சொல்ல வேண்டுமாய் விநாயகப் பெருமானே வேண்டினன்.

விநாயகப் பெருமான் 'கம்' என்னும் மந்திரச் சிறப்பால் உண்டான நலன்களை விரிவாக எடுத்துச் சொன்னர். இக் குழந்தையை அழைத்துக்கொண்டு நகர்க்குச் செல்லுமாறும் அக்குழந்தை வளர்ந்து மனுவேந்தன்போல் அரசாட்சி செய் வான் என்றும் கூறினர். மேலும் அலர்க்கன் நூருயிரம் ஆண்டுகள் யாகஞ்செய்து யோகம் பயின்று விநாயகரை அடைவான் என்றும் கூறி மறைந்தார்.

குவலயாசுவன் திருநாரையூரில் உள்ள முனிவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மனேவி, மகனுடன் மாகிஷ்மதி நகரத்தை அடைந்து முறைப்படிச் செங்கோல் செலுத்தி வந்தான்.

———

17. அலர்க்கனைச் சோதனை செய்தமை

விநாயகர் வழிபாடு உடையவர்களில் மிகவும் சிறந்த அலர்க்கன் இளமைப் பருவம் எய்தியவுடன் இளவரசுப் பட்டம்பெற்று மூவுலகையும் வென்று தன் தந்தையின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான். தந்தை சொற்கடவாமல் நாட்டை ஆண்டுவந்தான்.

எல்லா வருணத்தவரும் தத்தமக்குரிய நெறியில் நடந்து மற்றவர்களுக்கு உதவி வாழ்ந்து வந்தனர். தீய நெறியை நினைப்பவன்முன் கதையுடன் தோன்றி அவனை அலர்க்கன் அடித்துக் கொன்றுவிடுவான். அதனால் அரசனது தண்டனைக்குப் பயந்து எல்லோரும் அறவழியில் பற்றுடையவர்களாய் நடந்துகொண்டனர்.

தேவரும் அசுரரும் அன்பு செய்து அச்சமின்றி வாழ்ந்தனர். புலியும் மானும் ஒரு துறையில் நீருண்டன. கொடையாளரும் கொள்வாரும் அவன் நாட்டில் இல்லை. முனிவர்களும் அசுரர் முதலியவர்களின் தொல்லையின்றித் தவம் செய்தனர்; யாகங்கள் இயற்றினர்.

தேவேந்திரன் அலர்க்கனைச் சோதிக்க எண்ணி அந்தண வடிவில் அவன் அரண்மனையை அடைந்து, 'வேண்டுவார்க்கு வேண்டியவற்றைத் தரும் கொடைக்குணம் உடைய பேரரசனே! யான் பிறவிக் குருடன்; கிழப்பருவம் அடைந்துவிட்ட நான் என் மகனைக் காண விரும்புகின்றேன். அதன் பொருட்டு அசுவினி தேவதைகளைக் கேட்டேன். அழகிய அரசனது கண்களை உன் கண்களில் பொருத்தி மருத்துவம் செய்தால் கண்ணொளி கிடைக்கும் என்று தேவதைகள் கூறின. உன் அழகிய கண்களை எனக்கு அளித்துதவ வேண்டும்' என்று வேண்டி நின்றான்.

அலர்க்கன் உவப்புடன் தன் கண்களை எடுத்து அவன் கையிற் கொடுத்தான். அவற்றைப் பெற்றுக்கொண்டு அந்தணன் மறைந்தான். பிறகு இந்திரன் முப்பத்துமுக்கோடி தேவர்களுடன் வந்து அரசனுக்கு முன்போல் கண்களை உண்டாக்கி வேண்டும் வரங்களையும் கொடுத்துத் தன்னுலகம் புக்கான்.

அலர்க்கனின் மேலான கொடைத் தன்மையினையும் பிற சிறப்புக்களையும் இந்திரன் மூலம் அறிந்த திருமால் பசு உருக் கொண்டு அலர்க்கன் அரண்மனையை அடைந்தார். அலர்க்கனைக் கண்ட பசு அழுது புலம்பித் தன் கன்று புலியால் பிடிக்கப்பட்டது என்றும் பசு தன்னைத் தரச் சம்மதித்தும் புலி கன்றினை விடாமல் அலர்க்க அரசனின் உடலில் மேன்மை

வாய்ந்த வலப்பாகத்தைத் தந்தால் கன்றை விடுவதாகவும் கூறிற்று என்றும் சொல்லி அழுது, அலர்க்கனின் வலப் பாகத்தை இரந்து கேட்டது.

அலர்க்கன் அப்பசுவைப் பார்த்து, ' நான் என் உடலை உடைவாளால் இரு கூறு செய்கிறேன். நீ வலப்பாகத்தை எடுத்துச் சென்று புலியிடம் கொடுத்து, உன் கன்றினை மீட்டுக் கொள்க ' என்று கூறினன். பின்னர் நாட்டினைத் தன் மைந்தனிடம் ஒப்படைத்து உடலை இரு கூருகப் பிளந்துகொண்டான். திருமால் அருள்கூர்ந்து இரண்டு கூறுகளையும் ஒன்ருகச் சேர்த்துத் தம் கைகளால் தடவினர். உயிர்பெற்றெழுந்த அலர்க்கன் திருமாலை வணங்கி மகிழ்ந்தான்; திருமால் அலர்க்கனை வாழ்த்தி வரமளித்து வைகுண்டம் அடைந்தார்.

திருநாரையூரில் எழுந்தருளி இருக்கும் கேடிலியாகிய சிவபெருமானும் அலர்க்கனைச் சோதிக்க விரும்பினர். நான்காவது ஆச்சிரமத்தைக் கடந்த திருவடிவுகொண்டு அலர்க்க மன்னன் அவையை அடைந்தார்; அரசன் அவரை நன்கு வரவேற்றுப் பணிவிடை செய்தான். அவர் தாம் விரும்பும் உணவளிக்க வேண்டும் என்று சொன்னர். அவர் விரும்பும் உணவினைத் தவருமல் செய்து அளிக்க அலர்க்கன் இசைந்தான். மிக்க அழகும் குணமும் உடைய அரச குமாரனுகிய அவன் பிள்ளையைத் தாய் மடியில் கிடத்தி அவன் வெட்ட அதனை மருமகள் சமைத்துத் தர வேண்டும் என வந்தவர் கூறினர்.

அலர்க்கன் அவ்வாறே தன் மகன் சுதர்மனை உணவாக்கி விருந்தினருக்கு அளித்தான். திருநாரையூர்ப் பெருமான் அவனது செயற்கருஞ் செயலைக் கண்டு பெரிதும் திருவுளம் மகிழ்ந்து, உமையுடன் காட்சி தந்தார். அரசன் மிக மகிழ்ந்து தேவியோடும் மருமகளோடும் வணங்கி நமக மந்திரங்களால் எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த சிவபெருமானைத் துதித்தான்.

சிவபெருமான் திருவருளால் அரசன் மகன் சுதர்மனும் உயிர்பெற்று எழுந்து முன்னையிலும் மிகுதியான அழகும் குணமும் பலமும் வீரமும் பெற்று இறைவனை வணங்கித் தந்தையின் திருவடியில் வீழ்ந்து வணங்கினன். இறைவன் அனைவர்க்கும் வேண்டும் வரம் அளித்துத் திருநாரையூரை அடைந்தார்.

அலர்க்கனுக்கு நேர்ந்த தெய்வச் சோதனை, திருநாரை யூர்ப் பெருமான் திருவிளையாடல், விநாயகப் பெருமான் சிறப்பு ஆகியவற்றை அன்புடன் படிப்பவர்கள் எல்லா நன்மைகளும் பெற்று முடிவில் சிவபுரத்தை அடைவார்கள்.

---

18. மௌசலன் வரம் பெற்றமை

மௌசலன் ஓர் அந்தணப் பெண்ணின் மகன். அவன் வித்தையின் பொருட்டு வசிட்டரை அடைந்து குரு பத்தியுடன் அவருக்குப் பணிவிடைசெய்து வந்தான்.

ஒரு நாள் வசிட்டர் அவனை அன்புடன் பார்த்து, 'சீடனே உன் தாய் ஒரு விதவை. அவள் ஒரு வேடனுடன் கூடி உன்னைப் பெற்றாள். அதனால் அவள் வாழ்ந்த காசி நகரத்தை விட்டு நீக்கப்பட்டாள். பின்னர் அவள் ஸ்ரீநகரை அடைந்து அங்குள்ள பிராமணர்களைக் கொண்டு உனக்குப் பிராமணச் சடங்குகள் செய்வித்தாள். வேடனாகிய நீயும் உன்னை அந்தணனாக நினைத்துக் கொண்டு என்னிடம் கல்வி கற்க வந்துள்ளாய்; உன் பணிவிடையால் மகிழ்ந்தேன். நீ வேடனால் பார்ப்பனப் பெண்ணுக்குப் பிறந்தமையால் வேத வித்தைக்கு நீ உரியவன் ஆகமாட்டாய். நீ எனக்குப் பணிவிடை செய்தமையால் பஞ்சமரைக் காட்டிலும் உயர்ந்தவனாய் மிலேச்சர்களுக்குத் தலைமை பெற்றாய். உனக்கு மிலேச்ச தந்திரங்களைச் சொல்வேன். அதில் புலமையும் சித்திகளையும் பெற்று என்னுடைய காமதேனுவின் புத்திரர்களாகிய மிலேச்சர்களுக்குக் காவலனும் குருவும் ஆவாய்,' என்றார்.

வசிட்டர் ஆணைப்படி மிலேச்ச தந்திரங் கற்ற மௌசலன் திருநாரையூரை அடைந்து மிலேச்ச தந்திர நெறிப்படி சிவனை நினைந்து தவம் செய்தான். தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவன் முன்தோன்றி வேண்டும் வரத்தைக் கேட்குமாறு பணித்தார்.

மௌசலன், 'சிவபெருமானே, என் மிலேச்ச தந்திரத்தால் மகிழ்ந்த மகாதேவரே, எனக்கும் என் மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் இவ்வுலகில் சிறப்பும் செல்வமும் அளிக்க வேண்டும். வேதங்களைக் காட்டிலும் என் மார்க்கத்திற்கு விரைந்து சித்திபெற அருளவேண்டும். எப்போதும் என் மார்க்கத்தின் தெய்வமாக இருக்க வேண்டும்' என்று திருநாரையூர் நாயகனை வேண்டினான்.

'எமது ஆணைப்படி உன்னுடைய தந்திரத்திற் கூறப்பட்ட மந்திர சித்தியால் அத்தேவதைகள் மிகுந்த விருப்பம் உடை

யனவாய் விரைவில் பயன் அளிக்கும். வெளிப்படா வடிவோடு எங்கும் நிறைந்திருக்கும் நாம் உன் தந்திரத்தில் சொன்னபடி நடப்பவர்க்கு அதில் கூறப்பட்ட சித்தியைக் கொடுப்போம். ஆனுல், உண்மை முத்தியைக் கொடுப்போமல்லோம். மிலேச்ச தந்திரங்கள்படி நடப்பவர்க்குப் பூதமண்டல வாசத்தை அளிப்போம்.'

''வசிட்டனுடைய காமதேனுவிடம் தோன்றிய மிலேச்சர்கள் கேகய நாட்டில் நிருதி திக்கில் உள்ள காடுகளில் வசிக்கின்ருர்கள். சமதக்கினியினது காமதேனுவிடம் பிறந்த மிலேச்சர்கள் காந்தார நாட்டில் நிருதி திசையில் உள்ள காடுகளில் வசிக்கின்ருர்கள். நீ அவர்களையெல்லாம் உன் வசப்படுத்தி அக்காடுகளை நாடுகளாக்கி அவர்களுக்கு மிலேச்ச தந்திரங்களை உபதேசித்து அவர்களின் தலைவனுக இருந்து ஆட்சி செய்வாயாக.

'அம்மிலேச்சர்கள் துவாபர யுகத்தில் உன் மார்க்கத்தைப் பின்பற்றி மௌசலேயர் என உலகப் புகழ்பெறுவார்கள். துவாபரயுக முடிவில் க்ஷத்திரியர்கள் மறைவார்கள். பின்னர் அனைவரும் உன் நெறியைப் பின் பற்றி ஒழுகுவர். மௌசலேயர்கள் உயர்ந்த பாரத கண்டத்தில் புகுந்து அரசாளுவார்கள்'' என்று அசரீரியாகத் திருநாரையூர் இறைவன் மௌசலனுக்கு வரம் அருளினுர்.

இறைவன் கூறிய வண்ணம் பல பட்டணங்களைப் புதியனவாக நிறுவி மிலேச்ச மார்க்கத்தைப் பரப்பி, மிலேச்ச கன்னியர் பலரை மணந்து இன்பமாக வாழ்ந்தான். தன் குமாரர்கள் எண்மருக்கும் தன்நாட்டைப் பிரித்துக்கொடுத்து யோக நிலையிலிருந்து முத்தியின்பம் பெற்ருன்.

திருநாரையூர்ப் பெருமான் அருளால் வேடன் ஒருவன் நிலையான ஒரு மதத்தை நிலைநிறுத்தி முத்தியின்பத்தையும் பெற்ருன்.

---

19. புறச்சமய வரலாறு உரைத்தமை

குமரக் கடவுள் முனிவர்களுக்கு மிலேச்ச தந்திரத்தையும் அம்மதத்தின் கொள்கைகளையும் சுருக்கமாகத் திருவாய் மலர்ந்தருளுதல்.

வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் நேர்ந்த போரில் வருணாச்சிரமங்களைப் புறஞ் செய்தவர்களான வீரர்கள் உண்டுபண்ணப் பெற்றார்கள். அவர்கள் விசுவாமித்திரருடைய படைகளை அழித்துவிட்டார்கள். பிரமபுத்திரராகிய வசிட்டர் அம்மிலேச்சர்களை நன்னெறிப் படுத்துதற்பொருட்டு மிலேச்ச தந்திரத்தை இயற்றினார். அச்சாத்திரம் விளங்குதற்பொருட்டு நற்குணமுடைய சீடனாகிய மௌசலனுக்கு அதை உபதேசித்தார்.

அதிட்டான தேவதைகள் மிலேச்ச தந்திரத்தில் கூறப் பெறுமையால் சுவர்க்கம் முதலிய உலகங்களும் இந்திரன் முதலிய தேவர்களும் கூறப்பெறவில்லை. அவ்வியத்தோபாசனையால் இந்தச் சமயத்தவர்கள் பிரமத் தன்மையை நிச்சயம் அடைவார்கள். மண்டலோபாசனை, அக்கியுபாசனைகளால் இம் மதத்தவர் இம்மையின்பங்களையும் சித்த சுத்தியையும் அடைவார்கள். அவ்வியத்தமும் சூரியனும் அக்கினியுமே இம்மதத்திற்குத் தேவதைகளாம்.

மிலேச்சர்கள் காடுகளிலும் மலைகளிலும் அரசர்களாய் மகிழ்ந்திருந்தார்கள். மகா பாரதத்தில் கிம்புருடம் முதலிய கண்டங்களில் வசித்த க்ஷத்திரியர்கள் அருச்சுனனால் கொல்லப்பட்டார்கள். க்ஷத்திரியர்கள் இன்மையால் அவர்கள் ஆண்ட நாடுகள் மிலேச்சர்கள் வசமாயின. அங்கேயிருந்த மேன் மக்கள் அந்நாடுகளை விட்டுப் பாரத கண்டத்தை அடைந்தார்கள். அங்கேயே தங்கிய மற்றவர்களெல்லாம் மிலேச்சர் முதலியவர்களுடன்கூடி அவர்கள் மதத்தைப் பின் பற்றினர். கலி அவர்களைப் பிடித்துக் கொண்டான்.

கலியினுடைய ஆயிர ஆண்டுகள் முடிவிலே பரதகண்டம் தவிர நாவலந்தீவு முழுவதும் வேதாகம தருமத்தை விட்டதாயிற்று. இன்னும் மிலேச்சர் முதலிய புறமதத்தவர்கள் உலகம் எங்கும் நிறைந்தார்கள். கலியுக முடிவில் ஓர் அந்தணனைத் தவிரப் பரதகண்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் மிலேச்சர்கள் ஆவார்கள்.

———

20. கலி வரப்பெற்றமை

நான்கு யுகங்களின் அதிதேவதைகளும் காசித் தலத்தில் உள்ள துண்டி விநாயகப் பெருமான் சந்நிதியில் அவரையே தியானித்துக் கொண்டு மிகக் கடுமையான தவம் செய்தார்கள். விநாயகப் பெருமான் கிருதயுகம், திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்றினுக்கும் வேண்டிய வரங்களை அளித்து, கலியை நோக்கி, 'திரேதாயுகத்தில் என்னுடைய தண்டகவனத்தில் தவம்செய்து, நீ வேண்டிய வரங்களைப் பெறுவாய்' என்று அருள்புரிந்தார்.

திரேதாயுகத்தின் முடிவில் கலி தண்டகவனத்திலுள்ள திருநாரையூரிலே விநாயகப் பெருமான் சந்நிதியில் கடுந்தவம் செய்தான். அவன் தவத்துக்கு மகிழ்ந்து கணேசப்பெருமான் காட்சிதந்தார். அவன் வேண்டும் வரங்கள் தர இசைந்தார்.

கலி கணேசப் பெருமானை வணங்கி, 'ஐயனே, கிருதயுகம் முதலிய மூன்று யுகங்களும் என் அண்ணன்மார்கள். உமது வரத்தைப் பெற்ற அவர்கள் தம்மைச் சேர்ந்த தேவர், மனிதர்களை இன்புறுத்துகின்றார்கள். என்னால் அடுக்கப்பட்ட பூதர்களையும் மனிதர்களில் மிலேச்சர்களையும் இன்புறுத்துவதற்குரிய வழிமுறைகளையும் ஏற்ற காலத்தையும் எனக்கு அருளுதல் வேண்டும்' என வேண்டினான்.

'உன் அதிகாரம் நாலாவது யுகத்தில் பரவியிருக்கும். மக்கள் அனைவரும் உன்னை மிகவும் விரும்புவார்கள். பொதுவான தருமத்தில் நிற்கும் மிகச் சிலரைத் தவிர ஏனையோர் அனைவரும் உன்னுடைய நெறியையே பின்பற்றுவார்கள். உன் ஆட்சியில் சான்றோரும் முனிவர்களும் இருக்கும் இடம் தெரியாமல் குகைகளில் ஒதுங்கி வாழ்வார்கள். பாரத கண்டம் தவிர நாவலந் தீவு முழுதும் வருண தருமம் இன்றியும் வேதாகம நெறியினின்று நீங்கியும் இருக்கும்.'

'கலியுக முடிவில் நாம் கலியொடு கூடித் தூமிரவிக்கிரசேனனாகத் தோன்றி மிலேச்சர்களை யெல்லாம் அழித்துக் குகைகளில் உள்ள அந்தணர்களை அழைத்துக் கொண்டு வந்து பூமியில் நிலைபெறச் செய்து சந்திர வமிசத்திற்பிறந்த தேவாபி

என்பவனையும் சூரியவமிசத்திற் பிறந்த மருத்துவானையும் பூமியில் அரசர்களாகச் செய்து வேதாகம மார்க்கங்களை நிலை பெறச் செய்து எமது இத்தலத்தை அடைவோம்.'

'சனகர் முதலிய ஐந்து யோகிகள் அத்துவித சைவ நெறியை நிலை நிறுத்துவார்கள். நீ பூமியில் இருந்து நான் சொன்ன முறைப்படி உலகத்தை உன் வயப்படுத்தி நான்கு இலட்சம் ஆண்டுகள் ஆட்சிசெய்வாயாக. உன் மார்க்கங்களுக்குக் குறைவுவரும் போதெல்லாம் உலகத்திலே மிலேச்சர்களைப் பற்றினவனாகிய நீ உனது வடிவத்தை அஞ்சாது தோன்றச் செய்து அதருமத்தின் முன்னேற்றத்தைச் செய்வாயாக. சகல மதங்களுக்கும் நாதனாகிய நாம் கலிப்பிரிய கணேசன் என்று பெயர் பெற்று மிலேச்சர்களின் மதங்களுக்குரிய தெய்வரூபமாகவும் இருப்போம்' என்று வரமளித்துக் கணேசப் பெருமான் மறைந்தருளினார்.

21. பாண்டு மன்னன் வரம் பெற்றமை

துவாபர யுகத்தில் திருநாரையூர்ப் பெருமான் செய்த அருள் செயல்களை அறுமுகக் கடவுள் முனிவர்களுக்குச் சொல்லுவாராயினர்.

சந்திரவமிசத்திலே சந்தனு என்னும் அரசன் இருந்தான். வருணனின் அமிசமாகப் பிறந்தவன். அவ்வரசன் பிரமனின் சாபத்தால் பூமியிற் பிறந்த கங்கையையும் வசு என்னும் அரசன் இல்லத்தில் பிறந்து பரதவர் இல்லத்தில் வளர்ந்த யமுனையையும் முறைப்படி மணந்துகொண்டான்.

கங்கை வயிற்றுதித்தவன் காங்கேயன் என்னும் வீட்டுமன். யமுனை வயிற்றுதித்தவன் விசித்திரவீரியன். அரசன் விசித்திர வீரியனுக்குப் பட்டம் கட்டினான். பின்னர்த் தன் சாப நீக்கம் பெற்றுத் தன் வருண லோகத்தை அடைந்தான்.

வீடுமன் தன் தம்பியிடமே நாட்டைக்கொடுத்து மகிழ்ச்சியுடன் ஆளச் செய்தான். விசித்திரவீரியன் நோய் வாய்ப்பட்டு இளமையிலேயே இறந்தான். விசித்திரவீரியன் மனைவியர் வியாசமுனிவருடன்கூடி இரண்டு பிள்ளைகள் பெற்றனர். மூத்தவன் திருதராட்டிரன்; மிக்க பலம் உள்ளவன். இளையவன் பாண்டு; அவன் பாண்டு ரோகம் உடையவன். வியாச முனிவர் கட்டளைப்படி பாண்டு தன் நோய் நீக்கம் விரும்பி திருநாரையூரை அடைந்து முறைப்படி நீராடி அங்குள்ள கணேசப் பெருமானையும் திருநாரையீசராகிய பரமசிவனையும் தியானம் செய்து வழிபட்டு வந்தான்.

ஒன்றரை மாதம் வழிபாடு செய்தபின் பரமசிவன் உளம் மகிழ்ந்து இலிங்கத்தினின்றும் தோன்றிக் காட்சி தந்தார். பாண்டு சிவபெருமானைக் கண்டவுடன் நமக மந்திரங்களைக் கூறித் துதித்தான்.

பின்னர் நாரையூர்ப் பெருமானிடம் தன் நோயை நீக்கியருளவும் மக்கட் பேற்றையருளவும் அரச செல்வங்கள் அருளவும் வேண்டினான். நோயை நீக்கிய இறைவன் பாண்டு

முற்பிறவியில் பெற்ற சாபத்தால் பிள்ளைப்பேறு இல்லாதவன் ஆவான் என்றும் தம் கருணையால் தேவர்கள் மூலம் ஆறு பிள்ளைகள் அடைவான் என்றும் கூறினர்.

'தரும தேவன் யமதருமன் அமிசமாக உனக்கு மூத்த மைந்தனுகப் பிறப்பான். உருத்திரன் வாயுவின் அமிசத்துடன் இரண்டாம் மகனுகப் பிறப்பான். குகன் திருமால் இந்திரன் ஆகிய இருவரின் அமிசத்துடன் மூன்ரும் மகனுகப் பிறப்பான்; சாத்தா நான்காம் மகனுகவும் பிரமன் ஐந்தாம் மகனுகவும் தோன்றுவார்கள். இந்த ஐவரும் நல்லவர்கள், வல்லவர்கன், அறநெறி வழுவாமல் நடப்பவர்கள். சகச்சிர கவசன் என்னும் அசுரன் சூரியன் அமிசத்துடன் பிறப்பான். இவன் கொடைக் குணத்தால் யாவராலும் புகழப்படுவான். இவன் உன்னுடைய ஐந்து பிள்ளைகளுக்கும் பகைவனுய் இருப்பான். உன்னுடைய ஐந்து பிள்ளைகளும் அறநெறியில் நடந்து இவனைக் கொன்று நாவலந்தீவு முழுமையும் ஆளுவார்கள்; அசுவமேதங்களையும் இராசசூயங்களையும் செய்வார்கள்.'

'நீ உன்னுடைய மூத்த மைந்தனுக்கு ஒன்பது வயதான போது முனிவன் சாபத்தால் இவ்வுடலை நீத்துப் புண்ணிய லோகம் அடைந்து தருமராசன் சபையிலே ஐம்பது ஆண்டுகள் அவனுல் பூசிக்கப் பெறுவாய். உன் மைந்தர்கள் செய்யும் இராசசூய பலத்தால் இந்திர சபையில் நூறுயுகம் மகிழ்ந் திருந்து சிவலோகத்தை அடைவாய்' என்று திருநாரையூர்ப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினர்.

பாண்டு மன்னன் சிவபெருமான் அருளிய வண்ணம் நல்லுடல் பெற்று முந்நூறு ஆண்டு தருமநெறியாற் பூமியைக் காத்து மக்களைப் பெற்று மூத்தவனது ஒன்பதாம் வயதில் உடலை நீத்துச் சிவபெருமானின் சாரூப்பிய நிலையடைந்தான்.

---

22. பாண்டவர் வரலாறு உரைத்தமை

கந்தன், விட்டுணு முதலியவர்கள் பாண்டு மன்னனுக்குப் பிள்ளைகளாய்த் தோன்றிச் செய்த செயல்கள்; அவர்கள் மனிதத் தன்மை பெற்றமைக்குரிய காரணங்கள் ஆகியவற்றை முருகப் பெருமான் கூறினார்.

'முன்னொரு காலத்தில் பிரமா விட்டுணு முதலானவர்கள் செருக்குற்றவர்களாய்த் தங்கள் தந்தையாகிய சிவபெருமானையும் மூத்த பிள்ளையாகிய விநாயகரையும் அவமதித்துத் தங்களையே பரமான்மாவாகிய முழு முதற் பொருளாக மதித்துக் கொண்டார்கள். அதனால் சிவபெருமான் கோபங் கொண்டு வைரவ மூர்த்தியாகி அவர்களிடத்திலே இரத்த பிச்சை ஏற்றார். பிரம விட்டுணுக்கள் வைரவரின் கபாலத்தை நிறைக்க முடியாதவர்களாகித் தாங்கள் பூமியிலே தோன்றிப் பாரதப் போரில் கபாலத்தை நிரப்புவதாக வைரவரிடம் வேண்டிக் கொண்டனர்.

அப்போது விட்டுணு, தான் துவாபர யுகத்தில் பூமியில் தோன்றி அசுரர்களையும் துட்டர்களையும் சேனைகளுடன் கொன்று கபாலத்தில் பாதியை நிரப்புவதாகக் கூறினான். நரன் என்பவன் நாராயணனுடன் உலகத்தில் தோன்றித் தீயவர்களைக் கொன்று வைரவருடைய கபாலத்தில் குறைவதில் பாதியை நிரப்புவதாகக் கூறினான். கந்தன் என்பவன் நரன் என்பவனோடு கலந்து மகிடாசுரன் முதலிய அசுரர்களைக் கொல்வதாகக் கூறினான். கந்ததேவன் அமிசமான சாகனும் விசாகனும் நிகமனும் பாரதப் போரில் சேனைகளை அழிப்பார்கள். அக்கினி புதல்வனை கந்தன் காலருத்திரனைப் பற்றி நின்று அவ்வளவு அக்குரோணியை அழிப்பான். நான் இவ்வண்ணம்செய்து வைரவ கபாலத்தைச் சிறிது குறை நிறைப்பேன்' என்றான்.

உருத்திரன் விட்டுணுவைப் பார்த்து, 'நான் வாயு அமிசத்திற் கலந்து நின்று பதினாயிரம் யானை பலங்கொண்ட துட்ட அசுரர்களை அழிப்பேன். பாரதப் போரில் ஒன்றரை அக்குரோணி சேனைத்தலைவர்களை வதைப்பேன்' என்று கூறினான். பூதநாதனாகிய சாத்தாவும் பிரமாவும் அவ்வாறே கூறினார்கள்.

சிவனது கட்டளைப்படி துவாபர யுகத்தில் தங்கள் அமிசப்படி அனைவரும் வந்து பிறந்தார்கள். நாராயணன் வசுதேவன் குமரனாகவும், நரன் அருச்சுனனாகவும் ஆனார்கள். வீட்டுமன், துரோணன், கிருபன், அசுவத்தாமன், திருட்டத்தி

யும்நன், பாண்டவர்கள் என்னுமிவர்கள் கந்தனுடைய அமிச மெனக் கூறப்பட்டுப் பூபாரம் தொலைக்கும் முயற்சியை உடையவர்கள் ஆனார்கள்.

வசிட்டனது சாபத்தால் பிப்பாசவசுவின் மனைவி காசி அரசன் மகள் அம்பையாகப் பிறந்தாள். 'நீ மனைவியைத் துறக்க' என்ற வசிட்டன் சாபத்தால் வீட்டுமனோடு அவளுக்குப் பகை உண்டாயிற்று. ஆதலால் அவள் இவனைப் போரில் கொல்வேன் என்று சிகண்டி ஆனாள். பின் பாஞ்சாலன் புத்திரியாகப் பிறந்து இயக்கன் அருளால்-ஆண்மகனானாள்.

முற்காலத்தில் தேவகுருவின் மனைவி காரணமாகச் சந்திரனுக்கும் தேவ குருவுக்கும் போர் மூண்டது. அப்போது இந்திரன் முதலிய தேவர்கள் குருவைச் சார்ந்து நின்று சந்திரனோடு போர் செய்தனர். சந்திரனுக்குத் துணையாகச் செவ்வாய், சுக்கிரன், சனி, இராகு முதலியவர்களும் அசுரர்களும் விசுதேவர்களும் அக்கினியும் அக்கினி புத்திரனாகிய ஆறுமுகம் முதலியவர்களும் குரு பக்கத்தைச் சார்ந்தவர்களோடு போர் செய்தனர். போர் மிகவும் கடுமையாக நடந்தது. அப்போது பிரமா அவர்களைத் தடுத்து, 'நீங்கள் பூமியிலே போய்ப் பிறந்து உங்கள் பகையை முடித்துக்கொள்ளுங்கள்' என்று சமாதானம் செய்து வைத்தார். பிரமாவின் கட்டளைப்படியே அவர்கள் பாண்டு பாஞ்சால வமிசங்களிற் பிறந்தார்கள். பிரமன், சாத்தா, நரன், உருத்திரன், தருமன் என்னுமிவர்கள் பாண்டு புத்திரர்களானார்கள். அசுரேந்திரன் முதலிய அசுரர்கள் திருதராட்டிரனுக்குப் புத்திரரானார்கள். ஆயிரக்கவசன் என்னும் தைத்தியன் சூரியனது அமிசத்தோடு அவன் மகன் கன்னனாய்த் தோன்றினான். இங்ஙனம் தேவர்களும் அசுரர்களும் பூமியில் தோன்றிப் புண்ணிய பாவங்களை வளர்ப்பாராயினர்.

பாண்டு புத்திரர்கள் வாய்மையும் பொறியடக்கமும் பணிவும் உடையவர்களாகவும் திருதராட்டிரன் புத்திரர்கள் மூடத்தன்மையும் தீய ஒழுக்கமும் உடையவர்களாகவும் இருந்தனர். இரு குடும்பத்தார்க்கும் நடந்த போரில் பாண்டவர்கள் கௌரவர்களின் பதினோர் அக்குரோணி சேனைகளுடன் கௌரவர்களையும் அழித்தனர்.

அப்போது வைரவரின் கபாலம் இரத்தத்தால் நிரம்பியது. பாண்டவர்கள் இராசசூயம் அசுவமேதங்களைச் செய்து மகிழ்ச்சியுடன் நூறு ஆண்டுகள் வாழ்ந்து, பின் சிவன் கட்டளைப்படித் தம் உலகம் சென்றார்கள்.

---

23. வச்சிரன் மகனுக்கு வரமளித்தமை

பாண்டவர்களுக்குப் பின் அருச்சுனனின் பேரன் பரீட்சித்து பகைவரஞ்சும் வீரமுடன் அத்தினபுரியை ஆண்டு வந்தான். கிருட்டினனுக்குப் பேரனாகிய வச்சிரன் என்பவன் அருச்சுனனால் இந்திரப் பிரத்தத்தில் அரசனாக நிறுவப் பெற்றான்.

தட்சகன் என்னும் கொடிய பாம்பால் பரீட்சித்து இறந்தான் என்பதை அறிந்த வச்சிரன் மிகவும் கோபங்கொண்டு தன் தேர்மேல் ஏறிப் பாதாள லோகத்தை அடைந்து தட்சகனோடு போர்புரிந்தான். காருடம், மாயூரம், நகுலம் என்னும் அம்புகளை ஏவி, அங்குள்ள நாகங்களை அழிக்கத் தொடங்கினான். தட்சகன் இந்திரனைத் தியானித்தான். இந்திரன் வந்து வச்சிரனைச் சமாதானம் செய்தான். இந்திரன் சொற்படி, தட்சகன் வச்சிரனைச் சரணமடைந்தான்; தன் மகளை வச்சிரனுக்கு மணம் செய்து கொடுத்தான். வச்சிரனுக்கு நாக கன்னிகை மூலம் வடிவழகுடைய மைந்தன் பிறந்தான்.

பரீட்சித்து மன்னனின் புதல்வன் சனமேசெயன் சிறுவனாக இருந்தமையின் வச்சிரன் அவனுடைய நாட்டையும் ஆண்டு வந்தான். சாலுவநாட்டு மன்னன் சாலுவேசன் வேறு சில அரசர்களுடன் கூடிப் படையெடுத்து அத்தினபுரியைக் கைப் பற்றினான். இச்செய்தி அறிந்து வச்சிரன் சாலுவ அரசனுடன் போர் புரிந்தான். அப்போது சாலுவ அரசன் உத்தரவுப்படி சீனத்தரசர் முதலிய ஐந்து யவனர்கள் வச்சிரனுடைய இந்திரப் பிரத்தத்தைத் தம் வசப்படுத்தி வச்சிரனின் இரண்டு வயதுக் குழந்தையைக் கபடமாக எடுத்துச் சென்று இரண்டு துண்டாக வெட்டி நகரின் புறத்தேயுள்ள பாழுங்கிணற்றில் எறிந்து அத்தினபுரத்தை அடைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சிகளைத் தூதர் வாயிலாக வச்சிரன் அறிந்து கோபங்கொண்டு அம்மிலேச்சர்களை யெல்லாம் கொன்று சாலுவ அரசனையும் பிணித்து அந்த நாடுகளையெல்லாம் அமைச்சர்களுக்குத் தானஞ்செய்தான். மகனையிழந்த துன்பத்தால் வாட்டமுற்ற வச்சிரன் சனமேசயனைத் தன் மகனாகக் கொண்டு காத்துவந்தான்.

கர்க்க முனிவனுடைய சீடர்கள் கிணற்றில் வீழ்த்தப் பட்டிருந்த குழந்தையை எடுத்து மகிழ்ந்து தம் குருவாகிய கர்க்க முனிவன்பால் கொடுத்தார்கள். முனிவன் அக்குழந்தையின் வரலாற்றை உணர்ந்து அதனை உயிர்ப்பித்துத் தன் பிள்ளைபோல் வளர்த்துவந்தான்.

ஒருகாலத்தில் கர்க்க முனிவன் மற்ற முனிவர்களுடன் தல யாத்திரை போனுன். போகும் வழியில் திருநாரையூரை அடைந்து அங்கு மூன்றுநாள் தங்கினுன். அப்போது முனிவர் கள் கணேச, கணேச என்று செபம் செய்துகொண்டிருந்தனர். அதைக் கேட்ட வச்சிரன் மகன் நாகசுந்தரனும் அவ்வாறே ஜெபிக்கத் தொடங்கினுன். அச்சிறுவன் பசி, தாகம் முதலியன கருதாது ஒரே மனத்துடன் கணேசப் பெருமானைத் தியானித்தான்.

ஒரு யாமம் வரை நாகசுந்தரன் செய்த செபத்திற்கு விநாயகப் பெருமான் மகிழ்ந்து அவனை எடுத்துத் தழுவிப் பதினெட்டு வித்தைகளையும் அட்டலக்குமிகளையும் பதினெட்டு மகா பாக்கியங்களையும் அருளினுர். அச்சிறுவன் ஞானச் செல்வனுய்க் கர்க்க முனிவன்பால் அடைந்தான். விநாயகப் பெருமானின் அருளும் வரமும் பெற்றுவந்த நாகசுந்தரனைக் கண்டு கட்டித் தழுவி முனிவன் மகிழ்ந்தான்.

முனிவனிடம் கல்வி பயின்று சிறப்புற்ற நாகசுந்தரனிடம் அவன் மிலேச்சர்களால் கொல்லப்பட்டதையும் தன் மாணவர் களால் தன்னிடம் கொண்டுவரப்பட்டதையும் விட்டுணுவின் தியானத்தால் உயிர்ப்பிக்கப் பெற்றதையும் முனிவன் கூறினுன்: மேலும் நாகசுந்தரன் இந்திரப் பிரத்தத்தை ஆளும் மன்னன் வச்சிரனின் மகன் என்றும் இனி அவர் களுடன் வாழ வேண்டும் என்றும் கூறிய கர்க்க முனிவன் அவனை அழைத்துச் சென்று அவன் தந்தையாகிய வச்சிரன் கையில் ஒப்படைத்துத் தன் ஆச்சிரமம் வந்தான்.

இறந்துபோன தன் மைந்தன் உயிருடன் வந்ததைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்த வச்சிரன் திருமாலை நாள் தோறும் வழிபட்டுத் தன் நாட்டை அறநெறி வழுவாது காத்தான். தன்னுல் வளர்க்கப்பெற்ற சனமேசயனுக்கு அவன் நாட்டில் முடிசூட்டி அரசாளச் செய்தான்; தன் மைந்தன் நாகசுந்தரனுக்கும் தன் நாட்டைப் பட்டங்கட்டி ஆளச் செய்தான். இளவரசன் மிலேச்சர்களை அழித்து அவர்கள் ஆண்ட பகுதியை மறுபடியும் வேடர்களுக்கு அளித்து ஆளச் செய்தான். மிலேச்ச மார்க்கங்கள் அழிந்தன.

அறத்துறையிற் கைதேர்ந்த அவ்வரசன் மிலேச்சர்களை யெல்லாம் ஒடுக்கினுன். மிலேச்சர்கள் ஆள்வதற்கு முன்னர் அங்கிருந்த வழிபாடு, மதம், கோயில்கள் எல்லாம் அமையு மாறு செய்தான். எல்லா மதத்தவர்களும் தங்கள் தங்கள் கடவுளர்களை வழிபடுதற்குரிய முறையில் வசதி செய்து பாது காப்பும் செய்தான். வச்சிர மன்னன் சனமேசயனுக்கு உதவி யாக இருந்து நூறு ஆண்டுகள் வாழ்ந்தான். பின்னர் தன் நாட்டைத் தன் மகன் நாக சுந்தரன்பால் ஒப்படைத்து மீண்டும் வாரா இன்ப உலகத்தை அடைந்தான்.

24. அசுவத்தாமாவுக்கு அருள் புரிந்தமை

அமைச்சர்கள் சூழ வீற்றிருக்கும் வச்சிரன் மகன் நாக சுந்தரனை நோக்கிச் சனமேசயன், கர்க்க முனிவர் ஆசிரமத்தில் குழந்தையாயிருந்த அவனுக்குக் கணேசரிடம் பக்தியுண்டான முறையைக் கூறுமாறு கேட்டான். நாகசுந்தரன் சொல்லத் தொடங்கினன்.

'ஒருகாலத்தில் கர்க்க முனிவன் என்னெடும் மனைவி யோடும் சீடர்களோடும் திருநாரையூர் சென்ருர். சுவாமி சந்நிதியில் கூடியிருந்தபோது அவருடைய சீடர்கள், 'எங்கள் குருநாதனே, இந்தத் துவாபர யுகத்திலே இந்தத் தலத்தில் பொல்லாப் பிள்ளையாரையும் சிவலிங்கப் பெருமானையும் நேசித்து விரும்பிய வரங்களைப் பெற்றவர் யாவர்? அவருடைய வரலாறு யாது?' எனக் கேட்டனர். கர்க்க முனிவர் சொல்லத் தொடங்கினர்.

பாரத்துவாசன் மகன் துரோணன் என்பவன் சாலிகோத் திரன் என்னும் முனிவனிடத்தில் எல்லா வித்தைகளையும் பயின்ருன்; பிருகுவின் மகனுகிய இராம முனிவன்பால் வில் வித்தையைப் பெற்றுக்கொண்டான். கிருபனுடைய தங்கையாகிய கிருபியை மணந்த துரோணன் காட்டில் வசித்து வருங்காலத்திலே தலயாத்திரை மேற்கொண்டான்; அவன் திருநாரையூரை அடைந்து சிவபெருமானை வழிபட்டு அவர் திருநாமங்களைச் சொல்லித் தியானத்தில் அமர்ந்தான். அதனுல் மகிழ்ச்சி அடைந்த பெருமான் அவன்முன் தோன் றினர். துரோணன் பெருமானை வணங்கி, 'ஐயனே, உமது திருவடிக்கண் உறுதியான அன்பும், குறைவிலா வாழ்வும், தேவரீர்பால் அன்புள்ள ஒரு மகனும் தந்தருள வேண்டும்' என வேண்டிக் கொண்டான்.

கந்தனுடைய தேகத்தினின்று ஆறுகுமாரர்கள் உண்டா ஞர்கள். அவர்கள் முசுகுந்தன் காரணமாக முற்காலத்தில் கந்தனுல் சபிக்கப்பட்டனர். அவர்களுள் சாகன் என்பவன் சந்தனுவின் பிள்ளையானுன். நிகமன் கிருபன் ஆனுன். துரோண னுகிய நீ விசாகன் ஆவாய். பாவகி என்பவன் துருபதன் பிள்ளையாய்ப் பூமியில் சேனுதிபதியாக இருக்கிருன். கந்தன் நரனுடைய அமிசங்கலந்து தேவேந்திரனுக்குப் புத்திரனுய்க்

குந்தியிடத்துத் தோன்றினன். எமது கட்டளைப்படி அவன் உனக்கு உத்தம சீடனுவான். சுசாகன் வீரருத்திராமிசங் கலந்து உனக்கு மகனுவான். இது சீவரத்தினம். உன் நல் வாழ்வின்பொருட்டு இதனைப் பெற்றுக்கொள். இதை நாள் தோறும் பூசை செய்தால் இது அநேக இரத்தினங்களைத் தரும். என்றைக்கேனும் பூசை செய்யத் தவறின் இது உன்னை விட்டு நீங்கும். நீ வறுமையை அடைவாய். கந்தனுடைய அமிசமாய்த் தோன்றிய பாண்டு புத்திரனுகிய பார்த்தனை நீ காணும்போது மீண்டும் செல்வங்களைப் பெறுவாய். நீ அரசர் களுக்குக் குரு ஆவாய். அவர்களால் வழிபடப் பெறுவாய். உன்னிடத்துள்ள விசாகாமிசம் நீங்கிய பின்னர் குருவினமிசம் போர்க்களத்திலே கொல்லப்பட்டு விண்ணுலகு எய்தும். ஒரு முனிவன் சாபம் காரணமாகப் பிள்ளைப் பாசத்தால் மரணம் அடைவாய். நீ கேட்ட வண்ணம் எம்மிடத்தில் உனக்குத் திடமான பத்தி உண்டாவதாக. நீ முத்தி பெறுவாய் என்று திருவாய்மலர்ந்தருளி இறைவன் மறைந்தார்.

துரோணன் இரத்தினத்தின் சிறப்பால் காசியில் அநேக பிராமணர்களுக்கு அன்னமளித்து வந்தான். அப்பொழுது துரோணனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. துரோணன் அக்குழந்தைக்கு அசுவத்தாமா என்று பெயர் வைத்து மனைவி யுடன் தானும் அன்புகாட்டி வளர்த்து வந்தான்.

இறைவன் தந்த நாகமணியைத் துரோணன் மறந்து வெளியே வைத்துப் பூசையறைக் கதவை அடைத்தான். அங்கு வந்த குழந்தை அந்த மணியை எடுத்து விழுங்கி விட்டது. நாகத்தின் தலையில் இருந்த அந்த மணி குழந்தை யின் சிரசை அடைந்தது. மணியை இழந்தமையால் துரோணன் வறுமை அடைந்து அத்தினபுரியை அடைந்து வீட்டுமனுல் உபசரிக்கப்பெற்று மகிழ்ச்சியோடு அங்கிருந்து கௌரவர், பாண்டவர் முதலியவர்களுக்கு வில் வித்தை கற்பித்தான். வீட்டுமனுல் தரப்பட்ட நூறு கிராமங்களையும் அருச்சுனனுற்றரப்பட்ட பாஞ்சால நாட்டின் பாதியையும் அநுபவித்து வந்தான்.

துரோணனின் அன்புக்குரிய மாணவன் அருச்சுனன். அசுவத்தாமாவைக் காட்டிலும் அருச்சுனனே துரோணனின் அன்புக்கு உரியவனுக விளங்கினுன். அசுவத்தாமாவும் அருச்சுன

னும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். வீரியத்திலும் நூலறிவிலும் மதிநுட்பத்திலும் நற்குணத்திலும் குருபத்தியிலும் வெற்றியோடு கூடிய அருச்சுனன் அசுவத்தாமாவைக் காட்டிலும் எப்போதும் மேலானவனாக விளங்கினான்.

பாண்டவர்கள் காட்டுக்குப் போயிருக்குங்கால் ஒருநாள் அசுவத்தாமா துரியோதனனால் பயமுறுத்தப்பட்டுக் காட்டில் அலைந்துகொண்டிருந்தான். அலைந்துகொண்டிருக்கும்போது ஒருநாள் திருநாரையூரை அடைந்து சிவபெருமானைப் பாசுபத யாகத்தால் மகிழச் செய்தான். திருநாரையூர்ப் பெருமான் அசுவத்தாமா முன் தோன்றினார்.

எம்பெருமானே, பாண்டவர்கள் என்க்குத் தோழர்கள். அருச்சுனன் எனக்கு உயிர் நண்பன். துரியோதனன் பேரரசனாயினும் தீய சிந்தையுடையவன். பாவச் செயலில் பற்றுடையவன். அவன் சூதினால் பாண்டவர்களை வென்று நாட்டினின்றும் வெளியேற்றினான். அதனால் கோபங்கொண்ட பாண்டவர்கள் கௌரவர்களைக் கொல்வோம் என்று சபதம் செய்தனர். அதனால் பயங்கொண்ட துரியோதனன் என் தந்தையாகிய துரோணனையும் வீட்டுமனையும் சரணடைந்தான். என் தந்தையின் வாழ்க்கைக்கென வீட்டுமனால் கொடுக்கப்பட்ட நூறு கிராமங்கள் இப்பொழுது துரியோதனன் பங்கில் உள்ளது. அதனால் நீ அவர் துரியோதனனுக்கு உதவ வேண்டியவர். அருச்சுனன் பாஞ்சால தேசத்தில் பாதி தந்துள்ளமையால் அவர் அவனுக்கும் உதவ வேண்டியவர். ஆதலால் இந்த நிலையில் தூது சென்று பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் சமாதானம் செய்ய வேண்டும். அல்லது இருவருக்கும் உதவி செய்யாமல் இருக்க வேண்டும் என்று நான் என் தந்தையைக் கேட்டுக் கொண்டேன்.

அதுகேட்ட என் தந்தை 'நீ கூறுவது மிகவும் பொருத்தமானதே. எனினும் என்னிடம் அடைக்கலம் புகுந்த துரியோதனனைக் காப்பது சாத்திர சம்மதமானது. ஆதலால் நீயும் நானும் அவனுக்கு உதவக் கடமைப்பட்டுள்ளோம்' என்று கூறினார். நான் பாண்டவர்களோடு போர்புரியேன் என்று சொல்லிவிட்டேன்.

நான் கூறியதையெல்லாம் திருதராட்டிரனது குருவாகிய காலமுனி கேட்டு, 'நீ பாண்டவர்மீது வெறுப்படைவாய்,

அவர்களை வெல்ல முடியாதவனுமாவாய். இளம் பஞ்ச பாண்டவர்கள் துயிலும்போது அவர்களைக் கொன்று மகா பாபத்தை அடைவாய். அருச்சுனனிடத்து அன்புடைய நீ அருச்சுனனாலேயே கொல்லப்படுவாய்' என்றும் சபித்தான்.

நானும் காலமுனியை நோக்கி, 'தீய சிந்தை உடையோய், துரியோதனனை விரும்புகின்றவனே, நீ துரியோதனன் செய்கை போன்ற செய்கையால் மரணம் அடைக' எனச் சபித்தேன்.

திருநாரையூர்ப் பெருமானே, அடியேனுடைய சாப நீக்கம் வேண்டி உம்மைச் சரண் அடைந்தேன். என் பிரிவால் என் தந்தை இறந்துபடுவான். ஆதலால் கருணைக் கடலாகிய பெருமானே எனக்குச் சிரஞ்சீவித் தன்மை அளிக்க வேண்டும். ஏனைய வரங்களையும் பொருந்தியவாறு தந்தருள வேண்டும். என்னுடைய தியானத்தினாலேயே எப்பொழுதும் அடியேனுக்குக் காட்சி தருதல் வேண்டும்' என்று வேண்டினான்.

திருநாரையூர் மகேசன், 'அசுவத்தாமாவே, நீ விசாகனது அமிசத்தால் தோன்றியவன். ஆதலால் சண்முகனது கிங்கரன். ஏழு மருத்துக்களும் இளம் பாண்டவர்களாகத் தோன்றி யுள்ளனர். அடைக்கலம் புகுந்தவனைக் காப்பது காரணமாக நீ துரியோதனனைச் சாரக்கடவாய். அரசரது தொழிலை மேற் கொண்டு நீ பாண்டவர்களோடு போர் செய்வாய். பாண்ட வர்கள் உன்னால் கொல்லப்பட மாட்டார்கள். உன் தந்தை யைக் கொன்ற காரணத்திற்காகப் பாண்டவர்களைக் கொல்ல ஆயுதங்களை எடுத்தெறிவாய். அருச்சுனன் அதை மாற்றுவான். துரியோதனனை வதைத்தது காரணமாக நீ பாசறையிலிருக்கும் உபபாண்டவர்களைக் கொல்ல முற்படு வாய். அருச்சுனனால் நிறுவப்பட்ட பூத கிங்கரனுக்குப் பயந்து எம்மை நினைக்கும்போது இந்திரன் சாபத்தால் வீரருத்திரன் உபபாண்டவர் ஐவரையும் கொல்வான். அருச்சுனன் உன் சிரோரத்தினத்தைக் கவர்வான். வீரருத்திரன் கலியோடு உன் தேகத்தினின்று நீங்குவான். அப்பொழுது நீ தூங்கிய வரைக் கொன்ற பாவம் தீரத் திருநாரையூரை அடைந்து எம்மைப் பூசித்துப் பழியினின்றும் நீங்குவாய். போரிலே உன்னைக் காப்பதற்காகச் சிரஞ்சீவித் தன்மை அளிக்கப் பட்டது. அருச்சுனன் உன்னைக் கொல்ல நினைத்தாலன்றி

உனக்கு அழிவில்லை. வேறு வழியால் மரணம் இல்லை. எம் வரத்தால் மீளவும் உயிர்பெறுவாய்' என்று பலவரங்கள் அளித்து சிவபெருமான் மறைந்தருளினார்.

அசுவத்தாமா தான்பெற்ற வரங்கள் பற்றித் தந்தையிடம் கூறினான். துரோணனும் அதுகேட்டு மகிழ்ந்தான். துரியோதனன் வரம்பெற்ற செய்தி அறிந்ததும் அசுவத்தாமாவிற்குச் சிறப்பான பொருள்களைத் தானமாக வழங்கினான். இறைவன் சொன்னபடியே போர் நிகழ்ந்தது. இளம் பாண்டவர்கள் துயிலுகையில் கொல்லப்பட்டார்கள். அசுவத்தாமா தனது இரத்தினத்தையும் இழந்தான். திருநாரையூரை அடைந்து, துயின்றோரைக் கொன்ற பாவம் நீங்க அங்கேயுள்ள நாக தீர்த்தத்தில் ஒரு மண்டலம் நீராடி இறைவழிபாடு செய்து பாவம் நீங்கப்பெற்றான். பின் சிவபெருமானிடம் சிவாகமங்கள் உபதேசம்பெற்று சிவயோகம் பயின்று சிவயோகநிலை கைவரப் பெற்றுச் சிவபெருமான் அருளால் மநுவின் காலத்தில் வியாசராகும் தன்மையும் அடைந்தான்.

இங்ஙனம் விரைவில் சித்தியைத் தருபவர் திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே என்பதும் எல்லாத் தலங்களிலும் சிறந்த தலம் இத்திருநாரையூரே என்பதும் உங்களுக்கு விரித்துக் கூறப்பட்டன என்று கர்க்க முனிவர் சீடர்களாகிய முனிவர்கட்குக் கூறினார்.

25. பாண்டு மைந்தர் அருள் பெற்றமை

திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் அருளிச் செயல்களைக் கர்க்க முனிவர் தம் சீடர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்.

பாண்டவர்கள் தம் நாட்டை இழந்து காமியக வனத்தில் வசித்து வந்தனர். பாஞ்சாலர்கள், யாதவர்கள், சோழர்கள் முதலியவர்கள் பாண்டவர்களைக் காண வந்தார்கள். வந்த வர்கள் பாண்டவர்களால் நன்கு வரவேற்கப்பட்டு அங்கேயே மூன்றுநாள் தங்கினார்கள்.

திருட்டத்தியும்நன் வாசுதேவனை நோக்கி, "ஐயனே, பாண்டவர்கள் வீரர்கள்; உன் அன்புக்குரியவர்கள்; இராசசூய யாகம் செய்து உன்னை மகிழ்வித்தவர்கள்; முனிவர் களுக்கும் அந்தணர்களுக்கும் அன்புசெய்து அவர்கள் வாழ்த் தைப் பெற்றவர்கள். இப்படிப்பட்ட புண்ணியர்கள் நாட்டை யிழந்து காடு வர நேர்ந்த காரணம் என்ன? அவர்கள் செய்த புண்ணியங்கள் என்ன ஆயின?" என்று கேட்டான்.

திருட்டத்தியும்நன் கேள்வியைப் பாராட்டிய கண்ண பிரான், 'முன்னே பாண்டவர்கள் யாகங்கள் செய்வதற்கு முன்னர் செய்யவேண்டிய விநாயகர் பூசையைச் செய்யவில்லை. வாரணவதத்தில் உள்ள தங்கள் குலதெய்வமாகிய விநாயகப் பெருமானுக்கு விழாச் செய்யவில்லை. அதனால் அக்காலத்தில் கணபதி கிங்கரனாகிய விக்கினமென்னும் காலபுருடன் கோப முற்று மயூரியுடன் கூடிப் பாண்டவர்களை இவ்விதம் செய் தான்' என்று காரணம் சொன்னான்.

தருமன், துன்பமான வன வாழ்க்கை நீங்கவும் தங்களின் இராச்சியத்தை அடையவும் வழி கூறுமாறு கண்ணனை வேண்டினான். கணபதி விரதங்களுக்குள்ளே சங்கடகரணம் எனச் சிறந்த விரதம் உண்டு. மாசி மாதம் தொடங்கி அதனை ஓராண்டுக்காலம் பின்பற்றினால் கணபதி தோன்றி எல்லா வரமும் தருவார். கிருட்டினபக்க சதுர்த்தசி இரவில் விக்கின விநாயகரை பூசை முறைப்படி வழிபாடு செய்து அவருடைய இருபத்தாறு திருநாமங்களையும் செபித்து அவர் அருளைப் பெறுக; அதனால் வீட்டுமன், துரோணன், கர்ணன்

முதலியவர்களைப் போரில் வெல்லும் வல்லமை நீங்கள் அடைவீர்கள்' என்று கண்ணன் துன்ப நீக்கத்திற்கும் இன்பச் சேர்க்கைக்கும் வழி சொன்னான்.

கண்ணன் சொன்னபடி தருமன் தன் தம்பியருடன் மகா சங்கடநாசனம் என்னும் விரதத்தை விதிப்படி ஓராண்டு கடைப்பிடித்தான். விநாயகத் தலங்கள் பதினொன்றிலும் ஒவ்வொரு மாதம் பூசித்துச் சிறந்த பன்னிரண்டாவது மாதத்தில் உயர்வுடைய இந்தத் திருநாரையூரை அடைந்தான்; குடும்பத்துடன் விநாயகப் பெருமானை வழிபட்டான்.

அப்போது விநாயகப் பெருமான் காட்சியளித்தார். உங்கள் வமிசத்தவர்க்கு நாமே குலதெய்வமாக இருந்து பல நன்மைகளைச் செய்து வந்தோம். விசித்திர வீரியன் இடையில் எம்மை வழிபட மறந்தமையால் பிள்ளைப்பேறு இல்லாமல் நோய்வாய்ப்பட்டிருந்தான். வீட்டுமனும் பாண்டுமன்னனும் எம்மைப் பூசித்தார்கள். அருச்சுனன் இளமைக் காலந் தொடங்கியே அவ்வன் எம்மைப் பூசித்து வருவதால் அவன் எல்லா நல்ல குணங்களுடன் வெற்றியுமுடையவனானான்.

முன்னே ஓராண்டுக் காலம் உங்களால் வாரணாவதத்தில் பத்தியோடு விதிப்படிப் பூசிக்கப்பட்டோம். அதன் பலனாக இராச்சியத்தையும் பல பெண்களையும் பேரரசனாகும் தன்மையையும் அளித்தோம். இராசசூய யாகத்தின்போது கணபதி யாகம் செய்ய மறந்துவிட்டீர்கள். அதனால் அரசுரிமை இழத்தல் முதலாகிய பல துன்பங்கள் உங்களுக்கு நேர்ந்தன. இனி உங்கட்குச் சங்கடங்கள் நீங்கிவிடும். தேவகாரியத்தின் பொருட்டுப் பாரதப் போர் செய்யவேண்டியதே. துரியோதனனை நிமித்தமாகக்கொண்டு பூமியில் அரசர்கள் தொகை மிகவும் குறையும்.

கால ருத்திரனுடைய கபாலத்தை நிறைப்பதன் பொருட்டுத் திருமால் பாரதப் போரில் பதினெட்டு அக்குரோணி சேனைகளை அழிப்பான். விட்டுணுவின் மாயையால் சேனை வீரர்கள் மோகம் அடைந்து ஒருவருக்கொருவர் பொருது மடிவார்கள். கன்னன் படையால் அருச்சுனன் சிறிதுநேரம் மயங்கிப் பின்பு தெளிவுபெறுவான். அவனை யாராலும் அழிக்க முடியாது. அவன் உங்களைக் காப்பான்.

வெல்லுதற்கரிய பகையை வெல்லும் பொருட்டு நாம் உங்கட்கு உருத்திர சக்தியைத் தருகிறோம்" என்று சொல்லி விநாயகப் பெருமான் மறைந்தார்.

பாண்டவர்கள் விநாயகப் பெருமான் அருளைப்பெற்று தௌமியர் முதலிய முனிவர்களுடன் மறுபடியும் துவைத வனத்தை அடைந்தார்கள். அன்றுமுதல் கண்ணன் ஏவலால் தௌமிய முனிவனைக்கொண்டு கணேச பூசையைத் தங்கள் ஆன்மார்த்த பூசையாகச் செய்வித்தார்கள். பூசையின் பலத்தால் கௌரவர்களைக் கொன்று அரச செல்வத்தைப் பெற்று இன்புற்று வாழ்ந்தார்கள்,

விட்டுணு மூர்த்தி சூரசேனன் மகனுக்குப் புத்திரராய்த் தோன்றிக் கோகுலத்தில் வசித்தார். கர்க்க முனிவருடைய உபதேசத்தால் முறைப்படி சங்கடகரண விரதத்தைப் பின் பற்றினர். விநாயகப் பெருமான் அவர்முன் தோன்றி, வேண்டிய வரங்கள் அளித்தார். யாதவர்களுக்குத் தொல்லை கொடுத்துவந்த கஞ்சனென்னும் மூர்க்கனைக் கொன்ற விட்டுணு கஞ்சன் நாட்டை உக்கிரசேனனுக்கு அளித்தார்; நூறு ஊர்களுடன் கூடிய இராச்சியத்தைச் சினி என்பவனுக்குக் கொடுத்தார்; கிருதவர்மனுக்கும் ஆயிரம் சிற்றூர்களை அன்போடு கொடுத்தார்; சத்திராசித்து முதலிய யாதவ வேந்தர்களுக்கும் இராச்சியங்களை மீட்டுத் தந்தார். பலராமனும் கண்ணனும் உக்கிரசேனன் கட்டளைப்படி மகிழ்ச்சியுடன் ஆண்டு வந்தனர்.

"சினியின் மகன் சாத்தியகி என்பானும் அருச்சுனனுடைய உபதேசத்தால் சங்கட கரண விரதம் இருந்து விநாயகர் அருள்பெற்றுப் பாண்டவர்களையும் பாஞ்சாலர்களையும் தவிர மற்ற அரசர்களை வென்று சிறப்பாக வாழ்ந்தான். பொல்லாப் பிள்ளையார் திருவருளால் இவ்வாறு பாண்டவர்களும் யாதவர்களும் தாங்கள் தாங்கள் விரும்பிய பேறுகளைப் பெற்றார்கள்" எனக் கர்க்க முனிவர் கூறினர்.

"அச்சரிதங்களைக் கேட்டு எனக்கும் கணபதியிடம் பத்தி உண்டாயிற்று. குல தெய்வமாகிய கணேசப் பெருமானும் எனக்கு அருள் செய்தார்" என இவ்வாறு வச்சிரன் முகமாகச் செனமேசெயன் கேட்டுணர்ந்து தானும் கணபதியை அன்போடு வழிபட்டுத் தான் விரும்பிய பேறுகளைப் பெற்று இன்பம் அடைந்தான்.

---

26. சிவதாச சிவாசாரியருக்குப் புத்திரப்பேறு அளித்தமை

சிவஞானத்தால் அறியப்படுவது பரம்பொருள். அது தன் விருப்பத்தினல் மூன்றுவித வடிவத்தைக் கொண்டதென்று உண்மை நூல் உணர்ந்தோர் கூறுவர். முதலாவது வடிவம் சிவம் எனப் பெயர்பெறும். இரண்டாவது வடிவம் சதாசிவம் எனப் பெயர்பெறும். மூன்ருவது வடிவம் சகளம் எனப் பெயர் பெறும். இறைவன் சூக்கும சக்திகளுடன் கூடிச் சூக்கும வடிவுடையனுய்ப் பரமசிவன் எனப் புகழப்பெறுகிருன். தூல சக்திகளுடன் கூடி மகேசுவரன் என்று எண்ணப்படுகிருன்.

பிரமனையும் விட்டுணுவையும் உருத்திரனையும் பரமசிவன் தோற்றுவித்தார். பிரமனுக்குப் படைத்தலையும் விட்டுணு வுக்குக் காத்தலையும் உருத்திரனுக்கு அழித்தலையும் குகனுக்குச் சேனுபத்தியத்தையும் கணபதிக்கு விக்கினேசத் தன்மை யையும் பரமசிவன் அளித்தார்.

விநாயகப் பெருமான் சிவமயமே யாதலால் சிவவடிவங் களினும் முதலிற் பூசிக்கும் தன்மையும் சித்திதரும் தன்மையும் கொண்டருளினுர். சிவபெருமானும் விநாயகப் பெருமானைப் பூசித்து விக்கினேசன் என்னும் பெயர்ப்பொருளை விளக்கி யருளினுர்.

கணேசப் பெருமான் எப்போதும் பிள்ளைமைத் திருவிளை யாட்டுடையவராய்ச் சிவபெருமான் முதலியவர்களுக்குப் புத்திரராம் தன்மையில் அமர்ந்து அவர்களை மகிழ்விக்கின்றுர். முதலில் சிவபுத்திரத் தன்மையரானபடியால் சிவபுத்திரர் எனப்படுகிருர். தேவர்களும் முனிவர்களும் சிவலிங்கத்திலே சிவபெருமானையும் கணேசப் பெருமானையும் வழிபட்டுத் தங்கள் பதங்களைப் பெற்றுர்கள்.

தேவர் முதலியவர்களால் பூமியில் அமைக்கப்பெற்ற இலிங்கங்களைப் பூசிப்பதற்காகச் சிவபெருமான் தம் ஐந்து திருமுகங்களினின்றும் ஆதி சைவர்களாகிய கச்சியபர் முதலிய ஐந்து சிவப்பிராமணர்களைப் படைத்தருளினுர். சிவன்

ஆணைப்படி உமாதேவி அம்முனிவர்களுக்காக ஐந்து பெண்களைப் படைத்தருளினாள். திருநந்தி தேவர் அவ்வைந்து முனிவர்களுக்கும் காமிகம் முதலிய சிவாகமங்களை உபதேசித்தார். அம்முனிவர்களும் அவர்கள் மரபில் வந்தவர்களுமே சிவலிங்கம் முதலியவைகளை அருச்சனை செய்துகொண்டு வந்தார்கள்.

அவ்வைந்து முனிவர்களில் அகத்தியர் கோத்திரத்தில் வந்த அரதாசன் வியாச முனிவன் மாணுக்கனாய் அறிஞனாய் விளங்கினான். அவன் வியாச முனிவன் கட்டளைப்படி காந்த மகாபுராணத்தின் உபபுராணத்தைச் செய்தான். அவன் துவாபரயுக முடிவில் சைவத்தை நிலைநிறுத்தினான். அவ்வாதி சைவன் மரபில் வந்தவர்கள் சிறந்த தலங்களில் உள்ள சிவலிங்கங்களைப் பூசை செய்து வந்தனர்.

அரதாச சிவாசாரியன் வமிசத்தில் தோன்றியவன் சிவதாச சிவாசாரியன். அவன் கலியுகம் நாலாயிரம் சென்ற காலத்தில் திருநாரையூரில் தங்கித் திருநாரையூர்ச் சிவலிங்கப் பெருமானையும் பொல்லாப் பிள்ளையாரையும் பூசித்துவந்தான். அவன் பிள்ளைப்பேறு கருதி மனைவியுடன் பிரதோட விரதம்பூண்டு முறைப்படிப் பரமேசுவரனை அருச்சித்து வந்தான். இவ்வாறு மூன்றாண்டுகள் விரதம் மேற்கொண்டான். இறைவன் திருவருளால் அவனுக்கு ஆண் மகவு பிறந்தது.

சிவதாசன் அந்தணர்க்கும் பிறர்க்கும் தானங்கள் வழங்கினான்; பிள்ளைக்குச் சந்திரசேகரன் எனப் பெயரிட்டழைத்தான். அன்புடன் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வந்தான்.

சந்திரசேகரன் எல்லோருடைய உள்ளங்களையும் கவரும் குணவானாக விளங்கினான். பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்று அவர் கட்டளைப்படி ஆறுவகையாக விளங்கும் சைவத்தையும் நான்கு வகையாக விளங்கும் காணுபத்தியத்தையும் நிலைநாட்டினான். இங்ஙனம் ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்து பின் சிவபதம் அடைந்தான்.

---

27. சைவபேதம் உரைத்தமை

ஓம், தத், சத் என்ற பேதத்தால் பிரமம் மூவகைப்படும். ஓங்காரம் சகளம் என்றும் தத் பதம் நிட்களம் என்றும் கருதப்படும். சத்பதமாகிய பரப்பிரம்மம் சகள நிட்களம் என்று கூறப்படும். நிட்களமாகிய பரப்பிரம்மம் நிட்கள சிவம் என்று கூறப்படும். சகளமாகிய பரப்பிரம்மம் மகேசன் என்று கூறப்படும். சத்பதமாகிய சகளாகளத்துக்குச் சகளம் சரீரமாகக் கூறப்படும். சத்பதமான விநாயகர் சகள நிட்களமான சம்புவினின்றுந் தோன்றினவராதலால் சிவகுமாரர் என்று எண்ணப்படுகிறார்.

நிட்களமாகிய பரமசிவன் பரிக்கிரக சத்தி என்னும் மாயையோடு கூடிச் சகளமெனப்படுகிறார். இவர் சிருட்டியாதி செயல்களுக்கு உரியவர். நிட்களம் என்னும் பரமசிவம் முத்தியை அளிப்பவர். சத் வடிவினராகிய விநாயகர் சகள நிட்கள தேகமுடையவர். இவர் சிருட்டி முதலிய கிருத்திய ஞானத்தையும் கிருத்திய சித்தியையும் முத்தி சாதன ஞானத்தையும் முத்திப் பேற்றையும் அளிப்பவர்.

பிரம்மா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவரும் பரசிவத்தினின்றும் தோன்றியவர்கள். இவர்களே பஞ்ச பூதங்களுக்கு அதிதேவதைகள். இவர்களில் பிரம்மா, விட்டுணு, உருத்திரன் என்னும் மூவரும் குணமூர்த்திகள். மகேசுவரன், சதாசிவன் என்னும் இருவரும் சிவனின் வேறாகாத சுதந்திர வடிவங்களாக எண்ணப்படுபவர்.

உலகத்தில் அமைக்கப்பெற்ற இலிங்கங்களைப் பூசிப்பதற்கு, பிரமன் முதலியவர்கள் வேண்டிய வண்ணம் பரமேசுவரன் தமது ஊர்த்துவ முகத்தினின்றும் கௌசிக முனிவனையும் சத்தியோசாத முகத்தினின்று கசியப முனிவனையும் வாமதேவ முகத்தினின்று பரத்துவாச முனிவனையும் தற்புருட முகத்தினின்று கௌதம முனிவனையும் அகோர முகத்தினின்று அகத்திய முனிவனையும் தோற்றுவித்தருளினார். இவர்கள் ஐவரும் சிவ புத்திரர்கள் எனப்படுவர். இவர்கள் பரமசிவனிடத்தில் வேதாகமங்களை உணர்ந்தார்கள். இவர்கள் ஐந்து

பேரும் தம்முடைய புத்திரர்களைக்கொண்டு ஆறுவகைச் சைவ சமயத்தை வளர்த்துக் காப்பதற்காக நிறுவனங்களை ஏற்படுத்தினார்கள்.

இவர்களின் வமிசங்களில் தோன்றியவர்கள் இருபிறப்பாளருட் சிறந்த ஆதி சைவர்கள். இவர்கள் உலகத்தின் நன்மைக்காகப் பரார்த்த லிங்கபூசை செய்பவர்கள். கௌசிகன் முதலிய பதின்மரே உலகத்திற் சிறப்பிக்கப் பெற்றவர்கள். சிவோற்பவராகிய இந்த ஆதி சைவர்கள் பிரம்மனால் படைக்கப் படாதவர்கள். ஆதி சைவர்கள் இவ்வறுவகைச் சைவங்களிலும் குருக்கள் என்று சிறந்த அந்தணர்களாகச் சிறப்பித்துச் சொல்லப்படுவார்கள். சிவபெருமானால் படைக்கப்பட்ட ஆதி சைவர்கள் சிவத்துவிசர் என்று கூறப்படுவர்; இவர்கள் வேதம் ஆகமம் புராணம் ஆகிய எல்லாவற்றிலும் அதிகாரமுடையவர்கள்.

எல்லாத் தேவதைகளையும் தாபனம் செய்வதிலும் சிவாலயங்களிலே தாபிக்கப்பட்ட கணபதி, கந்தன், கௌரி, வைரவன், சிவன் என்னும் இவர்களைப் பூசை செய்தற் கண்ணும் சிவோற்பவர்களாகிய ஆதி சைவர்களே நியமிக்கப்பட்டார்கள். கணேச பூசை செய்தற்கு யாவரும் அதிகாரிகள்.

சைவாகம முறையாலும் வைணவாகம முறையாலும் பீசாகம முறையாலும் காணேசாகம முறையாலும் சைவர்களும் வைணவர்களும் சுமார்த்தர்களும் கணராசரைப் பூசிக்கலாம்.

28. சந்திரசேகர சிவாசாரியருக்கருள் புரிந்தமை

கணேச பூசையும் சிவபூசையுமுடைய சிவதாச சிவாசாரியன் ஆன்மார்த்தமாகத் திருநாரையூர்க் கணபதியை முறைப்படி பூசித்து வந்தான்; வீட்டில் பக்குவம் செய்த அன்னத்தைக் கணேசர் கோயிலுக்குக் கொண்டுவந்து விநாயகப் பெருமானை அன்போடு பூசித்து நிவேதனம் செய்து கொண்டு வீட்டுக்குச் செல்வான்; சிவசாரியன் தனக்குரிய பாகத்திற்குப் பாதி மாதம் திருநாரையூர்க் கோயிலிலும் மற்றப் பாதி மாதம் அநந்தேசுரக் கோயிலிலும் பாரார்த்த பூசை செய்துவந்தான்.

அவன் தன்னுடைய குமாரனுக்கு ஐந்தாம் வயதிலே விரதபந்தம் செய்து வைத்தான். வைகாசிப் பௌர்ணிமை நன்னாளில் விநாயகப் பெருமானைப் பூசித்து வருமாறு தன் மகன் சந்திரசேகரனை அனுப்பிவைத்துத் தான் மகிழ்ச்சியோடு அநந்தேச்சுரத்திற்குப் போனான்.

சந்திரசேகரன் பூசைக்கு வேண்டிய பொருள்களுடன் ஆலயத்துக்குச் சென்று விநாயகரை வழிபட்டுச் சிறந்த அன்னத்தையும் மோதகங்களையும் விநாயகர் முன்வைத்துத் திருவமுது செய்தருள வேண்டினான். மௌனமாக இருக்கும் பெருமானிடம் 'இன்று முதல் தினந்தோறும் பூசை செய்து வரும்படி என் தந்தை கட்டளையிட்டார். தேவரீர் உண்ணாவிடில் நான் சரியாகப் பூசை செய்யவில்லை என்று என் தந்தை என்னை அடிப்பார். ஆதலால் என்மீது கருணைகொண்டு நிவேதனத்தை உண்ண வேண்டும்' என்று அழுது வேண்டினான்.

பிள்ளையின் அன்பான வேண்டுகோளை ஏற்றுக் கருணைக் கடலாகிய கணேசப் பெருமான் நிவேதனத்தைத் திருவமுது செய்தார். வீடு சென்ற சிறுவனிடம் தாய் 'நைவேத்தியம் எங்கே?' என்று கேட்கக் 'கணபதி திருவமுது செய்தார்' என்று மகிழ்ச்சியுடன் சொன்னான். மகனிடம் அன்புமிக்க தாய் குழந்தை உண்டுவிட்டான் என்று கருதினாள்.

ஒரு கிருட்டின பக்க சதுர்த்தசியில் சிவதாசன் மகனிடம் 'இன்று இரவு நீயே சென்று பூசை செய்துவா' எனச் சொல்லி

ஆலயத்திற்கு அனுப்பிவைத்தான். சிறுவன் அன்றும் முறைப் படிப் பூசை செய்து நிவேதனத்தை விநாயகருக்கு அளித்துத் திருவமுது செய்வித்து வெறும் பாத்திரத்துடன் வீடு போந்தான்.

சிவதாசன் சிறுவனிடம் நைவேத்தியம் எங்கே என்று கேட்டான். பிள்ளையார் திருவமுது செய்தார் எனச் சொன்னான். அப்போது அவன் தாய் நாள்தோறும் இப்படியே வெறும் பாத்திரத்துடன் வருவதாகக் கூறி நைவேத்தியத்தை விநாயகப் பெருமான் திருவமுது செய்ததாக அவன் சொல்வதையும் அதன் காரணம் தனக்குத் தெரியவில்லை என்றும் கூறினாள்.

சிவதாசன் அன்றிரவு சந்திரன் உதிக்கும் நேரத்தில் நைவேத்தியமும் பூசைப் பொருளும் எடுத்துக்கொண்டு சந்திரசேகரனையும் அழைத்துக்கொண்டு ஆலயம் சென்றான். 'நான் சிவன் கோவிலுக்குச் சென்று வருகின்றேன். நீ வழக்கம் போல் பூசை செய்வாயாக' என்று அச்சிறுவனிடம் சொல்லி வெளியே வந்து விநாயகப் பெருமான் கருவறைக்குப் பக்கம் உள்ள கோமுகை வழியாக உள்ளே என்ன நடைபெறுகிறது என்று பார்த்திருந்தான்.

அன்றும் சந்திரசேகரன் என்னும் அச்சிறுவன் முறைப்படி பூசை செய்து நைவேத்தியத்தை வழக்கம்போல் திருவமுது செய்ய வேண்டினான். பெருமானும் அவ்வாறே திருவமுது செய்தார். இந்நிகழ்ச்சிகளைக் கண்ட சிவதாசன். 'ஐயனே, உம்மால் இவை திருவமுது செய்யப் பெறுமானால் மனிதர் களாகிய நாங்கள் உணவுக்கு என்ன செய்வோம்' என்று விண்ணப்பித்தான். 'உன் புத்திரன் கொண்ட பத்தி காரண மாக நம்மை வேண்டினான். அவன் பிரார்த்தனைப்படி உண்டோம்' என்று அசரீரி உண்டாயிற்று. அதுகேட்டுச் சிவதாசன் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டு செய்வதறியாது நின்றான்.

அப்போது விநாயகப் பெருமான் வெளிப்பட்டருளினார். சிவதாசன் விநாயகரைக் கண்டு மூர்ச்சையுற்று வீழ்ந்தான். சந்திரசேகரன் கருணைக்கு இருப்பிடமாகிய கணேசப் பெரு

மானைக் கண்டு வணங்கினான். அப்பெருமானருளாற் கிடைத்த ஞானத்தால் அவரைத் துதிக்கத் தொடங்கினான்.

" குணங்களைக் கடந்தோனும் முதன்மையானவனும் அறிவின்ப வடிவினனும் உயிர்களின் அறிவை விளக்குவோனும் அனைத்திலும் நிறைந்தோனும் ஞானத்தால் அறியப்படுவோனும் முனிவரால் தியானித்தற்குரியோனும் ஆகாச வடிவினனும் மேலான இறைவனும் பரப்பிரம்ம வடிவினனுமாகிய கணேசப் பெருமானை வணங்குகின்றேன்.

விசாலமாய் விளங்குகின்ற சூரிய மண்டலத்திலுள்ள மக்கள் இருளின் துன்பத்தை அடைய மாட்டார்கள். அது போல மனிதன் தன் மனத்தை உன்னுடைய திருவடித் துணையில் வைப்பானேயானால் இடையூற்றின் கூட்டத்தினால் துன்பத்தை அடைய மாட்டான்.

உலகத்தைத் தாங்குபவனே, நான் அறியாமைச் சேர்க்கையால் பல ஆண்டுகளாக உன்னுடைய திருவடியை அடையாமல் எப்பொழுதும் சுழன்றேன். உன்னுடைய அருளால் இப்பொழுது அடைந்தவனானேன். அடைக்கலம் புக்க என்னை எஞ்ஞான்றும் காத்தருள்க."

இவ்வாறு துதித்த சிறுவனைப் பார்த்து, 'பத்தர்களுட் சிறந்த சந்திரசேகரனே, நீ துதித்த வண்ணம் எவன் நம்மைத் துதிக்கின்றானோ அவன் புத்திரப் பேற்றையும் செல்வங்களையும் அடைந்து விரும்பியபடி வாழ்வான். முடிவில் பரப்பிரம்ம வடிவம் பெறுவான். நீ எமது திருவடிகளில் ஆழ்ந்த உள்ளமுடையவனாதலால் 'நம்பி' என்னும் திருப்பெயரை உனக்களித்தோம். அன்பனே, வைகாசிப் பௌர்ணிமையிலே உனக்குத் தரிசனம் தரப்பட்டது. அந்நாள் இந்நாள் ஆகும். நீ விரும்பிய வரம் பெற்றுக்கொள்' என்று விநாயகப் பெருமான் கூறினார்.

அதனைக் கேட்ட சந்திரசேகரன், பெருமானின் திருவடியில் ஆழ்ந்த மனத்துடன் கூடிய பத்திநிலையன்றி வேறொன்றும் விரும்பாது அப்பெருமானையே நினைந்து மகிழ்ச்சியுடன் நின்றான். அவனுடைய ஆழ்ந்த பத்தியைக் கண்ட கணேசப் பெருமான் அவனுக்குத் தேகவன்மை, அழகு, வித்தை, பத்தி,

செல்வம் ஆகியவற்றை அருளினுர். அவரின் ஆணைப்படி சைவம், காணபதம் என்னும் சமயங்களை நிலைபெறச் செய்ய வேண்டும் எனவும் பூவுலக இன்பங்களை நுகர்ந்து வீடுபேறு அடைய வேண்டும் எனவும் வரமளித்தார். தம் திருக்கரத்தை அவன் தலைமீது வைத்துத் தீக்கை செய்தருளினுர். அப் பொழுது சிவதாசன் குழந்தையையும் விநாயகப் பெருமானை யும் உபதேசக் கோலத்தில் ஆவலுடன் தரிசித்தான்.

சிவதாசன் தன் மைந்தனைக் கட்டித் தழுவி, 'என் காதல் மைந்தனே, யானும் என் வமிசத்தில் பிறந்தோரும் உன்னுல் பிறவிக் கடலைத் தாண்டியவர்களானுேம்' என்று மகிழ்ந்து மனைவியிடம் சென்று நடந்தவற்றைக் கூற இருவரும் மகிழ்ந் திருந்தார்கள்.

சந்திரசேகரன் அன்று முதல் விநாயகப் பூசை செய்யாது உண்பதில்லை. அவன் இராசேந்திர பட்டணம் அடைந்து சோழ மன்னனுல் உபசரிக்கப்பட்டு ஒப்பில்லாத சைவ வித்தை களை விளக்கம் செய்தான். நம்பியின் புகழ் உலகெங்கும் பரவியது. அந்நாள் தொடங்கித் திருநாரையூர்ப் பிள்ளையார் துவிசப்பிரிய கணேசர் என்று கூறப் பெற்ருர். வைகாசி மாதப் பௌர்ணிமையும் அதுமுதல் துவிசப்பிரியப் பௌர்ணிமை என்று கூறப்பட்டது. கிருட்டினபக்க சதுர்த்தி யும் துவிசப்பிரிய சதுர்த்தி எனக் கூறப்பட்டது.

29. நம்பியாண்டார் நம்பிக்கு அருள்புரிந்தமை

சந்திரசேகரனாகிய ஒரு நம்பிக்குப் பேரன் மகனாகிய அநந்தேசன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் தனது குலதெய்வமாகிய கணேசப் பெருமானை உறுதியான அன்போடு பூசை செய்து வந்தான். அவன் வைகாசிப் பௌர்ணிமையிலிருந்து சதுர்த்திவரை ஐந்து நாட்களிலும் நம்பியாண்டாராகிய விநாயகருக்குச் சிறப்பான வழிபாடுகளை முறைப்படிச் செய்தான்.

நம்பியாண்டார் அருளினால் அடுத்த வைகாசிப் பௌர்ணிமையில் ஓர் அருட்புத்திரன் பிறந்தான். அநந்தேசக் குருக்கள் பேரொளிப் பிழம்பாகிய அக்குழந்தையைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்து அந்தணர்களுக்குப் பலவகையான பொருள்களைத் தானம் செய்தான்; நம்பியாண்டார் நம்பி என்று பெயரிட்டுக் கண்ணுங் கருத்துமாக வளர்த்தான்.

நம்பியாண்டார் நம்பியாகிய சிறுவன் சில தோழர்களுடன் கூடி விநாயகர் பூசையிற் பற்றுக்கொண்டு கோயிலை அடைந்து அறுகங் கொழுந்துகளால் இறைவனைப் பூசித்தான். தூப தீபங்களையும் நைவேத்தியங்களையும் பாவனையால் அமைத்துக்கொண்டு பூசை செய்தான். மண் உருண்டைகள் மோதகங்களாகவும் இலட்டுகளாகவும் ஆயின. சேறு சந்தனமாயிற்று. காய்ந்த சருகுமாலை பூமாலையாயிற்று. இவற்றை உள்ளன்புடன் உண்மைப் பொருளாகக்கொண்டு மெய்ப் பொருளாகிய விநாயகப் பெருமானுக்குப் படைத்தான். தன்னை மறந்து ஆனந்தக் கூத்தாடினான். நைவேத்தியங்களைத் திருவமுது செய்யுமாறு வேண்டி அழுதான். விநாயகர் மனம் இரங்கினார். அவர் அருளால் அங்கு வைக்கப்பட்ட பாவனைப் பொருள்கள் அனைத்தும் அச்சிறுவன் நினைத்த வண்ணம் அவை அவை அவ்வாறே ஆயின. சிறுவன் வேண்டுகோளின்படி விநாயகர் அவற்றை அன்புடன் திருவமுது செய்தார். கண்ட சிறுவன் மனமகிழ்ச்சியுடன் மற்றச் சிறுவர்களுடன் கூடி இல்லம் சென்றான்.

இவ்வண்ணமாகச் சிறுவன் நாள்தோறும் விநாயகப் பூசை செய்துவந்தான். சிறுவனின் தாய் கலியாணி அச்

சிறுவனேயும் அழைத்துக்கொண்டு தன் தாய் வீடு சென்ருள். சிறுவனின் பாட்டி வீடு சிறகிழந்த நல்லூரில் இருந்தது. பகல் உணவுகொள்ளும் நேரம் வந்தவுடன் சிறுவன் விநாயக பூசை செய்யும் வழக்கத்தை நினேந்து பொல்லாப் பிள்ளேயாரது சந்நிதியை அடைய விரும்பி வீட்டைவிட்டுப் புறப்பட்டான். வழி தெரியாமல் அலேந்து அழுது விநாயகரை வழிகாட்ட வேண்டினன். உடனே விநாயகர் சந்நிதியை அடைந்து வழக்கம்போல் வழிபாடு செய்து மகிழ்ந்தான். பின்னர், தாயிடம் செல்ல வேண்டும் என விநாயகப் பெருமானே வேண்டினன். உடனே தாயிருக்கும் இடம் சேர்ந்தான். பாட்டன் வீட்டிலிருந்த காலமுழுதும் இவ்வாறே அச்சிறுவன் வழிபாடு செய்துவந்தான்.

நம்பியாண்டார் நம்பியாகிய அச்சிறுவனேப் பெற்ருேர்கள் கல்வி பயிலுவதற்கு நல்லாசிரியனிடம் அனுப்பிவைத்தார்கள். சிறுவன் ஆசிரியனுக்குத் தெரியாமல் ஆலயம் சென்று கணநாதரை வழிபட்டு வந்தான். பொல்லாப் பிள்ளேயார் அருளால் பதினெட்டு மகாவித்தைகளிலும் அறுபத்துநான்கு கலேஞானங்களிலும் சிறுவன் தேர்ச்சி பெற்ருன். அவன் விநாயக பூசை முடித்துப் பள்ளிக்கூடம் சென்றபோது, அவன் எங்கோ சென்று விளேயாடி வருவதாக நினேத்த ஆசிரியன் பிரம்பினுல் கடுமையாக அடித்து இனி எங்கும் செல்லக்கூடாது என்று கட்டளேயிட்டார். சிறுவன் தான் கணேசர் ஆலயம் சென்று வழிபட்டு வருவதாகவும் வித்தைகளில் ஆசிரியர் தன்னேப் பரீட்சை செய்யலாம் என்றும் பணிவுடன் கூறினன்.

சிறுவனேப் பல முறையில் தேர்வு செய்த ஆசிரியன் அவன் புலமையைக் கண்டு மகிழ்ந்து சிறுவன் தந்தையிடம் சென்று நம்பியாண்டார் நம்பி எல்லாக் கலேகளிலும் வல்லவனுக ஆகிவிட்டான். சுருங்கிய காலத்தில் எல்லா வித்தையையும் கற்பித்த எனக்குக் குரு காணிக்கை தரவேண்டும் என்று கேட்டான். எல்லாக் கலேகளிலும் தன் மகன் சிறந்திருத்தலே அறிந்த தந்தை குருவுக்கு வேண்டிய பொருளேக் கொடுத்தான்.

பின்பு அநந்தேச சிவாசாரியன் தன்மகனுக்குச் சிவதீக்கை செய்து விநாயக பூசைசெய்து வருமாறு அனுப்பினன். அவனும் இறைவழிபாடு செய்து நைவேத்தியத்தை இறைவன் முன்வைத்துத் திருவமுது செய்யும்படிப் பன்முறை வேண்

டினுன் பெருமான் அவன் வேண்டியதற் கிணங்கத் திருவமுது செய்தார். அச்சிறுவன் வெறும் பாத்திரத்துடன் சென்ற போது நைவேத்தியம் எங்கே என்று பெற்ருேர் கேட்டனர். உடனே அச்சிறுவன் தேவரால் திருவமுது செய்யப்பட்டது என்று கூறினுன். அதுகேட்ட தாய் வியப்படைந்தாள். அது கண்ட அநந்தேசன் ' விநாயகர் எங்கள் குலதெய்வம். என் பாட்டனுரிடமும் கணேசப் பெருமான் திருவமுது செய்ததாக நான் கேட்டிருக்கிறேன். இச் சிறுவன் வேண்டியபடியே பொல்லாப் பிள்ளையாரும் திருவமுது செய்திருப்பார். எனினும், நான் உடன்சென்று ஐயந்தீரப் பார்த்துவருவேன்' என்று மனைவியிடம் சொன்னுன்.

அடுத்த நாள் சித்திரைப் பௌர்ணமி. அன்று சிறுவனிடம் வழிபாட்டிற்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தனுப்பிவிட்டுப் பின் தன் மனைவியுடன் ஆலயம் சென்ருன். வழிபாடு செய்வதற்காக அந்நன்னுளில் அந்தணர்களும் வந்திருந்தனர். நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாரைப் பூசனைசெய்து, 'இரட்டை மணிமாலை' என்னும் நூல் பாடி நைவேத்தியங்களை விநாயகர் திருமுன் வைத்துத் திருவமுது செய்யுமாறு வேண்டினுன். பொல்லாப் பிள்ளையார் அவற்றைத் திருவமுது செய்தார். சிறுவனின் அன்பு காரணமாக நிகழ்ந்ததைக் கண்ட அனைவரும் வியப்படைந்தனர்.

கணேசப் பெருமான் அங்குள்ளவர்களுக்குச் சிறுவனின் அன்பைப் பாராட்டி எடுத்துச் சொல்லி ' இவன் பத்தர்களுக்குள்ளே சிகாமணியாவான். இவன் அன்பினுல் நீங்கள் தரிசனம் பெற்றீர்கள். ஆண்டு தோறும் வரும் இந்த நன்னுளில் எம்மையும் இவனையும் பூசிப்பவர்களுக்கு நாம் எல்லாப் பேறுகளையும் அருளுவோம் ' என்று கூறிச் சிறுவனை அன்போடு தழுவி, ' குழந்தாய் நீ, பக்திமார்க்கத்துக்குக் குருவாக இருந்து அதனை நிலைபெறச் செய்வாய். உலகில் எல்லா இன்பங்களையும் குறைவறப் பெற்று வாழ்ந்து முடிவில் நமது பதவியை அடைவாய்' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

பின் நம்பியாண்டார் நம்பி பெற்ருேருடன் இல்லம் சென்று நாள் தோறும் தவருமல் இறைவழிபாடு செய்து வந்தான். சர்வசார நிர்ணயமென்னும் நூலைச் செய்தான். அவன் பெருமையறிந்து பல நாடுகளிலிருந்தும் அந்தணர் முதலியவர்கள் வந்து அவனையே குருவாகக் கொண்டு அவன்

உபதேசித்த பக்திநெறியில் திளைத்திருந்தார்கள். கணேசர் அருளால் நம்பியாண்டார் நம்பி அட்டமாசித்திகளையும் அடைந்து பக்திநெறியை நிலைநிறுத்தி அடிக்கடி மயூரேச யாத்திரை செய்து வந்தான்.

அக் காலத்திருந்த அபயகுலசேகரன் என்னும் சோழ மன்னன் நம்பியாண்டார் நம்பியின் பெருமை அறிந்து வியப் பெய்தித் தன்நாட்டிலுள்ள பெருமக்களுடன் விநாயகர் வழி பாட்டிற்குரிய பூசைப் பொருள்களும் சிறப்பான நைவேத் தியங்களும் எடுத்துக் கொண்டு திருநாரையூரை அடைந்தான்; நம்பியாண்டார் நம்பியைக் கண்டு வணங்கி 'இப்பொருள் களைக் கொண்டு பூசைசெய்து நைவேத்தியங்களை விநாய கருக்குப் படைக்கவேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். நம்பியும் இறைவழிபாடு செய்து நைவேத்தியங்களைத் திருவமுது செய்யுமாறு பொல்லாப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டான். பெருமான் அருள் உள்ளங்கொண்டு நைவேத் தியங்களை எடுத்துத் திருவமுது செய்தார். சோழவேந்தனும் மற்றும் உள்ளவர்களும் இந்த அற்புதச் செயலைக் கண்டு வியந்தார்கள்.

சோழ மன்னன் நம்பியை வணங்கி, மறைந்திருக்கும் தேவாரத்தையும் திருத்தொண்டர் வரலாற்றையும் பூமியில் விளங்கும்படிச் செய்தருளவேண்டினன். நம்பியும் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் துணைக்கொண்டு தில்லைக்கேகிக் கோயிலில் ஓர் அறையிலிருந்த தேவாரப் பதிகங்களை எடுத் துத் திருமுறைகளாகத் தொகுத்தான். திருத்தொண்டர் வரலாற்றுக் குறிப்புக்களைத் திரட்டித் 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்னும் நூலில் அமைத்தான். திருஞான சம்பந்தப் பிள்ளையைப் பற்றி 'ஆளுடைய பிள்ளையார் திருவந் தாதி' முதலிய ஆறு நூல்கள் பாடினன். அப்பர்மீது 'திருவேகாதச மாலை' என்னும் தமிழ் மாலை பாடினன். இங்ஙனம் தான் செய்த நூல்களைப் பதினோராந் திருமுறையிலே சேர்த்து அமைத்துத் தில்லைக் கூத்தனை வணங்கித் திருநாரை யூரை அடைந்தான்.

மகதநாட்டு மன்னனாகிய தருமசித்தன் என்னும் பெய ருடைய நந்த அரசனால் மிகவும் சிறப்புச் செய்யப்பெற்று பல மாணவர்கள் சூழ நூறு ஆண்டுகள் வாழ்ந்து முடிவில் முத்தியுலகை அடைந்தான்.

———

30. புதன் கதை கூறியமை

கௌட தேசத்தின் தலைநகரில் தூர்வன் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் தவமும் ஞானமும் நிறைந்தவன். தவறாத தெய்வ வழிபாடு உடையவன். அவன் சாகினி என்பாளை மணந்து வாழ்ந்துவரும் நாளில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குப் புதன் எனப் பெயரிட்டுக் கண்ணுங் கருத்துமாகத்தாயும் தந்தையும் வளர்த்துவந்தனர்; நாள்தோறும் ஆடை அணிகளால் அழகுசெய்து பார்த்துக் களித்தனர் ; கணமும் அக்குழந்தையைப் பிரிய மனம் இல்லாமல் அருகிலேயே இருந்தனர்.

கட்டிளங் காளையாக வளர்ந்து மன்மதனைப் போல விளங்கும் புதனுக்குச் சாவித்திரி என்னும் மங்கை நல்லாளை மணம்செய்து வைத்தனர் பெற்றோர். புதன் தன் மனைவிபால் விருப்பமின்றிப் பிற பெண்களை விரும்பித் திரிந்தான். பெற்றோர் கூறும் அறிவுரைகளையும் வெறுத்தான். தாசியிடம் கொண்ட மயக்கத்தால், தகாத செயல்களையும் செய்யத் துணிந்தான்.

தானே தன் நகைகளைப் பெற்றோர் காணும்படிக் கழற்றிப் பெட்டியில் வைத்தான். பிறகு களவாக அந்நகைகளை எடுத்துச் சென்று தாசியிடம் கொடுத்து அவளோடு உறவாடினான். பெற்றோர்களிடம் நகைகள் காணவில்லையே என்று சண்டையிட்டான். பெற்றோரையும் வீட்டையும் மறந்து தாசிவீடே கதி என்று கிடந்தான்.

புதனைக் காணாத பெற்றோர்கள் அவனை வீடுவீடாகத் தேடினார்கள். அவனைப் பிரிந்த தாய் பிரிவுத் துன்பம் தாளாமல் துடித்தாள் ; உணவும் உண்ணாமல் கிடந்தாள். பட்டினியும் பிரிவுத் துன்பமும் சேர்ந்து அவளை வாட்டின. 'என் மகனைக் கண்டாலன்றி நான் உயிர்வாழேன்' என்று கணவனிடம் முறையிட்டாள்.

தன் மகனைத் தேடித் தந்தையாகிய தூர்வன் சென்றான், பல இடங்களிலும் தேடிய பிறகு அவன் ஒரு வேசை வீட்டில் இருப்பதாக அறிந்து அவ்வீட்டிற்குச் சென்றான். குடித்துச் சிவந்த கண்களுடனும் கலங்கிய சித்தத்துடனும் இருக்கும்

தன்மகனைப் பார்த்து, 'அந்தணகுலத்தில் பிறந்த அதமனே, சந்திரனிடத்துக் களங்கம் தோன்றியதுபோல நீ என் குலத்தில் பிறந்தாய்? உன்னைக் காட்டிலும் கல்லும் முள்மரமும் நல்லனவாம். மூர்க்கனே நீ இருப்பதைவிட இறப்பதேமேல்' என்று கோபத்தோடு கண்டித்தான்.

தந்தையின் மொழியைக் கேட்டுக் கோபமுற்றுப் புதன் தந்தையின் முகத்திலே அடித்தான். 'என்னுடைய இன்ப வாழ்விற்கு நீ தான் இடையூறாக இருக்கிறாய்' என்று பலகாலும் அடித்துத்தன் தந்தை உயிரைப் போக்கினான். தூர்வன் உயிர் பிரியும்போது 'திருநாரையூரப்பனே' என்று அலறி இறந்தான். இறந்தவனைக் கட்டித் தூரத்தில் கொண்டுபோய் எறிந்து விட்டு மறுபடியும் குடித்து வேசையோடு கூடி ஆடினான்.

மறுநாட் காலையில் தன் வீட்டிற்குச் சென்ற புதனிடம் அவன் தாய் தந்தையைக் காணவில்லை என்றும் அவர் புதனைத் தான் தேடிச் சென்றார் என்றும் சொல்லிப் புலம்பினாள். தாயின் தூண்டுதலினால்தான் தந்தை தான் இருக்கும் இடம் வந்து தொந்தரவு கொடுத்தான் என்று கருதி அவளைக் காய்ந்த விறகால் தலையில் அடித்தான். அடிதாங்காமல் அத் தாய் அலறிச் செத்தாள். அவளையும் காலிலே கட்டி வெளியே இழுத்துப் போட்டான். சாதுக்களாகிய பெரியோர் சிலர் புதனின் தாய் தந்தையர்க்கு இறுதிக்கடன்களைச் செய்தனர். மாபாதகம் செய்த புதன் அந்தணனாதலின் அரசனும் தண்டியாதொழிந்தான்.

பின்பு ஒருநாள் அவன் வீட்டிற்கு வந்தபோது அப்பாதகனின் மனைவி சாவித்திரி, தன் கணவனைப் பார்த்து, 'ஐயனே, அந்தணர் குலத்தில் பிறந்த உங்களுக்கெல்லாம் கூடாவொழுக்கம் பொருந்துவதாகாது. அதனை விவேகத்தால் நீக்க வேண்டும். மறுமைக்கு இன்பம் தரும் செயல்களை இம்மையிலேயே செய்யவேண்டும். எதனால் மழைக் காலத்தில் இன்பம் கிடைக்குமோ அதனை மற்ற எட்டு மாதங்களில் செய்ய வேண்டும். நீர் பிராமணன் என்பதால் அரசன் உம்மைத் தண்டிக்காமல் பொறுத்துக்கொண்டுள்ளான். எல்லா வகை அழகும் நிறைந்த, உம் மனம்போல் நடக்கக்கூடிய நான் இருந்தும் நீர்வேசைபால் செல்வதைக் கண்டு ஊரார் என்னைக் கேலி பேசுகிறார்கள். உமக்கும் பழி வருகிறது. உமது விருப்பம்

போல் இரவும் பகலும் என்னோடு மகிழ்ச்சி அடையலாம். தாசி வீட்டுக்குச் செல்ல வேண்டாம். அறிஞனவன் அறியாமை யாலோ மயக்கத்தாலோ தவறு செய்வானுயின் தெளிந்த வுடன் திருத்திக்கொள்வான். பாவத்தைச் செய்யும் ஆண் மகனுக்கு இம்மையும் இல்லை மறுமையும் இல்லை' என அன்புட னும் அழுதும் இரக்கம் உண்டாகும்படி வேண்டினுள்.

சாவித்திரி கூறிய நல்லுரைகள் அவன் காதில் பழுக்கக் காய்ச்சிய இரும்பு பாய்வதுபோலத் துன்பம் தந்தன. 'பொல்லாதவளே, என் விருப்பத்திற்கு மாருகப் பேசினுல் என் பெற்ருேர் அடைந்த கதியை நீயும் அடைவாய்' என்று அதட்டினுன். 'பெற்ருேரிடம் அன்புகாட்டிப் போற்றத் தெரியாதவன் தன்னையே நம்பியிருக்கும் மனைவியை எப்படிக் காப்பாற்றுவான். கற்புடைய பெண் கணவன் கையால் இறப் பாளாயின் இம்மையிலும் மறுமையிலும் அவளுக்குப் பெருமை யாகும்' என்று கூறிய மனைவியை விறகினுலும் கற்களாலும் முட்களாலும் முட்டிகளாலும் அடித்துத் தள்ளினுன். சாவித் திரி கணேசப் பெருமானை நினைந்து உயிர்விட்டாள். அப் பாதகன் அவளையும் காலிலே கட்டி இரவில் வெளியே இழுத் தெறிந்தான்; பின்பு தன் மனம்போல் காமக்களியாட்டத்தில் மூழ்கினுன். அவனுடைய அடாத செயல்களால் வெண்குட்ட நோயை அடைந்தான்.

வேசியும் நோயாளனுகிய அவனைவிட்டு மற்ெருரு செல்வ னுடன் சேர்ந்துகொண்டாள். ஊரில் உள்ளவரால் பழிக்கப் பட்டுக் குட்டநோயால் துன்பப்பட்டுப் பசி தாகங்களுடன் அலைந்தான். இறுதியில் திருநாரையூரை அடைந்து அங்கு நடக்கும் வழிபாட்டில் கலந்துகொண்ட அந்தணர்கள் உண்டு எறிந்த எச்சிலையில் உள்ள சோற்றை உண்டான். மூன்று மாதம் இவ்வாறு வாழ்ந்த புதன் இறந்துபோனுன். அவன் செய்த பாவங்களுக்கு ஏற்ப இமயன் அவனை நரகங்களில் தள்ளினுன். அங்கு ஒரு பிரளய காலம் இருந்து நரக வேதனை களை அனுபவித்து, ஒரு வைசிய குலத்திலே பிறந்தான். முற் பிறவிப் பயன் காரணமாக இப்பிறவியிலும் குட்டநோயாளன் ஆனுன். வைசியனுன அவன் தன் நோய் நீக்கத்தின்பொருட்டுப் பல தலங்களுக்கும் சென்று வழிபாடு செய்து வருகையில் புண்ணியவசத்தால் சிறகிழந்த நல்லூரை அடைந்தான்.

31. வைசியனுக்குக் குட்டநோய் நீக்கியமை

சிறகிழந்த நல்லூரை அடைந்த வைசியன் வழிநடந்த களைப்பால் ஓரந்தணன் வீட்டில் தங்கினுன். தங்கினவன் அவ் வீட்டில் உள்ள அந்தணனைப் பார்த்து இவ்வூர்ப் பெயர் யாது என்று கேட்டான். அந்தணன் சிறகிழந்த நல்லூர் என்று கூற, எதனுடைய சிறகு இவ்வூரில் இழக்கப்பெற்றது ? மூர்த்தி தலம் தீர்த்தங்களைக் கண்டு தொழுது ஆடிவருகின்ற எனக்கு அந்த விவரத்தைச் சொல்ல வேண்டும் என்று வைசியன் அந்தணனைக் கேட்டான்.

அந்தணன் விவரம் சொன்னுன். நாரை ஒன்று மார்க்கண்டேயர் முகமாகப் பகமுனிவரின் சிறப்பைக் கேட்டுணர்ந்து பகேசராகிய திருநாரையூர்ப் பெருமானை முறையாகப் பூசை செய்தது. நெடுங்காலம் வழிபாடு செய்தும் சிவபெருமான் மனம் மகிழ்ந்து காட்சி தரவில்லை; அதனுல் நாரை நாரதர் முனிவர் சொன்னவாறு கங்கை நீரால் அபிடேகம் செய்ய நியமம் பூண்டது. வைகறையிலே கங்கைக் கரையை அடைந்து அதில் விதிப்படி அன்போடு மூழ்கிக் கங்கைநீரைச் சிறகுகளிலும் கண்டத்திலும் எடுத்துக்கொண்டு வந்து திருநாரையூர்ப் பெருமானைத் திருமுழுக்காட்டி உறுதியான அன்போடு பூசித்து வந்தது.

சிவபெருமான் அந்த நாரையின் பத்தியைச் சோதிக்க விரும்பி அதன் சத்தியைக் கவர்ந்தார். பறப்பதற்கு வலிமை இல்லாத பறவை அரசாகிய நாரை கங்கை நீரைக்கொண்டு செல்ல வேண்டும் என்னும் ஊக்கத்தால் மிகவும் பெருமுயற்சி செய்து பறக்கத் தொடங்கிற்று. அப்போது அதன் சிறகுகளிரண்டும் அதன் உடம்பினின்றும் கழன்று கீழே விழுந்தன. நாரை பரமசிவனை நினைத்துக்கொண்டு பூமியில் வீழ்ந்து மூர்ச்சை அடைந்தது. மயக்கம் தெளிந்து தன்னைத் தூக்கி விடுமாறு இறைவனை வேண்டியது. இறைவன் நாரைக்கு முன்புபோல் உடல்பலத்தை அளித்தார். சிறகிழந்த நாரை கால்களால் தத்தித் தத்திச் சென்று திருநாரையூரை அடைந்து, 'எல்லா வுயிர்களுக்கும் தந்தையே, அன்புருவான ஐயனே, கங்கைநீரைக் கொண்டுவந்து திருமுழுக்காட்ட எனக்குச் சிறகுகளைத் தந்தருளுக. கங்கை நீரைக்கொண்டு வராவிடில் என் விரதம் பிழைபடும். பிழைபட்டால் நான் உயிர்வாழ மாட்டேன். நான் உம்மையே நினைத்து உமது சந்நிதியில் உயிர்விடப் போகிறேன்' என்று சொல்லி அந்நாரை வரங்கிடந்தது.

'பரமசிவன் கருணை மிகுந்து நாரைக்குச் சிறகுகளைத் தந்ததோடு இறைவியுடன் கூடிக் காட்சி தந்தார்; விரும்பிய வரங்கள் பலவும் தந்தார். நாரையின் சிறகுகள் விழுந்த

இந்தத் தலத்தைச் சிறகிழந்த நல்லூர் என உலகம் போற்று கிறது'. என அந்தணன் விளக்கமாக எடுத்துச் சொன்னான்.

இதுகேட்ட குட்டநோயாளியான வைசியன் திருநாரையூரை அடைந்து திருநாரையீசனையும் பொல்லாப் பிள்ளையாரையும் தீர்த்தத் திருமஞ்சனத்தால் அபிடேகம் செய்து வழிபட்டான். இவ்வண்ணம் அவன் அங்கேயுள்ள திருக்குளங்களில் நீராடி ஒரு மண்டலம் உணவின்றிப் பக்தியோடு பெருமானைப் பூசித்து வந்தான்.

ஒரு மண்டல முடிவில் வைசியனின் மூக்குத் துவாரத்திலிருந்து கரிய முகத்தையுடைய ஒரு குட்டை உருவம் பூமியில் விழுந்து மிகப் பெரிதாக வளர்ந்தது. அதைக் கண்டு அங்குள்ளோர் அஞ்சி ஓடினார்கள். வைசியன் அந்தப் புருடனை யார் என்று கேட்க, அவன் பாவபுருடன் என்றும் வைசியன் செய்த பாவங்காரணமாக நோயாக அவன் உடலில் இருந்ததாகவும் சொல்லி வைசியன் திருநாரையூர் திருக்குளங்களில் மூழ்கியமையால் பாவபுருடன் வைசியனை விட்டு நீங்குவதாகவும் கூறிச் சென்றான். பாவபுருடன் செல்லவே வைசியன் குட்டநோய் நீங்கி அழகிய திடமான உடலுடன் விளங்கினான்; திடபக்தியுடன் திருநாரையூர்ப் பெருமானை வழிபட்டான்.

திருநாரையூர்ப் பரமசிவன் கார்த்திகை மாதத்தில் வரும் அட்டமி திதியில் அவ்வைசியனுக்குக் காட்சி தந்து, 'அறிவிற் சிறந்த வைசியனே, இன்றுமுதல் உன்னைப் பிடித்திருந்த நோயும் பாவங்களும் நீங்கின. வளமான செல்வத்தைப்பெற்று இன்பமாக வாழ்ந்து முடிவில் கைலாயத்தை அடைவாயாக.

கிருட்டிணாட்டமியாகிய இன்று உனக்கு அருள் செய்தோம். இந்நாளில் இத்தலம் வந்து எம்மை உள்ளன்போடு பூசிப்பவரின் நோய்களும் பாவங்களும் நீங்கும். அவர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் அளிப்போம்' என்று திருவாய்மலர்ந்து இறைவன் மறைந்தருளினார்.

வைசியன் திடமான சிறப்புடைய உடம்புபெற்றுத் தனது நகரை அடைந்து மகிழ்ச்சியோடு அளவற்ற இன்பம் துய்த்து, இறைவன் அருளிய வண்ணம் கைலாயத்தை அடைந்தான்.

'முனிவர்களே, திருநாரையூர் ஈசன் புகழும் பொல்லாப் பிள்ளையார் சிறப்பும் இவ்வாறு உங்கட்கு எம்மால் கூறப்பட்டன. திருநாரையூர்ப் புராணம் படிப்பவர்கள் விரும்பிய நன்மைகள் அனைத்தும் பெற்று முத்தியையும் அடைவார்கள்' என்று முருகப் பெருமான் சொன்னார்.

'முனிவர்களே, இதுவரை சண்முகப் பெருமான் முனிவர்களுக்கு விளக்கிச் சொன்ன திருநாரையூரின் பலவிதமான பெருமைகள் உங்களுக்குக் கூறப்பெற்றன. பரமேசனின் இந்த இதிகாசத்தைக் கேட்ட மாத்திரத்தில் பாவங்கள் அழியும். அறிவும் அன்பும் பக்தியும் உள்ள மாணாக்கர்களுக்கே இதனைக் கூற வேண்டும்' என்று சூத முனிவர் கூறி முடித்தார்.

திருச்சிற்றம்பலம்.

இணைப்பு - 1

திருமுறை கண்ட புராணச் சுருக்கம்

காவிரி பாயும் சோழவள நாட்டில் உள்ள திருவாரூரில் தியாகராசப் பெருமானை வழிபட்டு, அபயகுலசேகரன் என்னும் சிறப்புப் பெயருடைய இராசராச சோழன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்து வந்தான். அந்நாளிலே அவனது அவைக் களத்திலே எழுந்தருளிவருஞ் சிவனடியார்கள்; திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரப் பதிகங்களுள் தமக்குத் தெரிந்த ஒவ்வொரு திருப்பதிகத்தையே ஓதிவந்தனர். ஓதக்கேட்டுக் கைகளிரண்டும் தலைமேற் குவிந்திடக் கண்களில் தாரை தாரையாக நீர் சொரிய மெய்ம்மயிர் சிலிர்ப்ப நெஞ்சம் நெக்குருக இறைவனை வழிபடும் இன்பநிலை அம்மன்னனுக்கு உளதாயிற்று. தேனினுமினிய தேவாரப் பதிகங்களின் திருவருள் நலத்தில் திளைத்த வேந்தன், மூவர் முதலிகள் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் எல்லாவற்றையும் தேடிக் கண்டு ஒரு சேரத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டான். தேவாரத் திருப்பதிகங்களை எங்குந் தேடியும் அவை முழுதுங் கிடைக்கவில்லை. அதனால் சோழ மன்னன் பெரிதும் வருந்தினான்.

திருநாரையூரிலே பொல்லாப் பிள்ளையார்க்குப் பூசனை புரியும் ஆதிசைவக் குடும்பத்தில் சைவ சமயம் வாழ ஒரு நற்புதல்வர் பிறந்தருளினார். அக்குழந்தை உரிய பருவத்தில் உபநயனம் செய்யப்பெற்று வேதம் ஆகமம் முதலிய கலைகளை ஓதிவரும் நாளில், ஒருநாள் தந்தையார் வேற்றூர்க்குச் செல்ல நேர்ந்தது. அன்று பொல்லாப் பிள்ளையார்க்குச் செய்ய வேண்டிய பூசையைத் தம் புதல்வரைச் செய்யும்படிச் சொல்லி விட்டு அவர் வெளியூர்க்குச் சென்றார். தந்தையார் சொல்லிய படி, பொல்லாப் பிள்ளையார்க்குப் பூசனைபுரிய அவ்விளைஞர் சென்றார். பிள்ளையார்க்குத் திருமஞ்சனம் முதலிய எல்லாம் செய்து, திருவமுதினைப் பிள்ளையார் திருமுன் வைத்து, 'எம்பெருமானே, திருவமுது செய்தருளல் வேண்டும்', என வேண்டி நின்றார். பிள்ளையார் திருவமுது செய்யவில்லை. நிவேதனம் என்பது தெய்வத்திற்குத் திருவமுது காட்டுதல் என்னும் பொருளில் வழங்கும் சொல்லாகும். நிவேதிக்கும் திருவமுதை இறைவனே உட்கொள்வான் என்பது அவ் விளைஞரின் எண்ணமாகும். அவ்வெண்ணத்தால் தூண்டப் பட்ட இளைஞர், 'அடியேன் ஏதேனும் தவறு செய்ததுண்டோ? அடியேன் நிவேதித்த திருவமுதினை உண்ணாதது ஏன்?' என்று சொல்லிக்கொண்டு தமது தலையைக் கல்லில் மோதத் தொடங்கினார். உடனே பொல்லாப் பிள்ளையார், 'நம்பி,

பொறு' என்று சொல்லித் தடுத்து, தம்முன் நிவேதிக்கப்பட்ட திருவமுது முழுவதையும் உட்கொண்டருளினர். அதுகண்ட இளைஞர் மனமகிழ்ந்து, 'எம்பெருமானே, இன்று மிகவும் நேரங் கடந்த நிலையில் அடியேன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றால் எங்கள் ஆசிரியர் அடிப்பார். ஆதலால் எல்லாக் கலை நூல்களையும் தேவரீரே அடியேனுக்கு ஓதுவித்தல் வேண்டும்' எனக் குறையிரந்து நின்றார். அவர் விரும்பிய வண்ணமே பிள்ளையாரும் அவ்விளைஞர்க்கு எல்லாக் கலைகளையும் ஓதுவித்தருளினர். இங்ஙனம் பொல்லாப் பிள்ளையாரால் ஆட்கொள்ளப் பெற்றமையால் அவ்விளைஞர் நம்பியாண்டார் நம்பி என அழைக்கப்பெற்றார். பிள்ளையார் திருவருளால் திருவிரட்டை மணிமாலை, என்னும் செந்தமிழ்ப் பனுவலைப் பாடி, தம்மையாட்கொண்ட பொல்லாப் பிள்ளையாரைப் போற்றிப் பரவினர்.

திருநாரையூரில் நிகழ்ந்த இத்திருவருட் செய்தி தமிழ் நாடெங்கும் பரவியது. இதனைக் கேட்டு வியந்த இராசராச மன்னன், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரை வழி படுதற்பொருட்டுப் பழவகைகள்,தேன், அவல், எள்ளுருண்டை முதலிய படைப்புப் பொருள்களை நிறையக்கொண்டு திருநாரையூரை யடைந்து நம்பியாண்டார் நம்பியை வணங்கினன். நம்பியும் மன்னன் விரும்பிய வண்ணம் அவன் கொணர்ந்த நிவேதனப் பொருள்களைப் பிள்ளையார் திருமுன்னர் வைத்த அளவில், அன்பாற் படைத்த அவையெல்லாவற்றையும் பிள்ளையார் திருவமுது செய்தருளினர். அதுகண்டு மகிழ்ந்த மன்னன், நம்பியாண்டார் நம்பியை வணங்கி, "வேதியனே, சமயகுரவர் மூவர் அருளிச் செய்த தேவாரத் திருமுறைகளும் திருத்தொண்டர் வரலாறும் இந்நிலவுலகத்தில் விளக்கம் பெறுதல் வேண்டும்" என வேண்டிக்கொண்டான். வேந்தனது வேண்டுகோளில் அமைந்த அன்பின் திறத்தை யுணர்ந்த நம்பியாண்டார் நம்பி, பொல்லாப் பிள்ளையாரை இறைஞ்சி நின்று, "எம்பெருமானே, தேவாரத் திருமுறைகள் இருக்கும் இடத்தையும் திருத்தொண்டர்களுடைய வரலாறுகளையும் அடியேனுக்கு அருளிச் செய்தல் வேண்டும்" என வேண்டிக்கொண்டார். அவரது வேண்டுகோளுக்கிசைந்த பொல்லாப் பிள்ளையார், 'தில்லையில் கூத்தப் பெருமான் திருநடஞ் செய்யும் பொன்னம்பலத்தின் அருகிலே தேவார ஆசிரியர்கள் மூவருடைய அழகிய கைகளின் அடையாளமுள்ள அறையினுள்ளே தேவாரத் திருமுறைகள் வைத்துப் பூட்டப்பெற்றுள்ளன' என்று கூறித் திருத்தொண்டர்களுடைய வரலாறுகளையும் திருவாய்மலர்ந்தருளினர்.

அருளுரையாகிய அதனைக் கேட்டு மகிழ்ந்த நம்பியாண்டார் நம்பியும் அபயகுலசேகரனும் தில்லையை அடைந்து

கூத்தப்பெருமானை வணங்கினார்கள். பின்பு சோழ மன்னன் தில்லைச் சிற்றம்பலத்திற்கு மேற்றிசையிலுள்ள அறையிலே தேவாரத் திருமுறைகள் இருத்தலைத் தில்லை வாழந்தணர்களிடம் தெரிவித்து அவ்வறையைத் திறக்கும்படி வேண்டினான். தேவார ஆசிரியர் மூவருடைய கைகளின் இலச்சினையுடன் பூட்டப்பட்டுள்ள அறையினை அம்மூவரும் வந்தாலன்றித் திறத்தல் இயலாது எனத் தில்லைவாழ் அந்தணர்கள் கூறினார்கள். உடனே சோழமன்னன், தில்லையம்பலவாணர்க்குச் சிறப்புடைய பூசனை செய்து தேவார ஆசிரியர் மூவர் திருவுருவங்களுக்கும் வழிபாடியற்றி அத்திருவங்களைத் திருவீதிக்கு எழுந்தருளச் செய்து திருப்பதிகங்கள் சேமித்து வைக்கப்பட்ட அறையின் முன்னர்க் கொண்டுவந்து நிறுத்தி, 'மூவரும் வந்தனர்; அறையைத் திறந்திடுமின்' எனப் பணித்தான். அரசனது ஆணையால் அறை திறக்கப்பட்டது. அவ்வறையினுள்ளே சென்று பார்த்தபொழுது தேவாரப் பதிகங்கள் எழுதப்பெற்ற ஏடுகள் கறையான் புற்றால் மூடப்பட்டுச் சிதைந்த நிலையில் இருந்தன. புற்று மண்ணால் மூடப்பட்டுள்ள அவ்வேடுகளின்மேல் எண்ணெயைச் சொரிந்து அவற்றைப் புறத்தே கொணர்ந்து எடுத்துப் பார்த்த அளவில், அவற்றுள் பெரும்பாலான ஏடுகள் பழுதுபட்டிருந்தன. மன்னன் அளவிலாத் துயரமுற்றான். அந்நிலையில், "தேவாரப் பதிகங்களிலே இக்காலத்திற்கு வேண்டுவனவற்றை மாத்திரம் வைத்துவிட்டு மற்றவைகளைச் செல்லரிக்கச் செய்தோம்", என்றதொரு அருள்வாக்கு அங்குள்ளார் அனைவரும் கேட்கத் தோன்றியது. அதனையுணர்ந்த வேந்தன் ஒருவாறு ஆறுதலடைந்து, செல்லரிக்காது எஞ்சியுள்ள திருப்பதிகங்களை மட்டும் சிதையாமல் எடுத்து முன்போலத் தொகுத்தருளும்படி நம்பியாண்டார் நம்பியை வேண்டிக்கொண்டான். நம்பியும் மன்னனது வேண்டுகோளுக்கிசைந்து, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருப்பதிகங்களை நான்கு, ஐந்து, ஆறு என மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருப்பதிகங்களை ஏழாந் திருமுறையென ஒன்றாகவும் வகுத்தருளினார்.

இவ்வாறு தேவாரத் திருப்பதிகங்களை ஏழு திருமுறைகளாக வகுத்த பின்பு, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டு நூல்களையும் எட்டாந் திருமுறையாகவும்; திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டும், அவருள்

கோவிலூர் ஆதீனம்
Acc. No: 623
Q 1:38

சேந்தனர் பாடிய திருப்பல்லாண்டாகிய பதிகம் ஒன்றும் ஆக இருபத்தொன்பது பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும்; திருமூல நாயனர் அருளிச் செய்த திருமந்திரப் பாடல்களைப் பத்தாந் திருமுறையாகவும்; திருவாலவாயுடையார் திருமுகப் பாசுரம் முதலிய பிரபந்தங்களைப் பதினெராந் திருமுறையாகவும் வகுத்தருளினர்.

இங்ஙனம் திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி, தமக்குப் பொல்லாப் பிள்ளையார் உபதேசித்தருளிய வண்ணம், திருத்தொண்டத் தொகையை முதனூலாகக்கொண்டு, தனியடியார் அறுபத்துமூவரும் திருக்கூட்டத்தாராகிய ஒன்பது தொகையடியார்களும் ஆகிய திருத்தொண்டர்களின் தொண்டுகளையும் அத்தொண்டுகளால் அவர்கள் பெற்ற பேறுகளையும் கட்டளைக் கலித்துறை யாப்பினுல் அந்தாதியாக அருளிச் செய்தார். பின்னர்த் திருஞானசம்பந்தப் பிள்ளையார் மீது திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திரு மும்மணிக் கோவை, திருவுலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறு பிரபந்தங்களையும் திருநாவுக்கரசு நாயனர் மீது திருவேகாதசமாலை யென்னும் பிரபந்தத்தையும் இயற்றி மன்னனது விருப்பிற்கிணங்கத் தாம் பாடிய இப்பிரபந்தங்களையும் பதினெராந் திருமுறையிலே சேர்த்தருளினர்.

தேவாரத் திருப்பதிகங்களுக்குரிய பண்முறையினைத் தெரிந்து இசையமைக்க எண்ணிய சோழ மன்னனும் நம்பியாண்டார் நம்பியும் தில்லைக்கு மேற்கேயுள்ளதும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்தருளியதுமாகிய திருவெருக்கத்தம் புலியூரையடைந்து, இறைவன் திருக்கோயிலை வலம் வந்து திருமுன் நின்று, 'எம்பெருமானே, தேவாரத் திருப்பதிகங்களுக்குரிய இன்னிசையினை எங்களுக்கு உணர்த்தியருளுதல் வேண்டும்' என இறைஞ்சிப் போற்றினர். அந்நிலையில், 'திருநீலகண்டப் பெரும்பாணர் மரபிலே பிறந்த பெண்ணொருத்திக்கு இசைத் திறனை யளித்துள்ளோம்' என்று ஓர் அருள்வாக்குத் தோன்றியது. அதுகேட்டு அப்பாடினியாரை அழைத்து வந்து கோயில் வாயிலில் நிறுத்தினர். அவ்வளவில், 'இவளைத் தில்லையம்பலத்திற்கு அழைத்துச் சென்று அங்குத் தேவாரத் திருப்பதிகங்கட்குப் பண்ணடைவு வகுக்கக் கடவீர்' என மீண்டும் ஓர் அருள்மொழி எழுந்தது. அதனைக் கேட்ட சோழ மன்னனும் நம்பியாண்டார் நம்பியும் அவ்வம்மையாரைத் தில்லையம்பல முன்றிலில் அழைத்து வந்து தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண் வகுக்கச் செய்தார்கள். அங்ஙனமே தேவாரப் பண்களுக்குரிய கட்டளைகள் வரையறுக்கப் பெற்றன. இறைவன் திருவருட்டுணைகொண்டு அம்மையார் வகுத்த இசை மரபே தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பொருந்திய தெய்வ இசையாகித் தென்னாட்டிற் சிறப்புற்று வளர்வதாயிற்று.

———

கோவிலூர்-630 307